# நமது செட்டிநாடு

மலர் 11 ✿ மணம் 03 ✿ ஸ்ரீ விசுவாவசு ஆண்டு ✿ ஆடி ✿ ஜூலை 2025 ✿ ரூ.25
Namadhu Chettinad ✿ Volume 11 ✿ Issue 03 ✿ July 2025 ✿ Rs.25




சேதுராமன் சாத்தப்பன்
பக். 36




அஸ்வின் பழனியப்பன் - பக். 08

## 12 ஆம் வகுப்பு



PL. கீர்த்தனா
**491 / 500**



M. சஹானா
**479 / 500**



C. விஷாலினி
**462 / 500**



M. முருகு சீனிவாசன்
**542 / 600**

விவரம் பக்.. 27


Institute of Technology
Chettinad Academy
of Research and Education
(Deemed to be University)
MANAMAI CAMPUS
From bridges to AI, Engineering makes it possible!
B.Tech (AI&DS)*
B.Tech (Cyber Security)*
B.Tech (CS & Medical Engg)*
B.Tech (IT)*
B.Tech (ECE)*
B.Tech(CSE)*
B.Tech*
4 years
SCAN TO REGISTER
ADMISSION OPEN 2025-26
MANAMAI CAMPUS
844 789 2022
manamaiadmissions.care.edu.in
Nallur - Manamai, ECR, Behind Great Lakes Institute of Management, Thirukalukundram taluk, Chennai - 603102.
*Subject to Approval

நமது
செட்டிநாடு

மலர் 11 மணம் 03 ஜூலை 2025
ஸ்ரீ விசுவாவசு ஆண்டு ஆடி மாதம்

ஆசிரியர்: ந.ஆவுடையப்பன்
ஆசிரியர் குழு:
புதுவயல் செல்லப்பன்
குழ.கதிரேசன்
ஆறாவயல் ஆர்எம்.சண்முகம்
முனைவர் எம்.எஸ்.ஸ்ரீலக்ஷ்மி
விசாலாட்சி சுப்பிரமணியம்
புதிய சந்தா, சந்தா புதுப்பித்தல்,
தட்டச்சு: முரு.மலர்விழி
வடிவமைப்பு: பி.தாமோதரன்
விளம்பரம் தொடர்புக்கு: 99622 43750
இணைய இதழ் முகவரி: www.namadhuchettinad.com
செய்திகள், கட்டுரைகள், கதைகள், கவிதைகள் மற்றும் கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

நமது செட்டிநாடு மாத இதழ்
ராணி சீதை அரங்கம், 3–வது தளம்,
603, அண்ணா சாலை, சென்னை - 600 006
தொலைபேசி: 044–42951888

கரு.மணிகண்டன், மக்கள் தொடர்பு அலுவலர்,
காரைக்குடி - 86818 28284

இதழ் சந்தா விவரம்
ஓராண்டு ரூ.300/ இரண்டாண்டு ரூ.500/
ஐந்தாண்டு ரூ.1250
Cheque/ NEFT/ Gpay
Chettinad Print Media P Ltd,
A/C No: 6412480441
Indian Bank, Thousand Lights Branch,
Chennai - 600 006. IFSC : IDIB000T020,
(OR)
Chettinad Print Media P Ltd.
A/C No:57500000199320
HDFC Bank, R.K.Salai Branch,
Chennai - 600 004, IFSC : HDFC0001097

கட்டுரைகளுக்கு படைப்பாளர்களே பொறுப்பு.
விளம்பரங்கள் விளம்பரதாரரின் பொறுப்பில் வெளியாகின்றன.

மின்னஞ்சல்
namadhuchettinad@gmail.com

வாட்ஸ்ஆப்: 9962243750



# நகரத்தாரின் மடங்களும் சத்திரங்களும்

திரைகடலோடி திரவியம் தேடிய நகரத்தார்கள் தங்கள் வருவாயில் ஒரு குறிப்பிட்ட பகுதியை தான தர்மங்களுக்காக 150 ஆண்டுகளுக்கு முன்னரே மனிதாபிமானத்தோடு செலவு செய்திருக்கிறார்கள். ஆன்மிகத்தில் நாட்டமும், சமூகப் பணியில் ஆர்வமும் கொண்ட நகரத்தார்கள் காசி முதல் ராமேஸ்வரம் வரை உள்ள ஆன்மிக திருத்தலங்களில் திருமடங்கள் கட்டி இறைவழிபாட்டிற்கு வரும் பக்தர்களுக்கு அன்னதானமும், தங்குவதற்கு வசதியும் ஏற்படுத்தி கொடுத்துள்ளார்கள். குறிப்பிட்ட ஊர் நகரத்தார்கள் சார்பாகவும், தனிநபர் சார்பாகவும், சங்கங்கள் சார்பாகவும், சிறியதும் பெரியதுமாக அந்த மடங்களும் சத்திரங்களும் அமைந்துள்ளன. அவை இன்று வரையும் பக்தர்களின் பயன்பாட்டிற்காக செயல்பட்டு வருகின்றன. அவற்றைப் பற்றிய கட்டுரை ஒன்றினை சமீபத்தில் வெளியான 'நகரத்தாரின் பண்பாட்டுப் பதிவுகள்' என்ற நூலில் முனைவர் நா.வள்ளி சொக்கலிங்கம் அவர்கள் பதிவு செய்துள்ளார்கள். அவற்றின் இன்றைய நிலை, பராமரிப்பு, வருமானம், ஆக்கிரமிப்பு போன்ற விரிவான புள்ளி விவரங்கள் கொண்ட முழுமையான ஆவணம் நம்மிடம் இல்லை. இவற்றை ஆவணப்படுத்தும் பணியை காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகம், ஐக்கிய நகரத்தார்கள் சங்கம் போன்ற அமைப்புகள் மேற்கொள்ளலாம். இப்பணியில் நல்ல அனுபவமுள்ள முனைவர் நா. வள்ளி சொக்கலிங்கம் அவர்களின் ஆலோசனையை வேண்டிப் பெறலாம். இன்றைய நவீன யுகத்தில் அந்த மடங்கள், சத்திரங்களின் நிலையை காணொளி காட்சிகளாக கூட படம்பிடித்து பராமரிக்க முடியும். அவை தோற்றுவிக்கப்பட்டதற்கான அடிப்படை நோக்கம், தற்போதைய செயல்பாடுகள் குறித்து கிடைக்கும் புள்ளி விவரங்களைக் கொண்டு அவற்றில் எந்தெந்த மடங்கள், சத்திரங்கள் நிதி வசதி குறைவாகவும் பராமரிப்பு இல்லாமலும் இருக்கின்றன என்பதைக் கண்டறிந்து அவற்றை புனரமைப்பு செய்வது தொடர்பாக கலந்து ஆலோசித்து முடிவு எடுக்கலாம். நல்ல காரியங்கள் ஆற்றுகின்ற அமைப்புகளுக்கு நன்கொடைகள் வழங்குவதற்கு நம்மவர்கள் தயக்கம் காட்டுவதில்லை. நம் ஐயாக்களால் தோற்றுவிக்கப்பட்ட மடங்களும் சத்திரங்களும் மீண்டும் பொலிவுடன் செயல்படவேண்டும் என்ற எண்ணம் எல்லா நகரத்தார்களின் மனதிலும் இருக்கும். இப் பணியை மேற்கொள்ள முறையான திட்டம் வகுத்து செயல்பட்டால், அவை அனைத்தும் புதுப்பொலிவு பெறுவதுடன், பல ஆயிரம் கோடி மதிப்புள்ள சொத்துக்களும் பாதுகாப்பாக இருப்பதற்கு உறுதுணையாக இருக்கும். ♦




திருச்சி ஸ்ரீ வளத்தி
சிட் பண்ட்ஸ் (பி) லிட்.
துவக்கம் 2005
வளத்திஸ்ரீ சிட் பண்ட்ஸ் (பி) லிட். ஸ்ரீ முத்துமீனா சிட் பண்ட்ஸ் (பி) லிட்.
பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை
எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு
ரூ. 1,00,000/- முதல் ரூ. 30,00,000/- வரை
அதிகபட்ச உச்சவரம்பு 30% முதல் 40%வரை
பல்லாண்டு கால நம்பிக்கை ! நாணயம் ! நேர்மையான அணுகுமுறை!
இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.

0431-2760064
0431-7968005
TRICHY SHREE VALATHI CHIT FUNDS (P) LTD.
VALATHI SHRI CHIT FUNDS (P) LTD.,
SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,
94439 86143

"ஸ்ரீ வளத்தி"
C - 145 - D, முதல் தளம், N.V.V. கேஸ்டில்
தில்லைநகர் 6-வது கிராஸ் - கிழக்கு
திருச்சிராப்பள்ளி - 620 018.
Cell : 94439 86143

"ஸ்ரீ வளத்தி"
9/1, (4/1), அருணோதயா அபார்ட்மெண்ட்
G-1, தரைத்தளம், லோகையா தெரு,
சாலிகிராமம், சென்னை - 600 093
Cell : 91235 71029

எண். 1, முதல் தளம்,
பழைய சொக்கநாதர்-
-கோவில் தெரு,
குமார் மெடிக்கல்ஸ் மாடியில்
மதுரை - 625 001.
Cell : 89034 90064

★ வாய்மையே வெல்லும் ★ tvcfpl@gmail.com www.valathichitfunds.com

## உள்ளே...

பார்த்தேன்... படித்தேன்... பகிர்கிறேன்
விழித்தேயிருக்கும் விதைகள் .................... 08

வாங்க... வாங்க... தாய்லாந்துக்கு வாங்க.... 10

நகரத்தார் திருப்பணிகள்............................ 12

திருமாலின் திவ்ய தேசங்கள் .................... 14

உங்களுடன் உரையாடுங்கள் .................... 16

நகரத்தாரின் பண்பாட்டு பதிவுகள்
நூல் வெளியீடு ........................................ 17

தொழில் தொடங்கலாம் வாங்க ................ 19

அமெரிக்காவில் கன்காட் சிவா முருகன்
கோவில் குடமுழுக்கு .............................. 22

இந்தியாவின் வளர்ச்சியில் இஸ்ரோவின் பங்கு.. 26

அட்டையை அலங்கரிக்கும் நல் முத்துக்கள் .. 27

நானிலம் போற்றும் நகரத்தார் வரலாறு ....... 28

இடம் கொடுப்பது ...................................... 32

ஏழிளந்தமிழ் - மூதுரை - உரை
செம்மல் வ.சுப.மாணிக்கனார் .................... 34

நல்ல தொழில் செய்யவும் நம் நாடு
உயர்ந்திடவும் நாளும் வழிகாட்டுங்கள்! .......... 36

திருமந்திரச் சுவை .................................... 38

இராம காவியம் .......................................... 39

நகரத்தார் சிகரத்தார் ................................ 40

பக்.. பக்.. பக்கும் ........................................ 42

கண்டவராயன்பட்டி முதியோர் நலவாழ்வு மையம்.. 45

Vees Star™
Diamonds & Jewelry

ஸ்ரீ அடைக்காத்தாள் பெரியகருப்பண்ண சாமி துணை

GIA
CERTIFIED
SOLITAIRE



CHENNAI: W-182, NORTH MAIN ROAD ANNA NAGAR WEST EXTN., TN-600 101.
SURAT: SURAT DIAMOND BOURSE DREAM CITY KHAJOD, GUJARAT - 395007.
www.vstardiamonds.com





CHENNAI - 044 4553 6003 1, 9383007477
MADURAI - 9884473330
KARAIKUDI - 9884803349

S. விஜயகுமார்  V. விசாலாட்சி
பள்ளத்தூர்



Innovative Homes & Developers Pvt. Ltd.
Creating Value & Lifestyles
SINCE 1999
25
YEARS OF EXCELLENCE
சொந்த நிலத்தில வீடா? உங்கள் கனவில்லத்தை கட்ட
Innovative Homes தயார். Joint venture-ஆ? இல்ல contract-வீடா?
We do both, Flat development & Individual house construction!
Book
your Flat Now!
K.K.Nagar
Chennai, S+5 floors.
Virugambakkam
Chennai, S+5 floors.
RERA NO: TN/29/Building/077/2023
98410 12145
www.innovativehomes.in
7/11,1-A, Bharathi Nagar 2nd Street,T.Nagar, Chennai - 17
இன்னோவேடிவ்
அண்ணாமலை


SRM
SMILE RADIATE MESMERISE
DENTAL CLINIC
Madurai
23 years
உலகத்தர
இம்ப்ளாண்ட் தொழில்நுட்ப
வசதி கொண்ட மிகச்சிறந்த
பல்மருத்துவமனை
மதுரையில் !
Dr.R.மெய்யப்பன்
M.D.S, F.ISOI
Endodontist & Implantologist
ஒரே நாளில்
இம்ப்ளாண்ட்!
All on 4 இம்ப்ளாண்ட் செட்
All on 6 இம்ப்ளாண்ட் செட்
Zygoma இம்ப்ளாண்ட் (எலும்புதேய்ந்தவர்களுக்கு)
இம்ப்ளாண்ட் support கழற்றிமாட்டும் பல்செட்
SRM Dental ஹாஸ்பிட்டலில்,
நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய
அதிநவீன பல் சிகிச்சை!
நன்மைகள்: நிலையான மற்றும் நிரந்தர தீர்வு | இயற்கையான தோற்றம் கொண்ட பற்கள் | உறுதியானது & வசதியானது.
நம்பிக்கையுடன் புன்னகைக்க தயாரா?
SRM DENTAL CLINIC
94432 52108
மதுரை
SRM Dental Clinic
Adjacent To Income Tax Office, B.B. Kulam, Madurai - 2.
Email : info@srmdentalclinic.com



மெய்யப்பன், சாலாட்சி, தெய்வானை, அஸ்வின் பழனியப்பன்

மாணவர்களிடம் எந்தச் சலனமும் இல்லை. அவர்களுக்குள் பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் அக்கரையின்றி தென்பட்டனர். தயாரிப்பில் இல்லாத பகுதியாக, இன்றைய ஊடகங்கள் எப்படியிருக்கிறது அதற்கு எப்படித் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றெல்லாம் புதுக் கவிதைகள், கதைகள் சொல்லித் திசைதிருப்ப முயற்சித்தேன். எந்தப் பலனும் இல்லை. சுமார் 25 நிமிடங்களில் எனது உரையை முடித்துக் கொண்டு வெளியே வந்தால், முதல்வர் "என்ன சார் அதற்குள் முடித்து விட்டீர்கள். நாங்கள் "பெருங்காய டப்பா" என்பதை உடனடியாகப் புரிந்து கொண்டு விட்டீர்களே" என்றார்.

முதல்வரின் பேச்சு என் காதுக்கு எட்டாத அளவிற்கு நான் பேசிய அரங்கில் குத்தாட்டப் பாட்டுக்கள் முழங்க, மாணவ மாணவிகளின் நடனம் அரங்கேறிக் கொண்டிருந்தது. சுமார் 600 மாணவர்கள் பயிலும் கல்லூரியில் 24 ஆசிரியர்கள் பணியிடங்கள். அதில் 4 மட்டுமே நிரப்பப் பெற்றிருக்கிறது. மீத இடங்களில் முந்தைய ஆண்டு கல்லூரி முடித்த பிள்ளைகளை ரூ.5000 / 6000-த்திற்கு பணியமர்த்தியிருக்கிறார்கள்.

மக்கள் வரிப்பணங்களில் கட்டிய கட்டிடங்கள் நிமிர்ந்திருக்கிறது. ஆய்வகங்கள் உரிய ஆட்களின்றி பூட்டிய நிலையில்... எண்ணற்ற எண்ணிக்கையில் நூல்கள் எண்ணிக்கை குறைந்து விடாமல் அலமாரிகளில் பத்திரமாக பார்த்துக் கொள்ளப்படுகிறது. கணினி ஆய்வகம் கவனிப்பாரின்றி இருக்கிறது. கலைமகள் கைப்பொருட்கள் விலையில்லா மாளிகையில் மீட்டவும் விரலின்றி இருக்கிறது.

## பார்த்தேன்... படித்தேன்... பகிர்கிறேன்

# விழித்தேயிருக்கும் விதைகள்

அரியக்குடி " ஸ்ரீ" - சபாரத்தினம்
(garudasaba@gmail.com)



ஒரு அரசுக் கலைக் கல்லூரி... மாணவர்களுக்கு இயல், இசை, நாடகம் குறித்த ஒரு உரை நிகழ்த்த வாருங்கள் என்றழைத்தார்கள். மாணவர்களுக்குப் பயன் தருமே என்று மிகுந்த பிரயாசையோடு என்னைத் தயார் செய்து கொண்டு கல்லூரியைச் சென்றடைந்தேன். மகிழ்வோடு என்னை வரவேற்ற முதல்வர், உடனடியாக விழா நடைபெறும் அரங்கிற்கு அழைத்துச் சென்றார்.

100 மாணவ மாணவிகள் பயிலும் ஊடகம் மற்றும் காட்சியியல் துறை. கூட்ட அரங்கில் 15 மாணவர்களும், ஒரு மாணவியும் மட்டுமே இருந்தார்கள். சம்பிரதாயமான வரவேற்பை முதல்வரும், தொடர்ந்து என்னைப் பற்றிய அறிமுகத்தை ஒரு பேராசிரியையும் நடத்தி அமர்ந்தார்கள். நான் பேசத் தொடங்கியதும், முதல்வரும் அந்தப் பேராசிரியரும் தங்களுக்கு வேறு பணிகள் இருப்பதாகக் கூறி நகர்ந்து விட்டார்கள்.

முதல் தலைமுறைப் பட்டதாரியாகக் கல்லூரியில் படிக்கின்ற நம் பிள்ளைகள் நம் கவலைகளைப் போக்கி விடுவார்கள் என்று வெள்ளந்தியாக வெளியே நிற்கிற பெற்றோர்களுக்கு, என்ன நியாயம் கற்பிக்கப் போகிறது, இந்தக் கல்வி முறை என்ற கவலையோடு உறைந்து போனேன்.

அரங்கத்தில் இருந்த ஒரு மாணவி என்னருகில் வந்தாள். "ஐயா நீங்க சொன்ன கதையும் கவிதையும் நல்லாயிருந்தது எந்த சானலில் வருகிறது" என்றாள். நியாயம் தானே. அவள் வசிக்கிற உலகத்தில் எங்கே கிடைக்கும் என்கிறாள். "இது புத்தகங்கள் வாசிப்பில் கிடைத்தது, நீ என்னென்ன வாசிக்கிறாய்" என்று கேட்டு விட்டேன். அவள் "படிக்கிற பழக்கமே எங்களுக்கில்லை" என ஒரு அதிர்வான பதிலைத் தந்தாள். "செய்தித் தாள்கள்" என்றேன். "அதுவும் இல்லை" என்றாள். "உங்கள் கல்லூரியில்

நூலகமிருக்கிறதே" என்றேன். "இருக்கிறது, நாங்கள் போவதில்லை" என்றாள். இன்றைய எதார்த்தம் இதுதான்.

ஒரு சாலை மாணாக்கர்களாகப் படித்த நண்பர்கள் ஆண்டுதோறும் சந்திக்கிற நிகழ்வு. சேலம் சென்றிருந்தேன். பயணத்தில் இளைப்பார எனது உறவினர் வீட்டில் ஓர் இரவு தங்கியிருந்தேன். அங்கு ஒரு பேரனும், ஒரு பேத்தியும். பள்ளியில் படிக்கின்ற பிள்ளைகள். வீட்டிற்குள் நான் நுழைந்ததும் "வாங்க ஐயா" என்றார்கள். தண்ணீர் குடிக்கக் கொடுத்தார்கள். இருவர் கையிலும் புத்தகங்கள் இருந்தது.

என்ன புத்தகம் என்றேன். "சாணக்கியா" என்றான் பேரன். கணிதப் புதிர் புத்தகம் வைத்திருந்தாள் பேத்தி. இதைப் பார்த்ததும் இளைப்பாறப் போன எனக்கு இதமாக இருந்தது. ஐயா பாட்டு கதையெல்லாம் சொல்லுவாங்கன்னு பெற்றோர்கள் கொஞ்சம் தீபம் ஏற்றி வைத்தார்கள். என்னைச் சுற்றி அவர்களும் உட்கார்ந்து கொண்டார்கள். இராமாயணத்தில் எப்போதோ எங்கள் அப்பத்தா சொன்னதைச் சொல்லத் தொடங்கினேன். ஒரு இரண்டு நிமிடம் போயிருக்கும், எனது கதை. பேரன் தன்னறைக்குள் சென்று ஒரு புத்தகத்தை எடுத்து வந்தான். நான் சொன்ன கதையின் பகுதியை "இந்தப் புத்தகத்தில் இருக்கிறது, பாருங்கள் ஐயா" என்றான். அப்படியே அச்சு அசலாக அந்தப் பகுதியைக் காட்டினான். தம்பி உனக்கு எப்படித் தெரியும் என்றேன். மறுபடியும் தனது அறைக்குள் போனான். இராமாயணம் அனைத்துப் பகுதிகளையும் கொண்ட புத்தகங்களை மேசையில் அடுக்கி விட்டான். திருக்குறள் படிக்காது, புத்தகத்தோடு நடுவராக இருந்து கொண்டு 1330 குறளையும் படித்த பிள்ளைகளைக் கேள்வி கேட்கிற நடுவர் போல, அடுத்த ஒரு பாத்திரத்தைச் சொன்னேன். அமைதியாக இருந்த பிள்ளை, "ஐயா, இரண்டாவது "வால்யூமில்" இன்ன பக்கத்திலிருக்கிறது என்று எடுத்துக் காட்டி விட்டான். அந்தக் கல்லூரியில் நடந்தது போல நமது கடையைக் கட்டிக் கொண்டு விடுவதே மரியாதை என்கிற முடிவுக்கு வந்து விட்டேன்.

பிள்ளை தனதறைக்கு மீண்டும் போனான். தன்னிடம் இருந்த புத்தகங்களை வரிசைப்படுத்தி, மூச்சு வாங்கக் கொண்டு வந்து அடுக்கி விட்டான். மெய் மறந்து போனேன். புத்தகங்களின் மொழி ஆங்கிலத்தில் இருந்தது. "இது மகாபாரதம். இது டிவைன் ஸ்டோரீஸ் ஆப் லார்டு சிவா. திருவிளையாடல் புராணம். இராமயணம் சீதா பார்வையில்" என சுமார் 300 புத்தகங்கள். இது போதாதென்று, "தி இந்து" நாளிதழில் வரும் Young World வார இதழ்கள், என் உயரத்திற்கு அழகாக அடுக்கி வைக்கப் பெற்றிருந்தது. பேரனுக்கு இருக்கும் நினைவாற்றல் வியக்கத்தக்கதாக இருக்கிறது.

சரி. பேரன் மட்டுமே பேசுகிறானே எனப் பேத்தி பக்கம் பார்வையைத் திருப்பினேன். அவள் அடி எடுத்துக் கொடுக்கும் அற்புத ஆச்சியாக இருந்தாள். "டே, ஐயாவிற்கு சன்ஸ் ஆப் இராவணா பற்றிச் சொல்" எனத் துணியில் கோலம் பின்னிக் கொண்டே பேசிக் கொண்டிருந்தாள்.

எல்லா வீட்டிலும் நம்மைப் பேச விடாது பேசிக் கொண்டிருக்குமே அந்தத் தொலைக்காட்சி, அது எங்கே என்று தேடினேன். செட்டியார் வீட்டு முறைப்படி ஒரு துணி கட்டி, பத்திரமான காட்சிப் பொருளாக இருந்தது. இவங்களுக்கு "ஸ்கிரீன் டைம்" உண்டா என்றேன். பெற்றோர்கள் அவர்களுக்கு அதில் நாட்டமில்லை என்றார்கள்.

பேரனுக்கு என்ன பிடிக்கும் என்றேன். ஒன்றே ஒன்று தான். சேலத்தில் புத்தகத் திருவிழா நடக்கும். அல்லது புத்தகக் கடைகளில் "ஆபர்" போடுவார்கள். ஒரு பக்கெட் நிறைய புத்தகங்கள் எடுத்துக் கொள்ளலாம் இவ்வளவு விலை என விளம்பரம் வரும். கடை திறப்பதற்கு முன் பேரன் முதலாளாக நின்று விடுவான். அடுத்து வரவிருக்கும் பிறந்த நாளுக்கு இப்போதே இந்தப் புத்தகங்களை வாங்கிக் கொடுத்து விடுங்கள் என்று அடம்பிடித்து விடுவான் என்றார்கள் பெற்றோர்கள்.

இந்த நவீன யுகத்தில், தேடித்தேடிப் படிக்கிற நான் பார்த்த பேரப் பிள்ளையை உங்களுக்கும் அறிமுகம் செய்விக்க விரும்புகிறேன். பிள்ளைகள் கல்லலில், பொதுமக்கள் பயன்பாட்டிற்குப் பாலம் அமைத்துக் கொடுத்த "ஆமு" வீட்டு இஞ்சினியர் பழனியப்ப செட்டியார் அவர்களின் பேரன் பேத்திகள். பெற்றோர்கள் மெய்யப்பன் சாலாட்சி. கல்லலில் உள்ள முருகப்பா மேனிலைப் பள்ளி, மருத்துவமனை என பல தருமங்களைச் செய்த குடும்பம். கல்லல் ஆ.முரு.சுப. மா.பழ.மெ. என்பது இவர்களது விலாசம். வயிரவன் கோயிலைச் சார்ந்தவர்கள்.

பேரன் அஸ்வின் பழனியப்பன் 5-ஆம் வகுப்பும், பேத்தி தெய்வானை 10-ஆம் வகுப்பும் படிக்கிறார்கள். தம்பி பெரியவனானதும் என்ன செய்யப் போகிறாய் என்று நமது அசட்டுக் கேள்வியைக் கேட்பதற்கு முன்னரே "inculcate reading habits beyond syllabus" என்பதை விதைக்க வேண்டுமென்கிறான் பிள்ளை.

வீட்டிற்குப் போகும் போது பிள்ளைக்கு ஏதும் வாங்காமல் போய்விட்டோமே என்கிற குற்ற உணர்வைச் சரிசெய்ய, சமீபத்தில் சொ.சொ.மீ. ஐயா எழுதி வெளிவந்த "ஒன்பது நகரத்தார் கோயில்கள்" புத்தகத்தை அனுப்பி வைத்தேன். மாலையில் பிள்ளையிடமிருந்து ஒரு செய்தி வந்தது. "ஐயா நல்ல புத்தகம் தந்தீர்கள். வாசித்து முடித்து விட்டேன்".

படிப்பவர்கள் குறைந்து விட்டார்கள். இனி புத்தகங்கள் அச்சிடுவது குறைந்து விடும். புத்தகங்கள் பதிப்பிடுவது டிஜிட்டல் உலகில் லாபகரமானதாக இல்லை என்பதெல்லாம் ஒரு பக்கம் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய எதார்த்தம்தான்.

ஆனால், டெல்டாப் பகுதிகளில் வசித்த நெல் ஜெயராமன் போல, இப்படி விதையோடு காத்திருக்கிற இளையவர்களை உற்சாகப்படுத்த, மேலும் பலர் பின்பற்றச் செய்ய நாமும் ஏதாவது செய்ய வேண்டும் தானே.

மனதுக்குள் ஒலித்தது, பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பெல்லாம், நவில்தொறும் நூல் நயம் போன்றதே.

# வாங்க... வாங்க... தாய்லாந்துக்கு வாங்க...



சோமலெ சோமசுந்தரம்

## 3 பாவ நகரமா? உல்லாச நகரமா?

தாய்லாந்து சுற்றுலாவில் கண்டிப்பாக பார்க்க வேண்டிய ஊர்கள் பட்டியலில் பாங்காக் நகரம் இருக்கும். அதைத்தவிர வேறு என்ன பார்க்கலாம் என்பது எவ்வளவு நாட்கள் தாய்லாந்தில் இருக்க விரும்புகிறோம், எப்படிப்பட்ட இடங்களைப் பார்க்க விரும்புகிறோம் என்பதைப் பொறுத்து உள்ளது. புக்கெட், காஞ்சனாபுரி, சியாங் மாய், பட்டாயா ஆகியவை குறிப்பிடத்தக்க சுற்றுலாப் பகுதிகள்.

செய்த பாவத்திற்கு விமோசனமாக வாரணாசி போன்ற புனிதத் தலங்களுக்கு செல்வதைக் கேள்விப்பட்டுள்ளோம். பாவம் செய்வதற்காக பயணம் செய்பவர்களும் உண்டு! பாங்காக் நகருக்கு தென் கிழக்கே 90 மைல் தொலைவில் உள்ள பட்டாயா நகரின் செல்லப் பெயர் 'பாவ நகரம்' (Sin City).



மீன் பிடிக்கும் தொழிலில் அமைதியாக இருந்த பட்டாயா கிராமத்தை 1960 – 70 களில் வியட்நாம் போரின் போது தாய்லாந்தில் இருந்த அமெரிக்கப் படையினர் தங்களின் கேளிக்கைக்காக உல்லாசப் பகுதியாகப் பயன்படுத்தத் தொடங்கியதன் விளைவே அந்த செல்லப் பெயரின் பின்னணி.

தாய்லாந்தில் விபச்சாரம் சட்டவிரோதமானது என்றாலும் இந்நகரில் அந்த சட்டம் கடைப்பிடிக்கப்படுவது, நம் ஊரில் "தலைக்கவசம் அணியாவிட்டால் அபராதம்" என்ற சட்டத்தைப் போன்றதாகும்!

பாங்காக்கிற்கு அடுத்தபடியாக அதிக சுற்றுலாப் பயணிகள் வரும் நகரம் பட்டாயா. இங்கு வரும் 280 இலட்சம் சுற்றுலாப் பயணிகளும் பாவம் செய்ய வருபவர்களா? இவர்களில் மிகப் பெரும்பாலோர் இங்கே வருவதற்குக் காரணம் இது ஒரு கேளிக்கை நகரம். அமெரிக்காவின் லாஸ் வேகஸ் நகரைப்



போன்று ஆடல், பாடல், நல்ல உணவு என உல்லாசமான நகரம் இது. மூன்று கிலோமீட்டர் தொலைவில் சுத்தமான, மென்மையான வெள்ளை கடற்கரை மணல், கடல் சார்ந்த விளையாட்டுக்கள், வாழைப்பழ படகில் மெய்சிலிர்க்கும் கடல் சவாரி என உங்களின் சுவைக்கேற்ப வித விதமாக பல்வேறு வகையில் உல்லாசம் தரும் நகரம் பட்டாயா.



இந்தோனேசியா நாட்டை விட பொதுவாக தாய்லாந்தில் இந்திய உணவகங்கள் நிறைய உள்ளன. இந்தியர்கள் நிறைய வருவதால் பட்டாயாவின் கடலோரக் கடைகளில் ஹிந்தி மற்றும் தமிழில் பெயர்ப் பலகைகள் உள்ளன. "மெட்ராஸ் தர்பார்" என்ற கடையில் தமிழில் 'இட்லி, தோசை' என்று எழுதித் தெருவிலேயே பலகை வைத்து அழைக்கின்றார்கள்!

### பொன் விழாக் காணும் திருநங்கையர் நடனம்

தென் கிழக்காசியாவின் மிகப் பெரிய திருநங்கையர் நடன நிகழ்ச்சிகள் பட்டாயாவில் கண்டுகளிக்க வேண்டியவற்றில் ஒன்றாகும். நூறுக்கும் மேற்பட்ட திருநங்கையர் வல்லுநர்கள் அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள 'பிராட்வே' நாடகக் கலைக்கு ஒப்பாக ஒளி, ஒலி, உடை, இசை, பாரம்பரிய மற்றும் சம காலத்திய நடனங்கள், சாகசங்கள் எனப் பன்முகப் பாங்கில் அவையோரைக் கவர்கின்றனர்.



நிகழ்ச்சி முடிந்தவுடன் கலைஞர்கள் அனைவரும் அரங்கத்திற்கு வெளியே வந்து விரும்புகின்ற பார்வையாளர்களுடன் புகைப்படம் எடுத்துக்கொண்டு நாம் கொடுக்கும் பணத்தை மகிழ்வோடு பெற்றுக் கொள்கின்றனர். இந்தியர்கள் நிறைய வருவதால் ஹிந்தி திரைப்படப் பாடல்களும் இந்த நிகழ்ச்சிகளில் இடம் பெறுகின்றன.

டிபனி (Tiffany), அல்கசர் (Alcazar) ஆகிய நிறுவனங்களின் நிகழ்ச்சிகள் பிரபலமானவை. இவற்றை 'காபரே' நடனம் என சிலர் குறிப்பிட்டாலும், இவை வெறும் கேளிக்கை நடனமாக இல்லாமல் கலை மற்றும் கலாச்சாரத்தை வெளிப்படுத்துகின்றன.

### உண்மையின் சரணாலயம் (Sanctuary of Truth)

பட்டாயாவில் அவசியம் பார்த்து மகிழவேண்டிய இடம் 'உண்மையின் சரணாலயம்'. கடலோரங்களில் கற்கோவில்கள், நினைவுச் சின்னங்கள், இயற்கைக் காட்சிகள் எனப் பலவற்றை பார்த்திருப்போருக்கும் இந்த சரணாலயம் மிகவும் வித்தியாசமான அனுபவமாக இருக்கும்.

இந்து மற்றும் புத்த மதங்களைத் தழுவி, 344 அடி உயரத்தில் கட்டப்பட்டுள்ள இந்த சரணாலயத்தின் தனிச் சிறப்பே இது முழுவதும் மரங்களைக் கொண்டே கட்டப்பட்டதாகும். ஒவ்வொரு பகுதியிலும் பல்வேறு தன்மையான மரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் சில மரங்கள் 600 வருடங்களுக்கு மேல் கடலோர சூழ்நிலையைத் தாக்குப்பிடிக்கக் கூடியவையாம்.

சரணாலயத்தின் பல்வேறு பகுதிகளை உன்னிப்பாகக் கண்டு மகிழும்போது இது அரண்மனையா? அருங்காட்சியகமா? ஆலயமா? கோட்டையா? என்ற கேள்விகள் எழுவதில் வியப்பில்லை.

விநாயகர், சிவன், விஷ்ணு, பிரம்மா, புத்தர் மற்றும் இராமாயணத்தில் வரும் காட்சிகள் உட்பட பல



நூற்றுக்கணக்கான கலைக் காட்சிகள் அனைத்தும் கையால் செதுக்கப்படும் மரக் கட்டிடக்கலையின் படைப்பாற்றல்கள். 1981 – இல் தொடங்கப்பட்ட இந்தப் பணி விரைவில் (39 வருடங்களுக்குப் பிறகு) முடியவிருக்கிறது. நம் அருகேயே



கலைஞர்கள் செதுக்கிக்கொண்டிருப்பதைப் பார்க்கும் போது 'இத்தனை பெரிய சரணாலயத்தை எப்படிக் கட்டினார்கள்?' என நம்மை நாமே கேட்க வைக்கின்ற அளவிற்கு பிரம்மிக்க வைக்கிறது.

வாழ்வின் உண்மைகள் என்ன என்பதை விளக்குவதே இந்த சரணாலயத்தின் நோக்கமென்பதை, மரத்தில் செதுக்கப்பட்ட கலைக்காட்சிகளுடனும், வண்ணமிகு ஓவியங்களுடனும் பகிர்ந்துள்ளனர். அந்த ஏழு உண்மைகள்:

1. நாம் யார்? எங்கிருந்து வருகிறோம்? (அனைவரும் ஒன்றே, நம்மை இணைப்பவை பூமி, நீர், காற்று, நெருப்பு).

2. நம் வாழ்வை எப்படி வாழ்கின்றோம்? (பிறப்பு, முதுமை, இன்ப துன்பங்கள்).

3. இறப்பு (அடுத்த பிறவிக்கு எதையும் எடுத்துச் செல்லவில்லை, இப்பிறவியில் விட்டுச்செல்வதோ மற்றவர்களுக்குச் செய்கின்ற நன்மைகளே).

4. நாகரிகத்தின் மாதிரிகள் (கிழக்கத்திய நாகரிகத்தின் தாக்கம் அதன் தத்துவங்கள் மற்றும் வாழ்க்கை கொள்கைகள் மூலம் வாழையடி வாழையாக பல தலைமுறைகளில் தெரிகிறது).

5. வாழ்வின் இலக்கம் (இலக்கத்தை நிர்ணயிப்பது எளிது ஆனால் அதற்கு முயற்சி தேவை).

6. சமுதாயம் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றது (நல்லதும், கெட்டதும் உள்ளது).

7. சமுதாயத்தின் தொடக்கம் (முன்னோர்களே நம்முடைய முதல் ஆசிரியரும், நண்பர்களும் ஆவர். குடும்பமே சமுதாயத்தின் தொடக்கம்).

சரணாலயத்தின் கலையழகையும், கடலோர இயற்கை அழகையும் ரசித்த எங்கள் உள்ளங்களில் 'இது தான் வாழ்வு' என்ற தத்துவ அலைகள் வீச, மன நிறைவோடு மீண்டும் ஒரு முறை, சற்று தொலைவில் இருந்து, அந்த உண்மை சரணாலயத்தைப் பார்த்தபடி விடை பெற்றோம்.

புன்னகை தொடரும்...





சென்ற இதழ் தொடர்ச்சி

# நகரத்தார் திருப்பணிகள்



சொ.சொ.மீ.சுந்தரம்

### 135) திருப்பெருந்துறை – (Pincode - 614 618): (தொடர்ச்சி)

ஒரு தவலையில் சோறு வடித்து, கைபடாமல் அதைப் பாத்திரத்தோடு கொண்டு வந்து அமுத மண்டபத்தில் உள்ள கருங்கல் மேடையில் அப்படியே கொட்டுவார்கள். அந்த ஆவி நிவேதனமாகும். இதனால் இறைவனுக்கு ஆவியுடையார் என்றும் பெயர் வந்து அது ஆவுடையார் ஆயிற்று. திருவாவடுதுறை ஆதீனத்தின் ஆட்சிக்கு உட்பட்ட இக்கோயில் 1700 ஆண்டுகளுக்கு முன்னால் மணிவாசகரால் கட்டப் பெற்றது. அதன்பின் பாண்டிய மன்னர்கள், நாயக்க மன்னர்கள் ஆகியோரால் விரிவுபடுத்தப்பட்டது. இக்கோயிலில் நேமத்தான்பட்டி மு.பெ. குடும்பத்தார் யோகாம்பிகை கோயில் திருப்பணியும், குருந்த மூலத் திருப்பணியும் செய்து, கர ஆண்டு, வைகாசி மாதம், முதல் நாள் (13.05.1891) திருக்குட நான்னீராட்டுச் செய்தனர். இத்திருப்பணிச் செலவு மூன்று லட்ச ரூபாய் ஆயிற்று. இக்குடும்பத்தார் இங்கு அன்னச்சத்திரமும் கட்டினர். அரிமழம் அ.அரு. குடும்பத்தார் குருபூஜை மடம், திருநந்தவனம், தேவாரப் பாடசாலை, பசுமடம் முதலியவை அமைத்தனர். தேவகோட்டை மு.ராம.அ. குடும்பத்தார் குருபூஜை மடம் கட்டினர்.

### 136) திரு உத்தரகோசமங்கை – (Pincode - 623 533):

மதுரை – இராமநாதபுரம் நெடுஞ்சாலையில் இராமநாதபுரத்துக்கு 10 கி.மீ. முன்பாகவே வலப்புறம் செல்லும் சாலையில் அமைந்துள்ள இத்தலத்தின் சிவன் கோயில் இராமநாதபுரம் சமஸ்தானத்திற்குட்பட்டதாகும். இறைவன் மங்களநாதர். இறைவி மங்களாம்பிகை. உத்தரம் என்றால் உபதேசம். கோசம் என்றால் ரகசியம். மங்கை என்றால் பார்வதி தேவி. மங்களேஸ்வரியான அன்னைக்கு மங்களநாதராகிய சிவபிரான் வேதாகமங்களின் ரகசியங்களை உபதேசித்தமையால், இத்தலம் உத்தரகோசமங்கை எனப்பட்டது. யோக சாத்திரங்களின்படி கோசம் என்பது உடம்பு. உத்தரம் என்றால் வடக்குப் பகுதியான முன் நெற்றியைக் குறிக்கும். இத்தலத்தில் இறைவன் இலந்தை மரத்தடியில் எழுந்தருளி இருக்கிறார். திருவிளையாடல் புராணத்தில் உள்ள வலைவீசி மீன் பிடித்த திருவிளையாடல் இங்குதான் நடந்தது. சிவபெருமான் சாபத்தால் செம்படவப் பெண்ணாகப் பிறந்த பார்வதி இத்தலத்தில் இறைவனை மணந்து வேத உபதேசம் பெற்றாள். மண்முந்தியோ, மங்கை முந்தியோ என்று வியக்குமளவுக்குக் காலத்தால் முற்பட்ட இத்தலத்தில் மண்டோதரி வழிபட்டு இராவணனை மணந்தாள். இத்தலத்தில் இறைவன் ஆயிரம் முனிவர்களுக்குக் காட்சி தந்து வித்தக வேடம் காட்டியதால் அவருக்குக் காட்சி கொடுத்த நாயகன் என்ற பெயர் வழங்குகிறது. திருவாசகத்தில் மகேந்திரம் என்று குறிக்கப்படுவது இந்த உத்தரகோசமங்கையே என்று இவர் குறிப்பிடுகிறார்கள். இங்குள்ள ஆதி சிதம்பரம் என்ற அற்புதத் தனிக்கோயிலில் உள்ள மரகத நடராஜர் ஆண்டு முழுவதும் சந்தனக்காப்பிலேயே காட்சியளிப்பார். இவருடைய திருமேனியை உள்வைத்தே சந்நிதி கட்டப்பட்டுள்ளதால் இவர் உலா வரமாட்டார். இங்கு இவர் அறையில் ஆடிய நடனத்தைத்தான் அம்பலவாணர் தில்லை அம்பலத்தில் ஆடினார் என்று சான்றோர் பெருமக்கள் கூறுகிறார்கள். இவரைச் சுற்றிலும் அகழி அமைப்பு உள்ளது.

> பத்தரெலாம் பார்மேல் சிவபுரம்போல் கொண்டாடும்
> உத்தர கோசமங்கை ஊர்.

என்று மணிவாசகர் போற்றும் இத்தலத்தில் உள்ள கோயில் முதலில் கண்டி மகாராஜாவால் கட்டப்பட்டது. இப்பொழுது இராமநாதபுர சமஸ்தான ஆளுகைக்குட்பட்டுள்ளது. சுமார் 130 ஆண்டுகளுக்கு முன்னால் இராமநாதபுரம் மன்னர் பாஸ்கர சேதுபதி இக்கோயிலைச் சீரமைக்க நகரத்தார்களிடம் கொடுத்தார். தேவகோட்டை ஜமீன்தார் அழ.அரு. அருணாசலம் செட்டியார் 1901–ல் இக்கோயில் நிர்வாகப் பொறுப்பை ஏற்றார். அப்பொழுது தேவகோட்டை அழ.சித.லெ. இராமசாமி செட்டியார், அழ.அரு.

அருணாசலம் செட்டியார், அழ.சுப.க. சுந்தரேசன் செட்டியார், ராம.அரு.அரு. அருணாசலம் செட்டியார், அழ.சி.அ.லெ.ராம. குடும்பத்தார் ஆகியோர் அம்பாள் கோயிலில் முழுமையுமாகத் திருப்பணி செய்தனர். இவர்கள் அனைவரும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மாதத்திற்கு ஆயிரம் ரூபாய் வீதம் பத்து வருடங்களில் மொத்தம் 1,20,000/- ரூபாய் செலவிட்டுத் திருப்பணி செய்தனர். இதற்காக அம்பாசமுத்திரத்திற்கு அருகில் உள்ள மலைப் பகுதியிலிருந்து கற்கள் கொண்டு வரப்பட்டன. அம்மன் கோயில் திருப்பணி முடிந்ததும் சுவாமி கோயில் திருப்பணி தொடங்கப் பெற்றது. முதலாம் உலகப் போர் தொடங்கியதால் திருப்பணி பாதியில் நின்று போய் விட்டது. தேவகோட்டை அழ.சித.லெ. இராமசாமி செட்டியார், மேல ரத வீதியில் பசுமடம் வைத்து நந்தவனமும் அமைத்தார். நந்தவனத்தில் இரண்டு பிள்ளையார் கோயில்கள் கட்டப் பெற்றன.

## நாலாயிரத் திவ்யப்ரபந்தப் பாடல் பெற்ற வைணவத் திருத்தலங்களில் நகரத்தார் செய்த திருப்பணிகள்:

சைவத்தையும், வைணவத்தையும் இரண்டு கண்களாகக் கருதித் திருப்பணி செய்தவர்கள் நகரத்தார் பெருமக்கள். இவர்களுடைய குலதெய்வக் கோயில்களில் முதலாவதான இளையாத்தங்குடியில் கழனிவாசல் பிரிவினருக்குத் தனியாக ஒரு பெருமாள் கோயில் கட்டப்பட்டுள்ளது. பாடல்பெற்ற வைணவத்திருத்தலங்களில் இவர்கள் செய்த திருப்பணிகள் சிலவற்றை இப்பொழுது பார்க்கலாம்.

### 137) திருக்கூடல் என்னும் மதுரை:

தமிழகத்தின் பண்பாட்டுத் தலைநகரமாகிய மதுரை மாநகரில் உள்ளது கூடல் அழகப் பெருமாள் கோயில். வைகையாறும், கிருதமாலா நதியும் கூடுவதால் இந்நகர் கூடல் எனப்பட்டது. பெரியாழ்வார் திருப்பல்லாண்டு பாடிய இத்தலத்தைத் திருமங்கை ஆழ்வாரும், திருமழிசை ஆழ்வாரும் மங்களாசாசனம் செய்து வழிபட்டிருக்கிறார்கள். பெருமாள் பெயர் கூடல் அழகர். கிழக்கு நோக்கி இவர் வீற்றிருக்கிறார். தாயார் மதுரவல்லி நாச்சியார். சங்க இலக்கியத்தில் இப்பெருமான் “இருந்த வளமுடையார்” என்றழைக்கப்படுகிறார். கிருந்தையர் அமர்ந்த செல்வா என்று பரிபாடல் இவரைப் போற்றுகிறது. இக்கோயில் மூன்றடுக்குக் கோயில் ஆகும். முதல் தளத்தில் வீற்றிருக்கும் பெருமாள் வியூக சுந்தரராஜர். இரண்டாவது தளத்தில் சூரிய நாராயணர் நின்ற திருக்கோலத்திலும், அதற்கு மேல் பள்ளிகொண்ட பெருமாளாகவும் காட்சியளிக்கிறார்.

இத்தலம் அஷ்டாங்க விமானத்தைக் கொண்டுள்ளது. இதன் நிழல் தரையில் விழுவதில்லை. இவ்விமானத்தை 45 நாட்கள் தொடர்ந்து தினமும் 11 முறை சுற்றினால் எண்ணிய காரியம் கைகூடும். இத்தலத்தில் உள்ள மதுரவல்லித் தாயார் சந்நிதிக் கோயிலை தேவகோட்டை முத்து கரு. வெங்கடாசலம் செட்டியார் அவர்களும், அவர் மைந்தர் அழகப்பச் செட்டியார் அவர்களும் 1923-ல் கருங்கல் திருப்பணியாகக் கட்டி முடித்தார்கள். சொக்கட்டான் மண்டபத்தில் அடித்தளம் கல்லால் அமைத்தார்கள். ஹேம புஷ்கரிணியில் கருங்கல் சுவர் கட்டினார்கள். பெரியாழ்வார் யானை மீதமர்ந்து பல்லாண்டு பாடிய தலம் என்பதால் கோயிலுக்கு யானை வாங்கிக் கொடுத்துப் படித்தனத்துக்கும் ஏற்பாடு செய்தார்கள். இந்தத் திருக்குட நன்னீராட்டு 1923-ல் துந்துபி ஆண்டு, வைகாசி மாதம், 18-ஆம் நாள், புதன் கிழமை மிகச் சிறப்பாக நடைபெற்றது. இத்திருப்பணியைச் செய்த தேவகோட்டை முத்து.கரு.வெ. அழகப்ப செட்டியார் அவர்கள் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் முதல் நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்ட போது, பல மண்டபங்களைப் புதுப்பித்து வண்ணம் பூசி 01.07.1923-ல் திருக்குட நன்னீராட்டுச் செய்தது குறிப்பிடத்தக்கது. இதற்கு முந்திய திருக்குட நன்னீராட்டு மொட்டைக் கோபுரத்தை முழுக் கோபுரமாக்கி அமராவதிபுதூர் வயிநாகரம் நாகப்பையாவும், வேங்கடாசல ஐயாவும் 06.02.1878-ல் செய்ததாகும். நகரத்தார்களின் சைவ, வைணவ ஒருமைப்பாட்டுக்கு இவை சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

### 138) ஸ்ரீவில்லிபுத்தூர்:

“வில்லிபுத்தூர் வேதக்கோன் ஊர்” என்று போற்றப்படும் ஸ்ரீவில்லிப்புத்தூர் மதுரையிலிருந்து இராஜபாளையம் வழியாகக் குற்றாலம் செல்லும் வழித்தடத்தில் உள்ளது. பன்னிரண்டு ஆழ்வார்களில் பெரியாழ்வாரும், ஆண்டாள் என்ற கோதை நாச்சியாரும் இங்குதான் திருவவதாரம் செய்தனர். பூதேவி ஆண்டாள் நாச்சியாராகவும், கருடாழ்வான் பெரியாழ்வாராகவும் அவதரித்துத் திருமால் பெருமையைச் செந்தமிழ் மணம் வீசப் பாடிப் பரவியதால் இத்தலத்தில் பெருமாளுக்கு வலப்புறம் ஆண்டாளும் இடப்பக்கம் கருடாழ்வாரும் காட்சியளிக்கிறார்கள். மூலவர் வடபத்ர சாயி என்ற ரங்கமன்னார். தாயார் கோதா தேவி. திருவரங்கப் பெருமாள் இத்தலத்துக்கு வந்து ஆண்டாள் நாச்சியாரை மணம் புரிந்தார். இந்தத் திருத்தலத்தில் உள்ள ஆண்டாள் நாச்சியார் கோயில் மதில் சுவர் ஒக்கூரைச் சேர்ந்த சி.கரு.சி.சித. குடும்பத்தாரால் கட்டப்பெற்றது. இக்குடும்பத்துக்குத் தர்மகர்த்தா குடும்பம் என்ற பெயர் சூட்டப் பெற்றது. இவர்கள் ஆலய அறங்காவலர்களாக இருந்தனர்.

இவ்வூரில் ஒரு பெரிய சிவன் கோயிலும் உள்ளது. அதற்கு மடவார் வளாகம் சிவன் கோயில் என்று பெயர். இறைவன் பெயர் வைத்தியநாதர். இறைவி சிவகாமியம்மை. இக்கோயிலில் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் பெரிய அளவில் திருப்பணி செய்தனர். பிரமாதி ஆண்டு, ஆனி மாதம், 12-ஆம் நாள், (26.6.1939) திருக்குட நன்னீராட்டு மிகச் சிறப்பாக நடைபெற்றது. (திருப்பணிகள் தொடரும்)

# தலைச்சங்க நாண்மதியம் - [25]

நா. சௌரிராஜன், கோட்டையூர்






கண்ணார் கண்ணபுரமே போற்றி!
தலைச்சங்க நாண்மதியப் பெருமாளே போற்றி!
தலைச்சங்க நாச்சியார் நாயகனே போற்றி!

*****



இத்தலம் சோழநாட்டுத் திருப்பதிகளுள் மிகவும் தொன்மை வாய்ந்ததாகும். பழந்தமிழ் இலக்கியத்தில் இத்தலம் பற்றிய பல செய்திக் குறிப்புகள் கிடைக்கின்றன. தலைச்சங்க நாண்மதியம் என்றால் இங்கு எவருக்கும் தற்சமயம் தெரியாது. தலைச்சங்காடு என்ற பெயரே தற்போது பிரதானமாய்த் திகழ்கிறது. திருச்சீரங்கநாதன்பள்ளி, திருச்சிராப்பள்ளியாகி, திருச்சியானது போல, திரு மெய்யம் என்பது திருமயம் ஆனது போல, தலைச்சங்க நாண்மதியம் என்பது தலைச்சங்காடு ஆயிற்று.

இத்தலம் மயிலாடுதுறையில் இருந்து 25 கி.மீ. தொலைவில் உள்ளது. சீர்காழியில் இருந்தும் இங்கு செல்லலாம். இரவில் நமக்கு ஒளிதரும் மதியாகிய சந்திரனுக்கு ஏற்பட்ட சாபம் தீர்த்தமையால் இங்குள்ள பெருமாளுக்கு நாண்மதியப் பெருமாள் என்ற திருநாமம் ஏற்பட்டது.

சங்க காலத்திலேயே இப்பகுதி பெரும்புகழ் பெற்றிருந்தது. அப்போது இந்நகரில் தலைசிறந்த சங்குகள் விற்கப்பட்டன. இன்றைய காவிரிப் பூம்பட்டினத்தில் இருந்து 7 கி.மீ. தொலைவில் உள்ள இவ்வூர் பண்டைய நாளில் சங்கு வாணிகத்தில் தலைசிறந்திருந்தது. இங்கு சங்குகள் குவித்து வைத்து விற்கப்பட்டதை சங்க நூல்கள் பரக்கப் பேசுகின்றன. அத்துடன் இவ்விடத்தைச் சுற்றி பலாச மரக்காடுகள் அதிகம் இருந்தன. தலைசிறந்த சங்குகள் விற்கப்பட்ட இடமும், காடும் சேர்ந்து தலைச்சங்காடு ஆயிற்று. இத்தலத்தில் உள்ள பெருமானின் கையில் உள்ள சங்கு மிகவும் பேரழகு வாய்ந்தது.

தக்கன் என்பவருக்கு 27 மகள்கள். அவர்கள் அனைவரையும் சந்திரன் மணந்து கொண்டான். அனைவரிடத்திலும் சமமாக அன்பு காட்டாமல், ரோகிணி என்பவளிடம் மட்டும் அதிக அன்பு செலுத்தினான் சந்திரன். இதனால் மற்றவர்கள் கோபம் கொண்டு தந்தையிடம் முறையிட்டனர். சினமடைந்த தக்கன், சந்திரனின் அழகும், ஒளியும் தினம், தினம் குறையும்படி சபித்தார். இதன் காரணமாக முழுச்சந்திரன் தினம் தினம் தேயத் தொடங்கினான். சந்திரனின் சாபத்தைப் பெருமாள் இவ்விடத்தே தீர்த்து வைத்துக் காட்சி அளித்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.

மூலவர்: நாண்மதியப் பெருமாள் - கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலம்.

தாயார்: தலைச்சங்க நாச்சியார் - உற்சவர்: வெண்சுடர்ப் பெருமாள்.

*****

# திரு இந்தளூர் (மயிலாடுதுறை) - [26]

இந்தளூர் பரிமள ரங்கநாதனே போற்றி!
இந்தளூர் பரிமள ரங்கநாயகியே போற்றி!

*****

இத்தலம் மயிலாடுதுறை என்னும் மாயவரத்திலேயே உள்ளது. இந்தளூர் என்றால் எவரும் அறியார். மாயவரம் பரிமள ரெங்கன் கோயில் என்றால்தான் எல்லோருக்கும் தெரியும்.

சந்திரனுக்கு இந்து என்ற ஒரு பெயர் உண்டு. தனக்கு ஏற்பட்ட தோஷம் போக்கிட அவன் இத்தலத்தில் தவமிருந்து தோஷம்



நீங்கப்பட்டான். தோஷம் நீங்கப்பட்ட சந்திரன் (இந்து) தனது பெயரினால் இத்தலம் வழங்கப்பட வேண்டும் என வேண்டிக் கொள்ள இந்துளூர் என்றாயிற்று.

காவேரி நதி ஓரம் அமைந்த இந்த நகரத்தைச் சுற்றிலும் நறுமணம் வீசும் புஷ்பக் காடுகள் நிறைந்திருந்ததால் சுகந்தவனம் என்ற பெயர் கொண்டது. எனவே, பெருமாளுக்கும் சுகந்தவன நாதன் என்ற திருநாமம் உண்டானது. பெருமாள், அரக்கர்கள் அபகரித்துச் சென்ற வேதங்களை அவர்களிடம் இருந்து மீட்டு, வேதங்களுக்குப் பரிமளத்தைக் கொடுத்தமையால் இறைவன் பரிமள ரெங்கநாதர் என்று அழைக்கப்படுகிறார். 4 புஜங்களுடன் கூடிய இப்பெருமாளின் திருவடியருகில் கங்கைத் தாயாரும், சிரசருகில் காவிரித் தாயாரும் அமைந்துள்ளனர். இங்கே ஐப்பசி மாத விழாவின் போது, காவேரி கடலில் கலக்கும் இடத்தில் நீராட இந்தியா முழுதும் இருந்தும் பக்தர்கள் வந்து குவிவார்கள். இத்தலம் பலவித வேலைப்பாடுகளுடன் கூடிய, அழகு பொருந்திய பெரிய சன்னதியாகும்.

திருமங்கையாழ்வார் இத்தலத்திற்கு வந்த போது பூஜைகள் முடிந்து கோவில் பூட்டப்பட்டு விட்டது. தான் வருவதற்குள் இவன் கதவடைத்துக் கொண்டானே எனக் கோபப்பட்ட திருமங்கை, பெருமானை "வாழ்ந்தே போம் நீரே.....! என்று வசைபாடி வாழ்த்துகிறார்.

நமக்கு வேண்டிய ஒருவன், நமக்குத் தேவையான ஒரு பொருளை வைத்துக் கொண்டு நாம் அதைக் கேட்கும் போது, வேண்டுமென்றே தரமுடியாது எனப் பொய்ச்சண்டை போடுவது போலப் பேசுகிறான் என வைத்துக் கொள்வோம். அவன் நமக்கு மிகமிக வேண்டியவன் என்பதால், பரவாயில்லை. அதை வைத்துக் கொண்டு "நீரே வாழ்ந்து போம்" "நீயே வைத்துக் கொண்டு நன்றாக இரு" என்று கூறுகின்றோம், இல்லையா, அதுபோல, பெருமாள் திருமங்கைக்கு மிகவும் வேண்டியவர். தரிசனம் என்பது அவர் வேண்டிய பொருள். அவர் தரிசிக்க வரும்போது கதவை அடைத்துக் கொண்டதால், "உம்மழகை நீரே வைத்துக் கொள். உம் அழகை நீரே ரசித்து வாழ்ந்து போம்" என்று ஆழ்வார் சொல்கிறார்.

இத்தலத்திற்கு அமைந்த 10 பாடல்களும் திருமங்கையாழ்வாருக்கும், பெருமாளுக்கும் நடந்த விவாதமாகவே கூறுவர். இனிமையான, உள் அர்த்தம் மிக்க, சுவையான, வியப்புத்தரும் பாடல்கள் அவை. "நிந்தா ஸ்துதி" என்று அதை அழைப்பர்.

**திருமங்கைக்கும் பரிமள ரங்கனுக்கும் நடந்த உரையாடல்:**

ஆழ்வார்: நாம் வாழும் போது, உமது அடிமை என்று தெரிந்திருந்தும், உமது அடியாருக்குக் காட்சி கொடுக்காது தாழிட்டுக் கொண்டீரல்லவா? இது நம் இருவருக்கும் மட்டும் உள்ள பிரச்சனை அல்ல. ஆசைப்பட்டான் திருமங்கை. ஆனால், கதவடைத்து விட்டான் பரிமள ரங்கன் என எல்லோரும் ஏசினால் உமக்கே அப்பழி வந்து சேரும். எனவே, எமக்குக் காட்சி கொடும்.

பெருமாள்: எனக்குப் பழி வரும் என்று நீர் ஏன் துயரப்படுகிறீர். அதனை நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் கவலையை விடுங்கள்.

திருமங்கை விடுவதாக இல்லை. "பெருமாளே, உம்மால் பொறுக்க முடியாத ஒன்று. இப்போது ஏற்பட்டு விட்டது" என்று கூற, பெருமாள் "என்ன ஆழ்வாரே! அது என்ன புதிதாக புதிர் ஒன்றைச் சொல்கிறீர். அது என்ன?" என்று வினவ, ....

ஆழ்வார்: பெருமாளே! ஒரு பொருள் நம்மை விட்டுச் சென்றால் அதை மறந்து மற்ற ஒன்றை நாடுவதே உலக இயற்கை. ஆனால், நாம் அவ்வாறல்ல! நீவிர் எங்கட்குப் புலப்படாது செல்லச் செல்ல உங்கள் மீது யாம் கொண்ட பக்திதான் மேலும் வளரும்!

நாங்கள் யார் தெரியுமா? "மறந்தும் புறந்தொழா மாந்தர்" "இன்றைக்கும் ஏழேழு பிறவிக்கும் உமக்கே யாம் ஆட்செய்வோம்".

"இச்சுவைதவிர யான்போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்"

"எந்தை தந்தை எம்மூத்தப்பன் ஏழ்படி கால் தொடங்கி
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம்"

திருமங்கையின் விளக்கத்தை மேலும் பருக, அவர் தமிழை மேலும் சுவைக்க எண்ணிய பரிமளன் மீண்டும் மௌனம் சாதிக்க திருமங்கை மீண்டும் அவரை விட்டபாடில்லை.

"பெருமாளே! பரமபதத்தில் எல்லோருக்கும் காட்சி கொடுக்கும் நின் பேரழகை இங்கு எனக்கு இந்த இந்தளூரிலும் காட்டாமல் வேறுபாடு காட்டலாமோ? சரி. ஆசைப்பட்ட அடியவர்கட்கு உன் அழகைக் காட்ட உனக்கு இஷ்டமில்லை. அப்படியென்றால், நீரே அதைக் காட்டிக் கொண்டு வாழுமய்யா – நாங்கள் எப்படியோ போகிறோம்.........."

"வாசி வல்லீர் இந்தளூரீர் வாழ்ந்தே போம் நீரே" – என்றார். வாதம் வளர்ந்து கொண்டே போய், இன்தமிழைச் சுவைத்து மகிழ்ந்த எம்பெருமான் தனக்கே உரிய தெய்வீகப் புன்னகையுடன் பிறகு ஆழ்வாருக்குக் காட்சி தந்ததாக வரலாறு. அழகுத் தமிழால் அவர் பெருமாளை மட்டுமா மகிழ்வித்தார்? நம்மையும் தான்!

மூலவரான பரிமள ரங்கநாதனையும், பரிமள ரெங்கநாயகித் தாயாரையும் மனதாரச் சேவித்து, மகிழ்வான வாழ்வு பெற்றிடுவோம். (பயணம் தொடரும்)

# 9 உங்களுடன் உரையாடுங்கள்



எம். சிதம்பரம்

## வாருங்கள் வெல்வோம்

ஹலோ. ஹலோ. யாருங்க பேசறது... சரியா கேக்கல. டவர். கிடைக்கல. என்னது. யாருங்க. நீங்க. தெளிவா. சொல்லுங்க. என்ன. நீங்க தான். வெற்றியா என்னங்க இப்பல்லாம். உங்களை சந்திக்கவே முடியல. எங்கே இருக்கீங்க. நீங்க...?

என்ன. நீங்க என்னை சந்திக்க எப்பவுமே தயாரா இருக்கீங்களா? அப்படியா... நான் உங்களை சந்திக்க என்னங்க செய்ய வேண்டும்? உங்களை எங்கே எப்போ சந்திப்பது?

வெற்றி பெற்ற என் நண்பர் ரவியை கேட்க வேண்டுமா?

சரி உடனே ரவியை தொடர்பு கொள்வோமா?

ஹலோ. ஹலோ ரவியா? வெற்றி உன்னை தொடர்பு கொள்ளச் சொன்னது. வெற்றியிடம் Appointment பெற என்ன வழி? நான் என்ன செய்ய வேண்டும்?

5,4,3 ரூலா. உங்கள் டீச்சர் உங்களுக்கு சொல்லிக் கொடுத்தார்களா.

அதென்ன 5,4,3 ரூல். எனக்கு தெரியாதே. எனக்கு எப்படித் தெரியும் உன் டீச்சர் தான் என் டீச்சர் இல்லையே.

1.) 5 என்றால். 5 எழுத்து கொண்ட ஒரு ஆங்கில வார்த்தையா அதென்ன வார்த்தை.

ஓ..T..h..I..n..k....

நம் லட்சியம் என்ன. நாம் அடைய வேண்டிய இலக்கு எது என்பதை நன்கு சிந்தித்து அலசி ஆராய்ந்து ஒரு தீர்க்கமான முடிவிற்கு வர வேண்டும். அதனை எழுதி வைத்துக் கொள்ள வேண்டும். மனதிலே தெளிவாக பதிய வைத்துக் கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு – நான் ஒரு வருடத்திற்குள் சென்னை மைலாப்பூரில் ஒரு 3 பெட் ரூம் அபார்ட்மெண்ட் வாங்க வேண்டும்.

நான் என் வருமானத்தை இரண்டு வருடத்திற்குள் மூன்று மடங்கு பெருக்க வேண்டும்.

என் மகனை ஒரு சிறந்த சமூக சேவகர் ஆகவும், என் மகளை ஒரு சிறந்த சொற்பொழிவாளர் ஆகவும் ஆக்க வேண்டும்.

இப்படி உங்கள் வாழ்க்கையில் உள்ள ஒவ்வொரு அங்கத்தை பற்றியும் நீங்கள் நன்கு சிந்தித்து அதில் எந்த உயர்ந்த நிலையினை நீங்கள் அடைய வேண்டும் என முடிவு செய்ய வேண்டும்.

2.) சரி அதென்ன 4? ஓ. அதுவும் ஒரு ஆங்கில வார்த்தையா. 4 எழுத்து கொண்ட ஆங்கில வார்த்தையா? அதென்ன. வார்த்தை? P...L...A...N... எதனை அடைய வேண்டுமென முடிவு செய்த பின்..

அதனை எப்படி அடைய வேண்டும். அவற்றை அடைய நாம் என்னென்ன செய்ய வேண்டும்? எப்படி செய்ய வேண்டும்? என்பதனை நன்கு தீர சிந்தித்து. பல நூல்களை வாசித்து வெற்றி பெற்ற மனிதர்களை கலந்து ஆலோசித்து. நாம் ஒரு Plan வகுக்க வேண்டும். எந்த எந்த தேதியில் என்ன என்ன செய்ய வேண்டும். அதற்கு என்ன என்ன தேவை என்பதனையும பட்டியலிட்டு, எப்பொழுதும் தயார் நிலையில் இருக்க வேண்டும். சரியான தருணத்தில் அவற்றை பயன்படுத்தி வெற்றிக்கனியை உங்களுடையதாக்கிக் கொள்ள வேண்டும். ஒரு வேளை இத்திட்டம் வெற்றி பெறவில்லை எனில் இன்னொரு திட்டமும் கைவசம் வைத்திருக்க வேண்டும். இதைத்தான் வல்லுனர்கள் Plan-A, Plan-B என்பார்கள். இப்படி உங்களின் ஒவ்வொரு இலக்கிற்கும் ஒன்றுக்கு மேற்பட்ட திட்டங்கள் வைத்திருந்தால் வெற்றி உங்களை நோக்கி நகர ஆரம்பிக்கும்.

3.) 5, 4, 3-யில் இறுதியில் வரும் அந்த 3 என்ன?

அதுவும் ஒரு ஆங்கில வார்த்தை. 3 எழுத்து ஆங்கில வார்த்தை. ACT.

நாம் அடைய வேண்டிய ஒவ்வொரு லட்சியத்தினையும் முடிவு செய்து, மனதில் பதிய வைத்துக்கொண்ட பின் அவற்றை அடைய நன்கு திட்டமிட்ட பின், கோதாவில் குதிக்க வேண்டும். அதாவது செயல் பட வேண்டும். திட்டத்திற்கு முழு வடிவம் கொடுக்க வேண்டும்.

ஒரு திரைப்படம் எடுப்பது என முடிவு எடுத்துவிட்டு அப்படியே சும்மா இருந்தால் எப்படிங்க, நல்ல திரை கதையை தேர்வு செய்து, இயக்குனர் நடிகர் – நடிகைகளை முடிவு செய்து படம் தயாரிப்பது போல் தான். அந்த Act என்பது. Plunge into action. வைராக்கியத்தோடு என் லட்சியங்களை அடைந்தே தீருவேன் என உங்கள் திட்டங்களை செயல்படுத்த முனைப்போடு கோதாவில் குதித்தால் வெற்றி உங்களுக்கு மாலை சூடும். மாற்றி மாற்றி கூடிக்கொண்டே இருக்கும்.

# நகரத்தாரின் பண்பாட்டு பதிவுகள் நூல் வெளியீடு





கோவிலூர் மடாலயம் சார்பில் காரைக்குடி ராமசாமி தமிழ்க் கல்லூரி முதல்வர் முனைவர் நா.வள்ளி சொக்கலிங்கம் அவர்கள் எழுதிய "நகரத்தாரின் பண்பாட்டு பதிவுகள்" என்ற நூலை முருகப்பா குழும தலைவர் பத்மபூஷன் திரு. M.V. சுப்பையா அவர்கள் வெளியிட, சென்னை கமலா சினிமாஸ் திரு. வி.என்.சிடி. வள்ளியப்பன் அவர்கள் பெற்று கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். கோவிலூர் ஆதின கர்த்தர் சீர்வளர் சீர் நாராயண ஞான தேசிக சுவாமிகள் தலைமையேற்க, நூலைப் பற்றிய அறிமுகவுரையை திருவாடனை அரசு கலை மற்றும் அறிவியல் கலைக் கல்லூரி முதல்வர் பேரா. மு. பழனியப்பன் அவர்கள் வழங்க, திருமதி நா.வள்ளி சொக்கலிங்கம் அவர்கள் ஏற்புரை வழங்க, திருமதி தெய்வானை மணிகண்டன் தொகுத்து வழங்க விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

நூல் படிக்க QR Code

நூல் படிக்க லிங்க் : https://publuu.com/flip-book/265728/1934831




Dr.மணிஸ் பல் மருத்துவமனை

No: 315/24 MAM பில்டிங் பூரணி மருத்துவமனை எதிரில்
(மீனாட்சி பேன் ஹவுஸ் காம்ப்ளக்ஸ் மாடி)
செக்காலை ரோடு - காரைக்குடி
வார நாட்கள் காலை 9.30 முதல் 1.30 வரை
மாலை 6.00 முதல் இரவு 9.00 வரை
ஞாயிறு-முன்-பதிவு-செய்தவர்களுக்கு-மட்டும்

இலவச பல் பரிசோதனை செய்யப்படும்

பல் பாதுகாப்பிற்கு காலை மற்றும் இரவு இருவேளையும் பல் துலக்குங்கள்

பல் சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு பெற Dr.மணிஸ் பல் மருத்தவமனைக்கு வருகை தாருங்கள்.

Dr.S.மணிகண்டன்,BDS., MBA(HM)
9551624126 / 7904079923

27 கிளைகள், 36 வருட அனுபவம்

சுற்றுலாவா யோசிக்கவே வேண்டாம்



# ஸ்ரீ முருகன் டிராவல் ஏஜென்ஸி

Incredible India

RECOGNIZED GOVT. OF INDIA TOURISM

98421 62416
97918 48265
98424 47305
98421 62265



H.O. 10, வடக்கு ஆவணி மூல வீதி. மதுரை–1

## SPECIAL TOURS 2025

www.srimurugantravel.com

| நாள் | சுற்றுலா | தேதி | கட்டணம் |
|---|---|---|---|
| 10 நாள் | ஆக்ரா–காசி அயோத்தியா | மாதந்தோறும் 9,21 | Rs. 13500/- |
| 13 நாள் | டெல்லி–ஆக்ரா அயோத்தியா | மாதந்தோறும் 6,18,27 | Rs. 17500/- |
| 6 நாள் | ஸ்ரீரடி பண்டரிபுரம் | மாதந்தோறும் 1,8,15,22 | Rs. 8000/- |
| 10 நாள் | குஜராத்–துவாரகா பட்டேல்சிலை | மாதந்தோறும் 17 | Rs. 17000/- |
| 17 நாள் | பத்ரி–கேதார் கங்கோத்ரி–யமுனோத்ரி | மாதந்தோறும் 10,20 மே முதல் | Rs. 30000/- |
| 13 நாள் | பத்ரிநாத் கேதார்நாத் | மாதந்தோறும் 10,20 மே முதல் | Rs. 25000/- |
| 14 நாள் | முக்திநாத்–நேபாள் கொல்கத்தா | மாதந்தோறும் 18 | Rs. 27000/- |
| 15 நாள் | நவஜோதிர்லிங்கம் | மாதந்தோறும் 18 | Rs. 20000/- |
| 10 நாள் | சிம்லா–மணாலி ஆக்ரா | ஏப் 1,8,15,22,29 மே. 1,8,20,27 | Rs. 18000/- |
| 13 நாள் | அமர்நாத் | ஜூலை முதல் | Rs. 16000/- |

| நாள் | சுற்றுலா | தேதி | கட்டணம் |
|---|---|---|---|
| 2 நாள் | மும்பை–ஸ்ரீரடி | தினந்தோறும் | Rs. 14990/- |
| 4 நாள் | கோவா SPL | | Rs. 24990/- |
| 4 நாள் | டெல்லி–ஆக்ரா ஜெய்ப்பூர் | வாரந்தோறும் வியாழன் | Rs. 26990/- |
| 5 நாள் | அந்தமான் ஹேவலோக் | தினந்தோறும் | Rs. 29990/- |
| 5 நாள் | காஷ்மீர் குல்மார்க் | வாரந்தோறும் புதன் | Rs. 44990/- |
| 5 நாள் | டார்ஜலிங் கேங்டாக் | வாரந்தோறும் புதன் | Rs. 39990/- |
| 7 நாள் | NORTH EAST | வாரந்தோறும் திங்கள் | Rs. 44990/- |
| 3 நாள் | பூரி புவனேஸ்வர் | வாரந்தோறும் வெள்ளி | Rs. 24990/- |
| 7 நாள் | குஜராத் துவாரகா | வாரந்தோறும் செவ்வாய் | Rs. 35990/- |

| நாள் | சுற்றுலா | தேதி | கட்டணம் |
|---|---|---|---|
| 6 நாள் | காசி அயோத்தியா | | Rs. 34990/- |
| 8 நாள் | பத்ரி–கேதார் | வாரந்தோறும் ஞாயிறு | Rs. 44990/- |
| 12 நாள் | பத்ரி–கேதார் கங்கோத்ரி–யமுனோத்ரி | வாரந்தோறும் திங்கள் | Rs. 54990/- |
| 6 நாள் | முக்திநாத் நேபாள் | ஏப்ரல் 1,18 மே 1,10,18 | Rs. 29990/- |
| 6 நாள் | பூடான் SPL | வாரந்தோறும் செவ்வாய் | Rs. 44990/- |
| 8 நாள் | காஷ்மீர் லே–லடாக் | வாரந்தோறும் ஞாயிறு | Rs. 64990/- |
| 5 நாள் | சிம்லா–குளு மணாலி | வாரந்தோறும் புதன் | Rs. 27990/- |
| 5 நாள் | லே–லடாக் | வாரந்தோறும் | Rs. 54990/- |
| 6 நாள் | நைனிட்டால் முசௌரி–கார்பெட் | வாரந்தோறும் புதன் | Rs. 34990/- |

| நாள் | சுற்றுலா | கட்டணம் |
|---|---|---|
| 6 நாள் | சிங்கப்பூர் மலேசியா | Rs. 84,990/- |
| 5 நாள் | சிங்கப்பூர் மலேசியா | Rs. 74,990/- |
| 10 நாள் | சிங்கப்பூர் மலேசியா தாய்லாந்து | Rs. 1,34,990/- |
| 8 நாள் | சிங்கப்பூர் மலேசியா தாய்லாந்து | Rs. 94,990/- |
| 5 நாள் | பாங்காக் பட்டாயா Standard | Rs. 52,000/- |
| 4 நாள் | பாங்காக் பட்டாயா Basic | Rs. 37,990/- |
| 5 நாள் | புக்கட் கராபி | Rs. 64,990/- |
| 8 நாள் | Exclusive தாய்லாந்து | Rs. 94,990/- |
| 4 நாள் | மாலத்தீவு Special | Rs. 59,990/- |

| நாள் | சுற்றுலா | கட்டணம் |
|---|---|---|
| 5 நாள் | ஸ்ரீலங்கா Special | Rs. 44,990/- |
| 8 நாள் | Exclusive ஸ்ரீலங்கா | Rs. 64,990/- |
| 5 நாள் | இந்தோனேசியா பாலி | Rs. 64,990/- |
| 6 நாள் | வியட்நாம் கம்போடியோ கலாங் விரிகுடா | Rs. 94,990/- |
| 7 நாள் | Exclusive சீனா | Rs. 1,54,000/- |
| 10 நாள் | ஹாங்காங் மக்காவ் | Rs. 1,34,990/- |
| 6 நாள் | ரஷ்யா Special | Rs. 1,34,990/- |
| 4 நாள் | எகிப்து Special | Rs. 1,29,990/- |
| 8 நாள் | எகிப்து Cruise | Rs. 1,65,990/- |

| நாள் | சுற்றுலா | கட்டணம் |
|---|---|---|
| 5 நாள் | துபாய் அபுதாபி | Rs. 74,990/- |
| 7 நாள் | சௌத்கொரியா | Rs. 1,69,990/- |
| 7 நாள் | கென்யா | Rs. 1,59,990/- |
| 9 நாள் | ஆஸ்திரேலியா | Rs. 2,94,990/- |
| 11 நாள் | ஆஸ்திரேலியா நியூசிலாந்து | Rs. 5,29,990/- |
| 9 நாள் | ஜப்பான் | Rs. 2,94,990/- |
| 12 நாள் | ஈரோப் Special | Rs. 2,74,990/- |
| 4 நாள் | உஸ்பெகிஸ்தான் | Rs. 54,990/- |
| 4 நாள் | கஜகஸ்தான் அல்மைட்டி | Rs. 74,990/- |

**ஆஸ்திரேலியா** – 8 நாள் – ரூ. 2,59,990 முதல்

**SCANDINAVIA** – 10 நாள் – ரூ. 2,99,990 முதல்

**ஈரோப்** – 12 நாள் – ரூ. 2,74,990 முதல்

இது தவிர மேலும் பல சுற்றுலாக்கள் மற்றும் குரூப் சுற்றுலா, தனி நபர் சுற்றுலா, கல்வி, கம்பெனி குரூப் சுற்றுலாக்களுக்கு 97918 48265 / 98421 62416

கிளைகள் : சென்னை, வடபழனி, பெரியமேடு, மாம்பழம், மைலாப்பூர், காஞ்சிபுரம், பாண்டிச்சேரி, காரைக்குடி, கோவை, திருச்சி, பழநி, சேலம், திருநெல்வேலி, ஈரோடு, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருப்பூர், இராஜபாளையம்

24x7 Calling Mobile : 98424 47305

நாள்பட்ட கால் புண் என்பது முழங்கால் மட்டத்திற்கு கீழே உள்ள தோலில் ஆறு வாரங்களுக்கும் மேலாக நீடிக்கும் ஒரு குறைபாடாக வரையறுக்கப்படுகிறது, மேலும் இவை மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாதங்களுக்கு குணமடையும் போக்கைக் காட்டாது.

நீரிழிவு, முதுமை, உடல் பருமன் அல்லது அதிர்ச்சியால் ஏற்படும் நாள்பட்ட காயங்கள் இந்தியாவில் வளர்ந்து வருகின்றன.

காய பராமரிப்பு, காயங்களை மூட உதவுதல், திசுக்களை ரீஜெனரேஷன் மற்றும் வடு மேலாண்மை ஆகியவற்றிற்கான புதுமையான தயாரிப்புகள் மற்றும் தொழில்நுட்பங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் இந்த ஸ்டார்ட் அப் (MedVital) கம்பெனியும் ஒன்றாகும்.

**எப்படி செயல்படுகிறது?**

காயத்தின் வடிவத்திற்கு நுரை டிரஸ்ஸிங்கின் ஒரு அடுக்கைப் பொருத்துகிறார்கள். பின்னர் டிரஸ்ஸிங் ஒரு படலத்தால் மூடப்படுகிறது, இது ஒரு சல்லடை போன்ற குழாய் இணைக்கப்படும் ஒரு திறப்பைக் கொண்டுள்ளது. குழாய் இயந்திரத்துடன் இணைக்கப்படும் போது, அது எதிர்மறை அழுத்தம் காரணமாக வெளியேற்றத்தை உறிஞ்சுகிறது. திரவங்கள் சேகரிக்கப்படும் கேனிஸ்டருக்கு இயந்திரம் ஒரு இணைப்பைக் கொண்டுள்ளது. எதிர்மறை அழுத்தம் காயம் வெளியேற்றத்தைக் குறைக்கிறது மற்றும் மற்றொரு குழாய் மூலம் கூடுதல் ஆக்ஸிஜன் விநியோகம் காயத்திலிருந்து தொற்றுநோயைக் குறைக்க உதவுகிறது. இது புதிய இரத்த நாளங்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதன் மூலம் காயம் குணமடைய உதவுகிறது.



# தொழில் தொடங்கலாம் வாங்க 79

சேதுராமன் சாத்தப்பன்

## ஸ்டார்ட்-அப் உலகம்

# நாட்பட்ட புண்களுக்கு தீர்வு காணும் ஒரு ஸ்டார்ட்-அப்...

**எந்த வகையில் உதவுகிறது?**

காயங்கள் என்பது உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்பு சவாலாகும், இந்தியாவில் 1,000 நபர்களில் 10.5 நபர்களுக்கு ஆழமான காயங்கள் காணப்படுகின்றன. நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், 2025 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் 40 கோடி மக்களை தாண்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது, இதன் விளைவாக 25% நோயாளிகளுக்கு கால் புண்கள் ஏற்படுகின்றன, மேலும் 15% பேர் ஊனத்தை எதிர்கொள்கின்றனர்

சிக்கலான காயம் பராமரிப்பிற்கு ஒருங்கிணைந்த ஒரு தளத்தை உருவாக்குவதில் மெட்வைட்டல் (MedVital) கவனம் செலுத்துகிறது. இந்த ஸ்டார்ட் அப் கம்பெனியின் முதன்மை தயாரிப்பான நோ வுண்ட் (No Wound), நாள்பட்ட காயங்களை துல்லியமாகக் கட்டுப்படுத்தி குணப்படுத்த உதவும் நெகடிவ் பிரஷர் வுண்ட் தெரபி (NPWT) சாதனமாகும். இது மருத்துவமனைகள், கிளினிக்குகள் மற்றும் வீடுகளில் கூட பயன்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த சாதனம் காயங்களில் இருந்து சீழ், ரத்தம் வடிதல், நெர்வ் ப்ளாக் ஆகி இருக்கும் நிலைமை, கேனிஸ்டர் கண்டெய்னர் புல் ஆகி இருக்கும் நிலைமை, பேட்டர் ஸ்டேட்டஸ் ஆகியவற்றிற்கான விஷுவல் மற்றும் கேட்கக்கூடிய அலாரங்களுடன் பொருத்தப்பட்டுள்ளது.

**காயம் குணப்படுத்தும் முறையை துரிதப்படுத்துதல்**

No Wound NPWT ஒரு வெற்றிட விளைவை உருவாக்குகிறது, இது காயத்தின் விளிம்புகளை மெதுவாக ஒன்றாக இழுக்கிறது, காயத்தின் அளவைக் குறைத்து குணப்படுத்தும் செயல்முறையை விரைவுபடுத்துகிறது

**மைக்ரோ டிபர்மேஷன்**

No Wound NPWT குணப்படுத்தும் திசுக்களை அழுத்துகிறது, இதனால் செல் பிரிவுகள் ஏற்பட காரணமாகிறது, உற்பத்தி மற்றும் ஆஞ்சியோஜெனீசிஸை ஊக்குவிக்கிறது

**திரவ நீக்கம்**

No Wound NPWT காயத்திலிருந்து அதிகப்படியான திரவத்தை நீக்குகிறது, எடிமாவைக் குறைக்கிறது மற்றும் வாசோமோட்டர் மீடியேட்டர் மூலம் இரத்த ஓட்டத்தை மேம்படுத்துகிறது.

**காயம் பராமரிப்பு சந்தை மதிப்பு**

இந்திய காயம் பராமரிப்பு சந்தை 2033 ஆம் ஆண்டுக்குள் வருடந்தோறும் 6.4% வளர்ந்து 16,000 கோடி ரூபாய்களை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வளர்ந்து வரும் சந்தையில் இந்த ஸ்டார்ட் அப் கம்பெனி Axio, FibroHeal, Serigen, Inochi Care மற்றும் Crimson Healthcare போன்ற நிறுவனங்களுடன் போட்டியிடுகிறது.

இவர்களின் இணையதளம் www.themedvital.com. சென்று பாருங்கள்.

# இந்த மாத வழிகாட்டி
# கல்லல் ஆர். கருப்பையா
# (கண்ணப்பா போர்ஜிங்க்ஸ், சென்னை)



பல துறைகளிலும் நம்மவர்கள் இப்போது சிறப்பாக பரிணமித்து வருகிறார்கள். எஞ்சினியரிங் இண்டஸ்டிரியில் சிறப்பாக பரிணமித்து வரும் பல நகரத்தார்கள் இருக்கிறார்கள். ஆனால் எஞ்சினியரிங் சார்ந்த அலாய் இண்டஸ்டிரியில் ஒரு சிலரே இருக்கிறார்கள். அந்த ஒரு சிலரில் ஒருவர் கல்லல் நகரை சேர்ந்த திரு. ஆர். கருப்பையா அவர்கள் ஆகும். அவர்களை இந்த மாத நமது வழிகாட்டி பகுதிக்காக பேட்டி கண்டோம். வாருங்கள் கட்டுரைக்குள் செல்வோம்.

**உங்கள் இளமைப் பருவம், பின்னர் உங்கள் முயற்சிகள், கம்பெனி ஆரம்பித்தது பற்றி கூறுங்கள்...**

நான் கல்லலை சேர்ந்த ஊரணி கரையார் (கரு.நா.ரெ. கரு) வீட்டை சேர்ந்தவன். செட்டிநாடு பாலிடெக்னிக்கில் DME முடித்து பின்னர் AMIE., படித்தேன். 1978-ஆம் ஆண்டு திருச்சி BHEL கம்பெனியில் வேலைக்கு சேர்ந்தேன். பின்னர் திருச்சி வி.கே.என். structurals கம்பெனியில் டிசைன் டிபார்ட்மெண்டில் 1978 முதல் 1980 வரை வேலை செய்தேன். அப்போதே தனியாக தொழில் செய்ய வேண்டும் என்ற எண்ணம் துளிர்விட ஆரம்பித்தது.

1980-ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. என் மாமனார் கல்லல் திரு. கண்ணப்ப செட்டியார் அவர்கள். அப்போது அவர்கள் பல தொழில்கள் திறம்பட செய்து வந்தார்கள். Quality Precision Products தொழிற்சாலையில் Director ஆகவும் இருந்தார்கள். திருமணத்திற்கு பிறகு என்னை அழைத்து ஒரு நலிவடைந்த தொழிற்சாலையை என்னிடம் ஒப்படைத்தார்கள். இரண்டு / மூன்று ஆண்டுகளில் அந்த தொழிற்சாலையை லாபத்திற்கு கொண்டு வந்தேன்.

1986-ஆம் ஆண்டு தனியாக ஒரு தொழிலைத் தொடங்க வேண்டும் என்ற ஆவல் என்னுள் இன்னும் அதிகமாக துளிர் விட தொடங்கியது. 1987-ஆம் ஆண்டு கண்ணப்பா போர்ஜிங்ஸைத் தொடங்கி, ஆட்டோமொபைல் மற்றும் வால்வு சம்பந்தப்பட்ட கம்பெனிகளுக்கு போர்ஜ்ட் காம்பனன்ட்ஸ் தயாரிக்க ஆரம்பித்தோம். தொழிற்சாலை ஆரம்பத்தில் கிண்டியில் தொடங்கப்பட்டு பின்னர் ஸ்ரீபெரும்புதூருக்கு மாற்றப்பட்டது. தற்போது எங்களிடம் சுமார் 120 ஊழியர்கள் உள்ளனர், எங்கள் ஆண்டு விற்பனை சுமார் 30 கோடி ரூபாயை எட்டியிருக்கிறோம். தற்போது விரிவாக்கத்தில் ஈடுபட்டுள்ளோம். ரூபாய் 50 கோடி எங்களது இலக்காகும். எங்களது ப்ராடக்ட்களை ஏற்றுமதி செய்யவும் முயற்சிகள் எடுத்து வருகிறோம்.

ஆரம்பத்தில் ஆண்டுக்கு அதாவது 1987-ஆம் ஆண்டு 340 டன் அல்லாய் உற்பத்தி செய்யத் தொடங்கிய நாங்கள் இப்போது 1800 டன்களாக அதிகரித்துள்ளோம். 2028-ஆம் ஆண்டில் 3200 டன்களாக அதிகரிக்க இலக்கு வைத்துள்ளோம்.

பல உள்நாட்டு, பன்னாட்டு நிறுவனங்கள் எங்களுடைய தொடர்ந்த வாடிக்கையாளர்கள் ஆகும். 2024-25ஆம் ஆண்டு L&T Valves நிறுவனத்தின் "Outstanding Performance in Forging" விருதை பெற்றிருக்கிறோம் என்பது குறிப்பிடதக்கது.

**உங்களுடைய பொது சேவைகள் பற்றி?**

நான் கீழ்கண்ட பொறுப்புகளில் இருந்து பணியாற்றியிருக்கிறேன். காசி நகரத்தார் சங்கம் - பொதுக்குழு உறுப்பினர் (2018-2021). மாத்தூர் அறக்கட்டளை - இணைச் செயலாளர் (2018 - 2021). கல்லல் முத்து விநாயகர் கோவில் - துணைத் தலைவர் - கும்பாபிஷேகக் கமிட்டி (2017). கல்லல் நகரத்தார் சங்கம் - பொருளாளர் (2017 -2020). கல்லல் மாத்தூர் கருப்பர் நகரத்தார் Religious and Charitable Trust பொருளாளர் (2015 முதல் இன்று வரை).

மேலும், சிறிய அளவில் சில பணிகளும் செய்துள்ளேன். கல்லல் பெருமாள் கோவிலில் ஆஞ்சநேயருக்கு வெள்ளி அங்கி. மாத்தூர் அறக்கட்டளையின் பொருளாளர் பதவிக் காலத்தில் மயில் வாகனத்திற்கான சிறப்பான நன்கொடை

மற்றும் நிதியைப் பெற்று கொடுத்தேன். கல்லல் முத்து விநாயகர் கோவில் பொருளாளர் பதவிக் காலத்தில் கும்பாபிஷேகத்திற்கு நன்கொடைகள் வசூலித்து அதை முழுமையாக நிர்வகித்தேன்.

**உங்கள் குடும்பம் பற்றி?**

நான் சுவீகாரம் வந்தவன். தந்தையார் திரு. என்.ரெங்கநாதன் செட்டியார். பிறந்த இடத்தில் தந்தையார் திரு. நாச்சியப்ப செட்டியார் அவர்கள், தாயார் திருமதி சௌந்தரம் ஆச்சி. மனைவி திருமதி கே.ஆர். மீனாள் (கல்லல் திரு. ஏ.என்.கண்ணப்ப செட்டியாரின் மகள்).

முதல் மகன் நாச்சியப்பன் கருப்பையா, காக்னிசண்ட் டெக்னாலஜியில் பணியாற்றி வருகிறார். அவரது மனைவி மீனாளும் காக்னிசண்ட் டெக்னாலஜியில் பணியாற்றி வருகிறார்.

இரண்டாவது மகன் கேஆர். சுந்தர், எங்களது தொழிற்சாலையை நிர்வகித்து வருகிறார். அவரது மனைவி வள்ளிக்கண்ணு, எங்களது தொழிற்சாலையில் அட்மினிஸ்டிரேஷன் ஏரியாவை பார்த்துக் கொள்கிறார்.

மூன்றாவது மகன் கேஆர். கண்ணப்பன், மருமகள் பவானி கனடாவில் வங்கியில் பணிபுரிகிறார்கள். மொத்தம் 6 பேரக் குழந்தைகள் இருக்கிறார்கள்.

**தொழில்முனைவோராக விரும்பும் நம் இளைஞர்களுக்கு என்ன ஆலோசனைகள் வழங்க விரும்புகிறீர்கள்?**

சந்தை எப்போதும் ஒன்று போல இருக்காது. ஏற்ற, இறக்கம் இருக்கும். இறக்கத்தின்போது ஆர்டர்கள் இல்லாமல் போகும், நீண்ட நாட்கள் இயந்திரங்கள் ஓடாமல் இருந்தால் பழுதடைந்து விடும். இதற்காக துவண்டு விடக்கூடாது. நீங்கள் தொடர்ந்து செயலாற்றினால், உங்கள் எல்லா பிரச்சனைகளையும் நீங்கள் கடந்துவிடுவீர்கள். கடுமையான விடாமுயற்சியே உங்களை உயிர்த்தெழச் செய்யும்.

உங்கள் கைவினைத்திறனில் தேர்ச்சி பெறுங்கள், சந்தையைப் புரிந்து கொள்ளுங்கள், பின்னர் விரிவாக்கத் தொடங்குங்கள். அறிந்து கொள்வதை தொடர்ந்து செய்யுங்கள். சந்தைப் போக்கை தெரிந்து கொள்ள தொடர்ந்து உங்களை தயார்படுத்திக் கொள்ளுங்கள். தேவைப்படும்போது பிறரின் உதவியை நாடுங்கள். இளம் தொழில்முனைவோருக்கு நிதி, வழிகாட்டுதல் மற்றும் நெட்வொர்க்கிங் அணுகலை வழங்கும் வாராந்திர கூட்டங்களை MSME சம்பந்தப்பட்ட அரசாங்க நிறுவனங்கள் நடத்துகின்றன. இவற்றில் கலந்து கொள்வது உங்கள் யோசனைகளை செழிப்பான வணிகமாக மாற்றும். ■

**ஈமெயில்:** Sethuraman.sathappan@gmail.com,
**மொபைல்:** 9820451259,
**இணையதளம்:** www.startupandbusinessnews.com

# நாட்டரசன்கோட்டை நகரத்தார் நலசங்கம், சென்னை - புதிய நிர்வாகிகள் (2025-27)


KR. சிங்காரம் (தலைவர்)


O.S. கண்ணப்பன் (செயலாளர்)


RM. கணேஷ் (பொருளாளர்)


KL. மீனாட்சிசுந்தரம் (உப தலைவர்)


AN.மோகன் (உப தலைவர்)


S.சண்முக சிவசுப்பிரமணியன் (துணைச் செயலாளர்)

## செயற்குழு உறுப்பினர்கள்


V. கண்ணப்பன்


S. இளங்கோ


AR. சங்கரநாராயணன்


V. பழனியப்பன்


L. ஜமீன்தார் கணேசன்


K.S. கண்ணப்பன்


S. மணிகண்டன்


RM. ஐயப்பன்


V. கணேசன்



# அமெரிக்காவில் கன்காட் சிவா முருகன் கோவில் குடமுழுக்கு

சோழர், பாண்டியர் கோவில் கலைகளையும், செட்டிநாட்டு கோவில் கலைகளையும், நவீன தொழில் நுட்பத்தையும் கொண்டு சிறப்பாக கட்டப்பட்ட கன்காடு சிவா முருகன் கோவிலின் குடமுழுக்கு 2025, மே மாதம் ஒன்பதாம் தேதி நடைபெற்றது. குடமுழுக்கு விழாவில் அமெரிக்காவின் பல மாநிலங்களில் இருந்தும், இந்தியா மற்றும் பிற நாடுகளில் இருந்தும் பலர் வந்து கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. சுமார் 5000 பேர் இந்த குடமுழுக்கைக் கண்டுகளித்துள்ளனர்.

பல்வேறு சிறப்புகளைக் கொண்ட இக்கோயில் முதன் முதலில் சிவசுப்பிரமணிய சுவாமி என்பவரால் தொடங்கப்பட்டது. இவருக்கு அமைதிக்கான விருதை வழங்கியுள்ளது.

1957-ஆம் ஆண்டு இவர் வட அமெரிக்காவில் முதன் முதல் ஒரு இந்து கோவிலை கலிபோர்னியாவில் ஒரு வீட்டில் ஏற்படுத்தினார். பின்னர் பக்தர்களின் வருகை அதிகரித்ததால் கன்காடு நகரத்தில் இருந்த ஒரு கிரேக்க பழமையான கிறித்துவ தேவாலயத்தை விலைக்கு வாங்கி 1987-ஆம் ஆண்டு இக்கோவிலை நிறுவினார். அவர் பின்னர் ஹவாய் தீவில் பெரிய அளவில் ஆலயம் நிறுவியதால், இதனை அப்பகுதியை சேர்ந்த பலர் சேர்ந்து விலைக்கு வாங்கினர். 1995-ஆம் ஆண்டு பொது நிர்வாகத்தில் கன்காட் சிவா முருகன் கோவில் என பெயரிடப்பட்டு தொடங்கப்பட்டது.

1998-இல் இருந்து 2010-ஆம் ஆண்டு வரை அருகில் உள்ள இடங்களை வாங்கி சேகரித்தனர். 2011-ஆம் ஆண்டு புதிய விரிவான கோவில் கட்டுவது என தீர்மானிக்கப்பட்டது. 21.8.2016 அன்று கோவிலுக்கான பூமி பூஜை நடைபெற்றது. 2000 பக்தர்கள் கலந்து கொண்டனர். 7000 சதுர அடியில் கட்டிடம் கட்ட தீர்மானிக்கப்பட்டது. 5.9.2024-இல் பாலாலயம் செய்யப்பட்டது. சிற்பக்கலையில் அனுபவம் மிக்கவரும், சிற்பக்கலையில் முனைவர் பட்டம் பெற்றவருமான பி. தட்சிணாமூர்த்தி இக்கோவிலை வடிவமைத்து கட்டினார்.




தமிழ்ச் செம்மல்
முனைவர் சே.குமரப்பன்

அமெரிக்காவில் உள்ள கட்டிட வடிவமைப்பு நிபுணர் சார்டுலால் (Sharad Lal), கட்டிட பொறியாளர்கள் அருண் ஷா ஆகியோரும் இணைந்து செயல்பட்டனர். நவீன தொழில்நுட்பங்களைக் கொண்டு கிரானைட் கற்களால் வடிவமைக்கப்பட்டன. நன்கு செதுக்கப்பட்ட தூண்கள், அழகாக வடிவமைக்கப்பட்ட சிலைகள் அழகு மிகுந்த ராஜகோபுரம், சிறப்பு மிக்க விமானம் ஆகியன வடிவமைத்து கட்டப்பட்டன.

02.06.2017 அன்று லேனா விலக்கில் கல் திருப்பணி பூஜை நடைபெற்றது. காரைக்குடியைச் சார்ந்த கோவில் கட்டுமானக்குழு பொறுப்பாளர் மீனா ரவி இதில் கலந்து கொண்டார். 26.1.2019 அன்று வாஸ்து பூஜை நடைபெற்றது. 2024-ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம், 5-ஆம் தேதி







பல்வேறு பூஜைகள் நடைபெற்று பாலாலயம் செய்யப் பெற்றது. அன்றிலிருந்து புதிய இடத்தில் தெய்வ வழிபாடு தொடங்கியது.

குடமுழுக்கு விழாவிற்கான யாகசாலைகள் 2025-ஆம் ஆண்டு, மே மாதம், இரண்டாம் தேதி, வெள்ளிக்கிழமை தொடங்கி ஒன்பது நாட்கள் நடைபெற்றன. 2025-ஆம் ஆண்டு, மே மாதம், 9-ஆம் தேதி, வெள்ளிக்கிழமை, காலை 9.30 மணி அளவில் ராஜகோபுரத்திற்கும், விமானத்திற்கும் குடமுழுக்கு நடைபெற்றது. 10.00 மணிக்கு கோவிலுக்குள் உள்ள தெய்வங்களுக்கு கும்பாபிஷேகம், ஆராதனை நடைபெற்றது. அன்று மாலை வள்ளி தெய்வானை திருக்கல்யாணம். இரவு சுப்பிரமணியர் வள்ளி தெய்வானை திருவீதி உலாவும் நடைபெற்றன.

யாகசாலைகள் செட்டிநாட்டுக் கோவில்களில் இருப்பது போல் சிறப்பாக அமைக்கப்பட்டன. செட்டிநாட்டு கோவில்களில் நடப்பது போலவே பல கால யாக பூஜைகள், நாதஸ்வரம், தேவாரம், திருமுறை முழங்க வேத விற்பண்ணர்களோடு சிறப்பாக நடைபெற்றது.

பிள்ளையார்பட்டி பிச்சை குருக்கள் தலைமையில் அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்கள் மற்றும் பல்வேறு நாடுகளில் இருந்து வந்த 40 சிவாச்சாரியார்களுடன் யாகசாலை மற்றும் குடமுழுக்கு சிறப்பாக நடைபெற்றது. சொ.சொ.மீ. சுந்தரம் அவர்கள் சிறப்புரையாற்றி நேர்முக வர்ணனை செய்தார். அவர் பேசுகையில் முருகனுக்கு ஆறுபடை வீடுகள் உண்டு. ஏழாவது படை வீடாக கன்காட் முருகன் கோவில் திகழும் என்று கூறினார்.

கன்காட் நகர அமைப்பு 2025, மே, ஒன்பதாம் தேதியை சிவா முருகன் கோவில் குடமுழுக்கு தினம் என அறிவித்து பெருமைப்படுத்தியது. கன்காட் நகர் அமைப்பு மற்றும் கன்காட் தொழில் வர்த்தக கழகம் சிவா முருகன் கோவில் பொருளாதார வளர்ச்சிக்கு உதவி உள்ளதாகவும், நகரை அழகுபடுத்தியதாகவும் கூறி கோவிலுக்கு விருது ஒன்றையும் வழங்கி உள்ளது குறிப்பிடத்தக்கது. இந்து கோவிலை அமெரிக்கர்கள் பாராட்டுவது மிகவும் சிறப்பு வாய்ந்தது.



பொதுவாக அமெரிக்காவில் உள்ள கோவில் கோபுரங்கள் எல்லாம் வெள்ளை அல்லது வெளிர்மஞ்சள்நிறத்தில் வண்ணம் பூசப்பட்டிருக்கும். முதன்முறையாக செட்டிநாட்டு நகர கோவில்கள் ஒன்பதில் இருப்பதைப் போல் முதல் ஐந்து வண்ணங்கள் கொண்ட கோபுரம் அமெரிக்காவில் கன்காட் முருகன் கோவில் கோபுரம் என்பது பெருமை சேர்ப்பதாகும். 2011-ஆம் ஆண்டு தொடங்கி சுமார் 13 ஆண்டுகளாக பல்வேறு பணிகள் நாளொருமேனி பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து 2025-ல் குடமுழுக்கு கண்டுள்ளது. மேலும், கோவில் திருப்பணிக்கு தேவையான நிதி சேகரித்து கடன் இல்லாமல் குடமுழுக்கு நடத்தியது பாராட்டுக்குரியது.

இக்கோவிலை உருவாக்கிய சிவசுப்ரமணியசாமி, கவ்வை ஆதீனம், ஹெச்.சி.எல். டெக்னாலஜி ரோஷினி நாடார் மல்கோத்ரா, கன்காட் நகர மேயர் கரோலின் (Carolyn), கன்காட் நகர அதிகாரிகள், புதுக்கோட்டை புவனேஸ்வரி அம்மன் கோவில் சாமி ஆகியோர் முக்கிய விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

குடமுழுக்கின் போது யாகசாலை தொடங்கியது முதல் குடமுழுக்கு நடைபெற்றது வரை 10 நாட்களுக்கு பக்தர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. குடமுழுக்கு விழாக் குழுத்தலைவர் - ஆதப்பன் நல்லப்பன், பொருளாளர் - உடையப்பன், துணைத் தலைவர் - ராஜகோபால், ரவி நடேசன், மீனா ரவி அண்ணாமலை, ஏஎல். சுப்பிரமணியன், செந்தில் சிதம்பரம், வள்ளியப்பன், நடராஜன் Lila Backford ஆகிய பொறுப்பாளர்கள் அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாகச் செய்தனர்.

கோவில் 7000 சதுர அடியிலும், 5000 சதுர அடியில் கலை அரங்க மண்டபமும் (Cultural Hall) 15 மில்லியன் டாலர் செலவில் கட்டப்பட்டுள்ளது. டாக்டர் குணசேகரன் குடும்பத்தார், எச்.சி.எல். டெக்னாலஜி ரோஷினி நாடார் மல்கோத்ரா ஆகியோரின் அறக்கட்டளையில் இருந்து மூன்று மில்லியன் டாலர் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், கல்லலைச் சேர்ந்த ஆண்டி நல்லப்பன் - பிரபாவதி குடும்பத்தார், டாக்டர் கோயல் குடும்பத்தார், கண்டவராயன்பட்டி, சாத்தப்பன் - மீனா குடும்பத்தார் பெருநிதி வழங்கியுள்ளனர்.


மகன்லால்
வைரம் & தங்கம்
We Offer Diamonds
Grade by
GIA
Authorised
Forevermark Jeweller
FOREVERMAR


Maganlal
a precious legacy
Elegant
Jewelry For the
Elegant
moments...
நேசங்களோடு வளர்ந்த பந்தம்... காலங்களோடு கலந்த பாரம்பரியம்...!
MAGANLAL MEHTA & CO
மகன்லால் மேத்தா & கோ
Diamond & Gold Jewellery Private Limited
#51, AVM Building, Kallukatti North, Karaikudi - 630 001
# 27/43, North Usman Road, T.Nagar, Chennai - 600 017
we@maganlalmehta.com
www.maganlaldiamonds.com
88 YEARS
CUSTOMER CARE
+91 888 111 5555
+91 888 111 4555

# இந்தியாவின் வளர்ச்சியில் இஸ்ரோவின் பங்கு – 2

## விண்வெளி ஆராய்ச்சியின் குட்டிக்காலங்கள் பாகம் - 1

சென்ற கட்டுரையில் நாம் விண்வெளி முயற்சிகளில் முதல் படியாகவும் அடித்தளமாகவும் அமைந்து Space Race என்ற விண்வெளி ஓட்டப்பந்தயத்தை துவங்கி வைத்த, 1957-இல் சோவியத் யூனியன் அனுப்பிய, ஸ்புட்னிக் என்ற விண்கலம் குறித்து அறிந்தோம். இதன்பின்னர் கடந்த 68 ஆண்டுகளில் பல நாடுகள் விண்வெளி ஆய்வில் பல அசாத்தியமான வியத்தகு சாதனைகளை நிகழ்த்திக்காட்டி நம்மை ஆச்சரியத்திலும் வியப்பிலும் ஆழ்த்தி இருக்கின்றன. இதில் இந்தியாவும் தன் பங்கை ஆற்றியிருக்கிறது என்பதில் நாம் பெருமை கொள்ளலாம். இவை எல்லாம் மனித சக்தியின் எல்லையில்லா உருவாக்கலுக்கு (Limitless Human Creativity) உதாரணமாக விளங்குகின்றன என்றால் மிகையாகாது.

இந்த சாதனைகளைப்பற்றியும் அதில் நமது தேசத்தின் பங்கைப்பற்றியும், அறியும் முன்பு விண்வெளி ஆராய்ச்சியின் துவக்கத்தைப் பற்றியும், அது எப்படி சாத்தியமானது என்பது குறித்தும், அதன் காரணகர்த்தாக்களைப் பற்றியும் அறிந்து கொள்வது அவசியமாகிறது.

நான் முன்னர் குறிப்பிட்டபடி மனித இனம் வானத்து விந்தைகளை அண்ணாந்து பார்த்து வியந்து கொண்டிருந்த பொழுது ரைட் சகோதரர்கள் (Wright Brothers) ஆர்வில் ரைட் மற்றும் வில்பர் ரைட் இருவரும் கடும் முயற்சிகளுக்குப்பின் அமெரிக்காவில் கிட்டிஹாக் கடற்கரையில் டிசம்பர் 17, 1903 அன்று முதன் முதலாக காற்றை விட கனமான இஞ்சினால் இயக்கப்பட்ட விமானத்தை விண்ணில் செலுத்தி அதில் வெற்றியும் கண்டு விண்வெளிப் பயணத்தின் முதல் படியை துவக்கி வைத்தார்கள்.

விண்வெளிப் பயணங்கள் ஏன் இவ்வளவு சிரமமான காரியமாக இருக்கிறது என்று நீங்கள் கேட்கலாம். தரையில் நாம் செல்லும் பயணங்கள் போல் அல்லாமல் விண்வெளிப் பயணங்களுக்கு இடையூறாக இருப்பவை இரண்டு விஷயங்களாகும். ஒன்று நம் பூமியின் புவியீர்ப்பு விசை (Earth's Gravitational Force). மற்றது நம் பூமியைச் சுற்றியுள்ள வாயு மண்டலம் (Atmosphere).




ஆர்வில் ரைட் மற்றும் வில்பர் ரைட்

விண்ணில் அனுப்பப்படும் எந்த சாதனமும் புவியீர்ப்பு விசையை மீறித்தான் மேலெழும்ப முடியும். வாயு மண்டலம் விண்வெளி பாதையில் காற்றின் ஒரு கடல் (An Ocean of Air) என்றே அழைக்கப்படுகிறது. கடலில் எப்படி தண்ணீர் நிறைந்து அதில் செல்லும் கப்பல் அல்லது படகுகள் முன் செல்லும் வேகத்திற்கு எதிர்வினையாற்றுகிறதோ (Water offering resistance to the forward movement) அது போலவே முன்னேற முயற்சிக்கும் விண்வெளி சாதனங்களுக்கு வாயு மண்டலம் எதிர்ப்பையும் அதை மீறி செல்லும்போது உஷ்ணத்தையும் (Aerodynamic Heating), பாரத்தையும் (Aerodynamic Loads), உதறல்களையும் (Aerodynamic Buffeting) பரிசாக வாரி வழங்குகிறது.



லெ. முத்து
இணை இயக்குனர்
(ஓய்வு) இஸ்ரோ.

இதல்லாது ராக்கெட் தன் எடையை செங்குத்தாக தூக்கி செல்லும் திறனையும் அதை விட அதிகமாக தொடர்ச்சியாக முன்னேறிச் செல்லும் அபரிமிதமான உந்து சக்தியையும் (Capability to lift its own weight and extra energy to continuously move forward) படைத்ததாக நிர்மாணிக்கப்பட வேண்டும். இந்த அபரிமிதமான சக்தியை தரக்கூடிய பொருள் கண்டுபிடிக்கப்படும் வரை விண்வெளி முயற்சிகள் வெறும் பேப்பரில் தான் இருந்தன.




திப்பு சுல்தான் பயன்படுத்திய ராக்கெட்

ஆரம்ப காலங்களில் நமக்குத் தெரிந்த ஒரே அபரிமிதமான சக்தியை தர வல்ல பொருள் வெடிமருந்தாகும் (Gun Powder). இது பீரங்கிகளில் இரும்பு உருண்டைகளை பல அடி தூரத்திற்கு தூக்கி எறியும் சக்தி கொண்டதாக இருந்தது. சீனர்கள் சிறிய மூங்கில் குழாய்களில் இதை அடைத்து வாண வேடிக்கைக்காக விண்ணில் செலுத்தி மகிழ்ந்ததாக அறிகிறோம்.



திப்பு சுல்தான்



வில்லியம் காங்ரீவ்

19-ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் தான் ராக்கெட்களின் வளர்ச்சி வேகம் பிடிக்க துவங்கியது. திப்பு சுல்தான் ஆங்கிலேயர்களுக்கு எதிரான மைசூர் யுத்தத்தில் சிறிய ராக்கெட்களை உபயோகித்திருக்கிறார். வெள்ளையரான வில்லியம் காங்ரீவ் என்பவர் இந்த ராக்கெட்டுகளின் Design-ஐ மேலும் மேம்படுத்தி ஐரோப்பிய யுத்தங்களில் காங்ரீவ் ராக்கெட்டுகள் என்ற பேரில் உபயோகப்படுத்தியதாக அறிகிறோம். ஆனால், மேற்படி ராக்கெட்டுகள் அனைத்தும் விண்வெளியை கடந்து செல்லும் திறன் படைத்தவை அல்ல.

அப்படிப்பட்ட ராக்கெட்டுகளை குறித்த எண்ணம் முதன்முதலில் Jules Verne, H.G.Wells போன்ற Fiction Writers என்று சொல்லக்கூடிய வருங்கால விஞ்ஞான முன்னேற்றங்களை உணர்ந்து அதை தங்கள் நூல்கள் மூலம் வெளிப்படுத்திய அறிவியலாளர்களின் கற்பனையிலே தான் உதித்தது. இவர்கள் பீரங்கிகளில் வெடி



Jules Verne



H.G.Wells

மருந்தை நிறைத்து அதன் மேல் மனிதனை அமரச்செய்து வெடிக்கும் போது மனிதனை விண்வெளிக்கு செலுத்த முடியும் என்று நம்பினார்கள். நடைமுறையில் இது சாத்தியமானதல்ல. ஏனெனில் நமக்கு தேவை Controlled and sustained release of energy.

அது எப்படி கிடைத்தது, அதை யார் உலகுக்கு உணர்த்தினார்கள் என்பதை வரும் கட்டுரைகளில் காணலாம்.

அதன் தொடர்ச்சியாக ராக்கெட் என்ற பதம் எப்படி வந்தது என அறிய ஆவலாக இருப்பீர்கள். Rocket என்ற பதம் இத்தாலிய மொழியில் உள்ள “Rocchetta” என்ற சொல்லிலிருந்து உதயமானது. இதன் பொருள் “Bobbin” அல்லது “Little Spindle” என்பதாகும். (தொடரும்)

# அட்டையை அலங்கரிக்கும் நல் முத்துக்கள்

## 12 ஆம் வகுப்பு: CBSE:

PL.கீர்த்தனா (491/500) பெற்றோர் : ஆ.பழனியப்பன் – பழ.லதா, ஊர்: நெற்குப்பை, கோவில்: இளையாற்றங்குடி – கிங்கிணிக்கூருடையார், சந்தானம் வித்யாலயா, திருச்சி. (பள்ளியில் முதலிடம்), M.சஹானா (479/500) பெற்றோர் : NS. மணிமாறன் – M.சிவகாமி, ஊர்: நெற்குப்பை, கோவில்: இரணிக்கோயில், சின்மயா வித்யாலயா, டைலர்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை, C. விஷாலினி (462/500) பெற்றோர் : PL. சந்திரசேகர் – C. ராணி மெய்யம்மை, ஊர் : மேலைசிவபுரி, கோவில்: இளையாற்றங்குடி – பெருமருதூருடையார், ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளி, மல்லேஷ்பால்யா, பெங்களூரு. M.முருகு சீனிவாசன் (542/600) பெற்றோர்: S.மெய்யப்பன் – S. பேபி, ஊர்: கல்லுப்பட்டி, கோவில்: பிள்ளையார்பட்டி, சர் ஐசக் நியூட்டன் பள்ளி, நாகப்பட்டினம்.

# நானிலம் போற்றும் நகரத்தார் வரலாறு 48



## ஐரோப்பியர்களுடன் வணிகம் - எதிர்நீச்சலில் நகரத்தார்களும் வணிகர்களும், வென்றார்களா?



மா.இளங்கோ, குழிபிறை, 9842260955

விசயநகரப் பேரரசு காலத்தில்தான் போர்த்துகீசியர்களும், டச்சுக்காரர்களும் தமிழகத்திற்கு வந்தனர். விசயநகர அரசின் நாயக்கர்களின் ஆதரவைப் பெற்றனர். நாயக்கர்கள் தங்களுடைய ஆட்சிக் காலத்தில் உள்நாட்டு வெளிநாட்டு வணிகங்கள் வளர, சோழ மன்னர்கள் அளவுக்கு வணிகர்களுக்குத் துணை நிற்கவில்லை. உள்நாட்டு வணிகர்களை ஆதரித்ததாகத் தெரியவில்லை. இந்தச் சூழ்நிலையில் தமிழகத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்திய விஜயநகர பேரரசின் வீழ்ச்சி பதினாறாம் நூற்றாண்டின் இறுதியில் தொடங்கியது. இந்தக் காலப் பகுதியில் தான் ஐரோப்பிய வணிக நிறுவனங்கள் இந்தியாவை நோக்கி வரத் தொடங்கின. இந்தியாவில் வணிகம் செய்யும் நோக்கத்தில் தான் ஐரோப்பிய - இங்கிலாந்து வணிகர்கள் வந்தனர். வந்தவர்கள் வணிக நோக்கம் என்ற அளவில் மட்டும் இல்லாமல் இந்தியாவை ஆளத் தலைப்பட்டனர். ஐரோப்பியர்களின் போர் கருவிகள், வெடி மருந்துகள், போர் செய்யும் நுட்பங்களை எதிர்கொள்ள இந்திய அரசர்கள் மற்றும் சிற்றரசர்களால் இயலவில்லை. மேலும், தொழில் புரட்சிக்கு தயாராகிக் கொண்டிருந்த ஐரோப்பிய நாடுகளில் இருந்து புதுமையான பொருட்கள் வரத்தொடங்கின. எனவே, வெளிநாட்டு வணிகம் போர்த்துகீசியர்கள், டச்சுக்காரர்களின் கைகளுக்குள் சென்று விட்டது.

கால மாற்றத்திற்கேற்ப இந்தியப் பொருட்கள் புதுமைகளைப் பெறவில்லை. விளைபொருட்களும், மூலப்பொருட்களும் ஏற்றுமதி செய்யப்பட்டன. அதாவது ஐரோப்பியர்கள், ஆசியப் பகுதிகளில் இருந்து மூலப்பொருட்களை தம் நாட்டிற்குக் கொண்டு சென்றனர். பஞ்சை அனுப்பி, துணியாகப் பெற்றுக் கொண்டோம். மூலப்பொருட்கள் மாற்றம் பெற்று உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களாக இறக்குமதி செய்யப்பட்டன. அதிகச் சுமைகளுடன் விரைந்து செல்லும் நீராவிக் கப்பல்களுக்கு இணையாக தமிழகத்தின் பாய்மரக் கப்பல்களால் எதிர்நீச்சல் போட முடியவில்லை. இந்த அவலமான சூழலை இந்திய வணிகர்களால் வெல்ல இயலவில்லை. தளர்ச்சியுற்றனர். நகரத்தார்களும் விதிவிலக்கல்ல. ஐநூற்றுவர் அமைப்பு செயலிழக்கத் தொடங்கி விட்டது. இந்தியா தனது கடல் வணிகத்தை, தனது வலிமையை இழக்கத் தொடங்கிவிட்ட காலம். நகரத்தார்களும் சறுக்கல்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. ஐரோப்பியர்கள் இந்தியாவில் காலூன்றி விட்டனர்.

இருந்த போதிலும் மேலே கண்ட சூழல்களைக் கடந்து 1800-ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் நகரத்தார்களின் வணிகப் போக்கு மாறத் தொடங்கி விட்டது. 1700 - 1800 வரையில் நகரத்தார்களின் பொருளீட்டும் அளவானது மிகுதியான ஈட்டத்தைத் தந்ததாகத் தெரியவில்லை. ஏனெனில், அக்காலம் வரையில் மிகுதியான அறப்பணிகள் செய்ததற்கான பதிவுகள் இல்லை. 1800 வரையில் உள்ள காலம் நகரத்தார்களின் வரலாற்றுப் பக்கங்கள் சிறப்பாக இருந்ததா, இல்லையா என்பதை அறிவதற்கான பதிவுகள் குறைவே. 1800-க்குப் பிறகு நகரத்தார்களின் வரலாற்றில் மறுமலர்ச்சிக் காலம் எனலாம். ஆங்கிலேயர்கள் வருகைக்குப் பின்னரே நகரத்தார்கள் வாழ்க்கை முறை புதிய மாற்றங்களைப் பெறத் தொடங்கியது.

### தம்மை வீழ்த்திய காலத்தை, வென்றவர்களே நகரத்தார்கள்!

இந்தியவிற்குள் முதலில் வந்தவர்கள் ஆங்கிலேய வணிகர்களே. ஆங்கிலேயர்கள் இந்தியா உள்ளிட்ட தென்கிழக்கு ஆசிய நாடுகளிடம் இருந்து பெற விரும்பியது இங்குள்ள மூலப் பொருட்களையே. இரும்பு, செம்பு, ஈயம், நெல், அரிசி, பருத்தி, உப்பு, வாசனைப் பொருட்கள் போன்றவை ஆகும். ஆங்கிலேயர்களுடன் இணைந்து செயல்பட்ட நகரத்தார்கள் மேற்கண்ட பொருட்களைத் தமது வணிகப் பொருட்களாகக் கொண்டனர்.

நகரத்தார்களின் எழுச்சியையும், வீழ்ச்சியையும் வரலாற்றுப் பதிவுகள் மூலமே அறிய முடியும். இது வரை கிடைத்த நகரத்தார்கள் தொடர்பான கல்வெட்டுகள் அனைத்துமே அறப்பணிகள், வணிக முனைப்புகள், தொடர்பானவையாக மட்டுமே உள்ளன.எனவே, அறப்பணிகளைக் கொண்டு வாழ்க்கை முறைகளையும் செழுமையையும் கணக்கிட முடியும் என்றால் அது நகரத்தார்களுக்குப் பெரிதும் பொருந்தும். பிறரை வீழ்த்துவதையும் வெற்றி கொள்வதையும் தமது வாழ்க்கையின் வெற்றியாகக் கொள்ளவில்லை. அனைவரையும் ஒருங்கிணைத்து அனைவரும் வெற்றி பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்ற முனைப்பே

உ சிவமயம் ஸ்ரீராமஜெயம்

**செட்டிநாடு வத்தல்கள் கிடைக்கும்**

எங்களிடம் தேன்குழல் வத்தல், கிள்ளு வத்தல், கரண்டி வத்தல், சின்ன வெங்காய வடகம் (கரிவடகம்), பிரண்ட (முறுக்கு வத்தல்), கத்திரி வத்தல், மாவத்தல், அவரை வத்தல், கேப்பை வத்தல், கேரட் வத்தல், பீட்ரூட் வத்தல், தக்காளி வத்தல், கறிவேப்பிலை வத்தல் ஆகிய சுவைமிகு வத்தல்களும், எல்லா வகை பொடி வகைகளும், வேங்கரிசி மாவு, உப்புக்கண்டம், மற்றும் தடுக்கில் பின்னிய நடுவீட்டுக் கோலம் கிடைக்கும்.

தொடர்பிற்கு: லட்சுமி மணிகண்டன், காரைக்குடி
8508392087 / 8778527165 / 8760742590

ADVT

நகரத்தார்களிடம் இருந்திருக்கிறது. அந்த எண்ணத்தின் அடிப்படையில்தான் அவர்கள் மேற்கொண்ட அளவிறந்த அறச்செயல்களைத் தாம் நாம் இன்று காண்கிறோம்.

அவ்வகையிலான அறச்செயல்கள் தேக்கமடைந்த காலமாக 1600 - 1800 வரையிலான காலம் இருந்திருக்கிறது. 1800-க்குப் பிறகு சிறிது சிறிதாக நகரத்தார்களின் வாழ்க்கை முறை புதிய மாற்றங்களைப் பெறத் தொடங்கி விட்டது. செட்டிநாட்டுப் பகுதி தமிழகம், இந்தியா என்ற எல்லைகளைக் கடந்து பர்மா, தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, வியட்நாம் என அவர்களுடைய வணிகப் பரப்பு விரிந்தது.

ஆங்கிலேயர்களுடனும் அவர்களுடைய கிழக்கிந்தியக் கம்பெனியுடனும் நகரத்தார்கள் கொண்ட நல்லுறவே இந்த வெற்றிக்குக் காரணம்.

இந்தியா செல்வச் செழிப்பில் திழைத்திருக்கும் நாடு என்ற புகழ் வெளிச்சம் உலகம் முழுவதும் பரவக் காரணமாக இருந்தவர்கள் வணிகர்களே. அவர்களில் இந்தியர்களும் உலக வணிகர்களும் அடங்குவர். உலக வணிகர்கள் இந்தியத் துணைக் கண்டத்தைச் செல்வம் கொட்டிக் கிடக்கும் நாடாக அறிந்திருந்தனர். எனவே வணிகம் மேற்கொள்ள இந்தியாவை நோக்கி வந்தனர். ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் இங்கு கொட்டிக் கிடக்கும் செல்வங்களின் மீது ஆவல் கொண்டனர் (Empire and Merchant networks - the case of the Chettiars by C J Kuncheria) அந்தச் செல்வங்களில் பங்கு கொள்ள விரும்பியவர்கள் வணிகம் செய்தனர், போர் தொடுத்தனர், ஆட்சியைக் கைப்பற்ற நினைத்தனர். இந்தியா மீது தொடுக்கப்பட்ட போர்கள் அனைத்துமே இங்கே கொட்டிக் கிடக்கும் செல்வங்களைக் கவர்ந்து செல்லவே.

செல்வங்கள் மீது ஆசை கொண்டு வந்தவர்கள் காலப்போக்கில் நாட்டை ஆளவும் தங்களின் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளவும் முயற்சி செய்தனர். தங்களுடைய முயற்சியில் வெற்றியும் கண்டனர். இந்தியா செல்வம் மிகுந்த நாடாக இருந்தது உண்மையே. ஆனால் இந்தியர்கள் செல்வந்தர்களாக இல்லை. கல்வியறிவு இன்மை, சாதிப் பாகுபாடு, தீண்டாமை, தன் முயற்சி இல்லாமை போன்ற ஒரு நீண்ட இயலாமைப் பட்டியலைத் தன்னகத்தே கொண்டவர்களாக இந்தியர்கள் இருந்தனர் என்பதே உண்மை.

இந்தியர்கள் மீது போர் தொடுத்தவர்கள் அரும்பெரும் முயற்சிகள் ஏதும் இல்லாமலேயே இந்தியாவை வீழ்த்தினர் என்பதே அதற்குச் சான்று. உள்ளத்தைச் சுடும் ஓர் உண்மை மட்டுமே போதும் எனக் கருதுகிறேன். 1947-ல் இந்தியா விடுதலை அடைந்த பொழுது இந்திய மக்கள் தொகை 30 கோடி என ஒரு கணக்குச் சொல்கிறது. 'முப்பது கோடி முகம் உடையாள்' என்பது இந்தியாவிற்குச் சொல்லப்பட்ட வரி. ஆனால், அப்பொழுது இந்தியாவை ஆட்சி செய்த வெள்ளையர்களின் எண்ணிக்கை வெறும் 6000 மட்டுமே. இந்தச் சூழ்நிலையில் பொருளீட்டுவதை மட்டுமே தமது நோக்கமாகக் கொண்டவர்களாக நகரத்தார்கள் இல்லை. பொருளீட்டும் கலைகளில் வல்லவர்களாக இருந்த அதே நேரத்தில் அறப்பணி செய்பவர்களாகவும் இருந்துள்ளனர். அந்த மனப்பாங்கு இன்று வரையில் தொடரக் காணலாம். நகரத்தார்கள் உள்ளிட்ட அனைத்து வணிகச் சமூகங்களும் காலத்திற்கேற்ப தமது வணிக நடவடிக்கைகளை தகவமைத்துக் கொண்டனர். நகரத்தார்களைப் போலவே இந்தியா முழுவதிலும் வணிகச் சமூகங்கள் பல உள்ளன. ஒவ்வொரு வணிகச் சமூகமும் மிக நீண்ட வரலாற்றுப் பின்னணியைக் கொண்டுள்ளன. அவர்கள் ஆங்கிலேயர்களுடன் கொண்ட உறவும் அப்படிப்பட்டதே. ஆங்கிலேயர்களுடன் இரண்டறக் கலந்தது.

19-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆங்கிலேயர்களின் ஆளுமைக்குள் இந்தியா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகள் வந்துவிட்டன. அதே காலப்பகுதியில் 19-ம் நூற்றாண்டில், அதாவது 1850-ம் ஆண்டளவில் நகரத்தார்களின் வணிக வளர்ச்சி புதிய பாய்ச்சலைப் பெற்றது. அதற்கான காரணங்களை டேவிட் வெஸ்ட் ருட்னர் (David West Rudner, Caste and Capitalism in Colonial India, University of California Press, 1994) கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்.

1) ஆங்கிலேயர்கள் பர்மாவை 1850-லும் 1860-ல் மலேசியாவையும் தமது ஆளுகைக்குக் கீழ்க் கொண்டு வந்தனர். ஆங்கிலேயர்களின் ஆட்சிப் பகுதிகளுக்கு நகரத்தார்கள் சென்று வரவும், தொழில் தொடங்கவும் முழுமையாக அனுமதித்தனர். எனவே, எந்தத் தடையும் இல்லாத சூழ்நிலை நிலவியது.

2) 1865-ஆம் ஆண்டிற்குப் பின் சூயஸ் கால்வாய் பயன்பாட்டிற்கு வந்து விட்டது. இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாட்டினரின் வணிகச் செயல்பாடுகள் அதிகமாகத் தொடங்கி விட்டன. இதனால் இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாட்டுக் கலங்கள் ஆப்பிரிக்காவைச் சுற்றிக் கொண்டு வரவேண்டிய சூழ்நிலை இல்லை.

காலமும் எரிபொருளும் மிச்சமாயின. கப்பல் போக்குவரத்து அதிகமாயின.

3) பிரிட்டிசார்கள் தங்கள் வங்கி முறைகளை தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகள் மற்றும் இந்தியா என அவர்களின் ஆளுமைக்குட்பட்டப் பகுதிகளில் அறிமுகப்படுத்தினர். இதனால் நகரத்தார்கள் மரபு வழியிலான அல்லது பழமையான முதலீடுகள் விலக்கிக் கொள்ளப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால் ஆங்கிலேயர்களின் நிதிச் சேவைகளைப் பயன்படுத்தத் தொடங்கினர்.

4) 1850-ல் அன்றைய சென்னை மாநிலத்தை (மாகாணம்) ஆண்ட ஆங்கிலேயர்கள் கடைப்பிடித்த ஒரு கொள்கை நகரத்தார்களுக்குச் சார்பாக இருந்தது. அக்கொள்கையின்படி உள்நாட்டில் வேளாண்மை மற்றும் தொழில் துறைகளில் முதலீடு செய்ய நகரத்தார்கள் அனுமதிக்கப்பட்டனர்.

சென்ற சூன் மாத இதழில் டச்சுக்காரர்கள் என்ற பகுதியில் 'டச்சுக்காரர்கள்' ஆலந்து (Holland) நாட்டைச் சேர்ந்தவர்கள் எனத் திருத்தி வாசிக்கவும். சுட்டிக்காட்டிய திரு. அருண் செங்குட்டுவன் (சொக்கனேந்தல்) அவர்களுக்கு நன்றி.

**அன்பான வேண்டுகோள்;**

இம்மாத இயலில் மட்டுமல்ல மற்ற தொடர்களிலும் தரப்பட்ட குறிப்புகள் அனைத்தும் தரவுகள் அடிப்படையிலானவை. அந்தத் தரவுகளில் மேற்கோள் நூல்களில் இருந்து பெறப்பட்டவை சிலவே. மற்றவை நான் சேகரித்த நமது பழைய குறிப்பேடுகள், பேரேடுகள், கடிதங்கள், ஓலை ஆவணங்களில் இருந்தே பெறப்பட்டன. பல நூறு ஆவணங்களைப் படித்து, குறிப்பெடுத்து கட்டுரைக்குத் தேவையனவற்றைத் தந்துள்ளேன். ஏனெனில், தவறான செய்திகள் அன்பர்களுக்குத் தரக்கூடாது என்பது முதலாவது. அதுமட்டுமல்லாது தற்புகழ்ச்சிக்காக தற்பெருமைக்காக எந்த செய்தியும் மிகைப்படுத்தக் கூடாது எனக் கருதுகிறேன். நகரத்தார்கள் வரலாற்றில் நம்மிடம் உள்ள மேற்கண்ட ஆவணங்கள் ஏராளம். அவையே போதுமானவை. ஆனால் அவற்றை நாம் தான் பாதுகாக்கத் தவறி விட்டோம். பாதுகாக்கத் தயங்குகிறோம். இனியேனும் இருப்பவற்றைக் காப்பாற்றலாமா?

### மாறி வந்த பொருளியல் சூழல்களைத் தமக்கு ஏற்றவாறு நகரத்தார்கள் எவ்வாறு தம்மைத் தகவமைத்துக் கொண்டனர்?

காலத்திற்கு ஏற்ற வகையில் நகரத்தார்கள் வேளாண்மை பெருந்தோட்டங்கள் (Estate), சுரங்கத் தொழில் என தென்கிழக்கு ஆசியப் பகுதிகளில் தமது முதலீடுகளைச் செய்யத் தொடங்கினர். (David West Rudner, Caste and Capitalism in Colonial India, University of California Press, 1994) செயல்திறன், மேலாண்மைத் திறன், நேர்மை, மன ஊக்கம் போன்ற குணங்களால் நகரத்தார்களின் முதலீடுகள் பெருகின. அந்தந்த நாடுகளின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தன. பர்மாவில் அரிசி உற்பத்தி, இலங்கையில் தேயிலைத் தோட்டங்கள், மலேசியாவில் இரப்பர் தோட்டங்கள், ஈய உற்பத்தி (Tin production) என நாடுகளின் பொருள் சார்ந்த மேம்பாடுகளுக்கு முழுமையான காரணமாக நகரத்தார்கள் இருந்தனர்.

**திருத்தம்**



ஜூன் 2025 இதழ் - 'அறிந்து கொள்ள வேண்டிய நகரத்தார்கள்' வரிசையில் கோலாலம்பூர் மருத்துவர் டத்தோ வ.கதிரேசன் கட்டுரையில், கட்டுரை ஆக்கம் மா.அரு.சோமசுந்தரம். (தெலுக் இந்தான்- மலேசியா), தேவகோட்டை.

ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின்னர் நகரத்தார்களின் வணிகம் பெரும் மாற்றங்களை பெற்று வளரத் தொடங்கியது. பிரிட்டிஷாரின் படைகளுக்கு நிதி உதவி செய்ததாகவும் தெரிய வருகிறது (பக். 54)

நகரத்தார்கள் சிங்கப்பூர் பினாங்கிற்கு 1825-ஆம் ஆண்டிலும், பர்மாவின் மோல்மெய்னுக்கு 1852-ஆம் ஆண்டிலும், ரங்கோனுக்கு 1854-ஆம் ஆண்டிலும், மாந்தளைக்கு 1855-ஆம் ஆண்டிலும் சென்றனர். நகரத்தார்களின் மிகுந்த செல்வச் செழிப்பான காலமாக 1870 முதல் 1930 ஆண்டு வரையிலான காலப்பகுதி அமைந்திருந்தது (David West Rudner) அது போல கல்கத்தாவிலும் நகரத்தார்கள் தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டனர். இதனால் பிரிட்டிஷாரின் படைகளுக்கு வழங்கிய நிதி உதவி கடன் உதவிகளை மேற்பார்வை செய்ய ஏதுவாக இருந்தது. அது மட்டும் அல்லாது தங்களுடைய தொழில்களை கல்கத்தாவிலும் பர்மாவிலும் மேலாண்மை செய்ய முடிந்தது.

இக்காலத்தில் இந்தியாவில் இருந்த ஐரோப்பிய நாடுகளின் படைகளுக்கு செய்யப்படும் செலவுகள் அதிகமாகத் தொடங்கின. படைக்கருவிகள், வெடி மருந்துகள் படைவீரர்களின் சம்பளம் என நிதித் தேவை அதிகரித்தது. அதை ஈடு செய்ய இந்தியாவில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கான ஏற்றுமதியை ஆங்கிலேயர்கள் அதிகரிக்கச் செய்தனர். இருந்தபோதிலும் உலகம் முழுவதும் நிலவிய உறுதியில்லாத வணிகச்சூழல், நிலையில்லாத காலநிலை போன்ற காரணங்களால் ஐரோப்பியர்களின் வரவு செலவில் எப்பொழுதும் நிதிப் பற்றாக்குறை இருந்ததாக ருட்னர் குறிப்பிடுகிறார். இந்தச் சூழலை நகரத்தார்கள் சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

(வரலாறு வளரும்)





# இலங்குடி ஸ்ரீபகச்சாலமூர்த்தி ஐயனார் கோவில் கும்பாபிஷேகம்

இலங்குடி ஸ்ரீபகச்சாலமூர்த்தி ஐயனார் கோவில் கும்பாபிஷேகம், வைகாசி மாதம், 22-ஆம் நாள் (05.06.2025) வியாழக்கிழமை, காலை 9.30 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் சர்வசாதகம் சிவ ஆகம சிரோண்மணி சிவஸ்ரீ P. நமசிவாய சிவாச்சாரியார் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. 01.06.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு அனுக்ஞை, கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், பூர்ணாஹுதி, தீபாராதனை தொடங்கப் பெற்று 02.06.2025 திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு முதல்கால யாக பூஜை ஆரம்பிக்கப் பெற்று, இரண்டு நாட்கள் காலை மாலை தொடர்ச்சியாக யாகபூஜை சிறப்பாக நடைபெற்றது. 05.06.2025 காலை 5.30 மணிக்கு ஆறாம்கால யாகபூஜை நடைபெற்று, கடம் புறப்பட்டு 9.50 மணியளவில் மஹா கும்பாபிஷேகம் டிரோன் மூலம் மலர் தூவப்பெற்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது. நகரத்தார்கள், வேளார்கள் நாட்டார்கள் கிராம பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு பகச்சாலமூர்த்தி ஐயனார் அருள் பெற்றார்கள். இரண்டாம் கால யாகபூஜை தொடங்கி கும்பாபிஷேகம் அன்று மதியம் வரை அன்னதானம் சிறப்பாக நடைபெற்றது. கோவிலூர் சீர்வளர்சீர் திரு. நாராயண ஞான தேசிக சுவாமிகள், கண்டனூர் அருளடியார், பாதரக்குடி ரவீந்தர சுவாமிகள், துலாவூர் ஞானபிரகாச சுவாமிகள், அமைச்சர் பெருமக்கள் மாண்புமிகு KR. பெரியகருப்பன் அவர்கள், மாண்புமிகு S. ரகுபதி அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ப. சிதம்பரம் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் திரு. மாங்குடி அவர்கள் மற்றும் பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பு செய்தார்கள். திருப்பணிக்குழுத் தலைவர் ஆவி.ப.முரு.பழ. சிதம்பரம், செயலாளர் சா.லெ.நா.சா. பெரியண்ணன் மற்றும் திருப்பணிக்குழு உறுப்பினர்கள் சிறந்த ஏற்பாடுகளை செய்திருந்தனர்.





சென்னைப் புத்தக காட்சியில் நடந்த என் புத்தக வெளியீட்டு விழா அது. எளிமையான ஏற்பாடுகள். பல ஆண்டுகளாக அறிமுகம் இருக்கும் இருவரை அழைத்து வெளியிட, பெற்றுக் கொள்ளக் கேட்டுக் கொண்டிருந்தேன். இருவரும் பொதுவெளியில் அவ்வளவு பிரபலமானவர்கள் இல்லை.

நிகழ்வு குறித்து கட்செவி (Whatsapp)-யிலும், முகநூலிலும் தகவல் தெரிவித்திருந்தேன். அதனால் ஓரளவு கூட்டம் சேர்ந்து விட்டது. நான் அழைந்திருந்த இருவரும் நேரத்திற்கு வந்து விட்டார்கள். பேசிக் கொண்டிருந்தோம். நிகழ்ச்சி ஆரம்பிப்பதற்கு சில நிமிடங்கள் இருந்தன.

நிகழ்ச்சியை கவனிக்கத் தொடங்கினேன்.

நிகழ்ச்சி, திட்டமிட்டபடி சரியாக நடந்தது. அகில இந்திய ரோட்டரி இயக்குனர் வெளியிட, சமூக அமைப்பு ஒன்றின் நிறுவனர் பெற்றுக் கொண்டார். இருவரும் அந்தப் புத்தகம் குறித்தும், என்னைப் பற்றியும் பேசினார்கள். பார்வையாளர்கள் அவர்கள் பேசுவதை கவனத்துடன் கேட்டார்கள்.

நிகழ்ச்சி முடிந்ததும்தான் கவனித்தேன். பிரபலம் மெல்ல நகர்ந்து நகர்ந்து, அடுத்த கடைப்பக்கம் தள்ளி நின்றபடி வேறு எவருடனோ பேசிக் கொண்டிருந்தார். ஏன் அவரை கட்டாயப்படுத்தி மேடைக்கு அழைக்கவில்லை என்பதைச் சொன்னேன்.



# இடம் கொடுப்பது

டாக்டர் சோம வள்ளியப்பன்

சென்னை புத்தகக் காட்சியில் புத்தகங்கள் வெளியீடு என்பது ஆங்காங்கே புத்தக ஸ்டால்களின் வாசல்களில் நடக்கும் எளிமையான நிகழ்வு. மேடை இருக்காது. புத்தகக் கடையின் ஒரு வாசலை அடைத்தாற் போல புத்தகத்தை வெளியிடுபவர்கள் நின்று கொள்ள வேண்டும். அதுதான் மேடை. அவர்களுக்கு எதிர்ப்புறம் கடைக்கு வெளியே, புத்தகக் காட்சியின் நடைபாதையில் அரைவட்ட வடிவில் கலந்து கொள்ளும் வாசகர்கள், பொதுமக்கள் மற்றும் படம் பிடிப்பவர்கள் நின்று கொள்வார்கள்.

ஆரம்பிப்பதற்கு ஏதுவாக வெளியிடுபவர்களை அழைத்துக் கொண்டு அந்தப் பகுதியில் நான் நின்று கொண்டிருந்த போது, ஒரு பிரபலம் நாங்கள் நிற்கும் இடம் நோக்கி நடந்து வருவது தெரிந்தது.

அவரை நான் அந்த நிகழ்ச்சிக்கு அழைத்திருக்கவில்லை. தகவல் கூட கொடுத்திருக்கவில்லை. ஆனாலும், அவர் வருகிறாரே என யோசிக்கையில், அவருடன் பேசியபடி அவரை அழைத்து வந்து கொண்டிருந்தவரைப் பார்த்தேன். புரிந்து விட்டது. எங்கள் இருவருக்கும் அறிமுகமான வாசகர் அவர். அவர்தான் அந்தப் பிரபலத்தை அழைத்து வந்து கொண்டிருந்தார்..

சற்று தூரத்தில் வரும் போதே பிரபலத்தைப் பார்த்து சைகையால் வணக்கம் மட்டும் சொல்லி விட்டு, புத்தக வெளியீட்டு நிகழ்ச்சியை ஆரம்பிக்கச் சொன்னேன். அதாவது, அந்தப் பிரபலத்தை நான் புத்தகம் வெளியிடும் நபர்கள் நிற்கிற மேடைப் பக்கம் அழைக்கவில்லை.

திட்டமிட்டபடி நிகழ்ச்சி தொடங்கியது. வரவேற்புரை நடக்கையில், கூட்டத்தினருடன் ஒரு பக்கம் நின்றபடி வேறு ஒருவருவருடன் பேசிக் கொண்டிருந்த பிரபலத்தைப் பார்த்து, ‘நீங்களும் வாருங்களேன்’ என்பது போல சைகை காட்டினேன். பதிலுக்கு அவர், “இல்லை. நீங்கள் செய்யுங்கள்” என்பது போல கை காட்டினார். உடனே சரி என்று திரும்பிக் கொண்டு,

“புரிகிறது. நீங்கள் செய்ததுதான் சரி” என்றார். கிளம்பி விட்டார்.

அவரை நான் மேடைக்கு அழைக்கவில்லை. அவர் வந்து நின்றிருந்தால் அந்த நிகழ்ச்சி இன்னும் கூடுதல் கவனம் பெற்றிருக்கும். பிரபலம் என்னையும், வெளியிடப்பட்ட என் புத்தகததையும் புகழ்ந்து பேசியிருப்பார்.

இருந்தும் அதுவாக வந்த அந்த வாய்ப்பை நான் ஏன் எடுத்துக் கொள்ளவில்லை? ஏன் தவிர்த்தேன்? காரணத்தை சிலர் யூகித்திருக்கலாம்.

அந்த பிரபலத்தை நான் மேடையேற்றி, வெளியிடுபவர்கள் பக்கம் நிற்க வைத்திருந்தால், பார்வையாளர்கள் பிரபலத்தைத்தான் கவனிப்பார்கள். அதனால் நான் அழைத்து, எனக்காக அன்று வெளியிடவும், பெற்றுக் கொள்ளவும் வந்திருந்த இருவரும் அவர்களுக்கு உரிய கவனத்தைப் பெற்றிருக்கமாட்டார்கள். மேலும், அவர்களே கூட அந்த பிரபலத்தை, ‘நீங்களும் வெளியிடுங்கள். அல்லது நீங்களும் பெற்றுக் கொள்ளுங்கள்’ என்று சொல்லியிருக்கலாம். ஒரு பிரபலத்தையும் மேடை போன்ற இடத்தில் வைத்துக் கொண்டு ஏதும் செய்யாமல் விட முடியாது. அவரும் மகிழ்ச்சியோடு செய்திருப்பார். அதைத்தான் நான் வேண்டாம் என்று நினைத்தேன்.

முடிவு?

பிரபலம் வெளியிட்டது போல ஆகியிருக்கும். நான் அழைத்திருந்த மற்ற இருவரும் மேடையில் இருந்தும், கொடுத்து வாங்கியும், பட்டப் பகலில் வீட்டுக்கு வெளியில் எரியும் புதுமனை புகுவிழா வீட்டு விளக்கு போல கவனிக்கப்படாமல் போயிருப்பார்கள். பிரபலம் வந்தது தற்செயல்தான். அதுவும் அவராகத்தான் வந்தார். அது அவருக்கும் தெரியும். நாம் அழைத்து வந்திருப்பவர்களின் மரியாதையும் முக்கியத்துவமும் குறைய விடக்கூடாது என்றுதான் அப்படி நடந்து கொண்டேன். திருமணம் போன்ற நிகழ்வுகளிலும், ஒரு பிரபலமும் கொஞ்சம்

கூடுதல் அறிமுகம் இருப்பவரோ உள்ளே நுழையும் நேரம் உடன் நுழையும் மற்றவர்கள் கவனிக்கப்படாமல் போவது உண்டு அது சமயம் அந்த கவனிப்பு பெறாத, கண்டு கொள்ளப்படாத வரவேற்பு கிடைக்காத மனிதருடைய மனது எப்படி இருக்கும்.

அழைக்கப்பட்டவர்கள், வருபவர்கள் அனைவரும் முக்கியம். தற்செயலாக அந்த நேரம் வந்த மற்றொருவர் பின் ஏற்பாட்டாளர்கள் ஓடட்டும் அதற்காக மற்றவர்களை கவனிக்காமல் விடலாமா?

என்ன காரணத்தாலோ தற்போது தமிழ் கிரிக்கெட் ரசிகர்கள் மகேந்திரசிங் தோனி மீது அதிக அன்பு காட்டுகிறார்கள். 2025, மார்ச் 24-ம் தேதி, சென்னையில் நடந்த ஐபிஎல் போட்டி ஒன்றில் சிஎஸ்கே அணியில் ஒருவர் அவுட் ஆகிறார். நேரடியாக ஆட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்த ரசிகர்களில் மிக மிக அதிகமானவர்கள் சிஎஸ்கே ரசிகர்கள்தான். அவர்கள் அவுட் ஆனதற்கு கைதட்டினார்கள். ஆரவாரம் செய்தார்கள். காரணம், அடுத்து விளையாட களமிறங்க இருந்தவர் தோனி.

தோனி ஆட வருவதால் மகிழ்ச்சி என்பது இருக்கட்டும். ஆனால், வேறு ஒருவர், அதுவும் அவர்கள் ஆதரிக்கும் அணியைச் சேர்ந்த வீரர் அவுட் ஆகி போகும் போது இப்படியா மகிழ்வது! அதை வெளிக்கட்டுவது!! இதையெல்லாம் கவனத்தில் கொள்ள முடியுமா என்று சிலர் யோசிக்கக் கூடும். கொள்பவர்கள் இருக்கிறார்கள்.

2008-ம் ஆண்டு, ஆஸ்திரேலியா அணி இந்தியாவில் ஆடிக்கொண்டிருக்கிறார்கள். இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முரளி விஜய் என்ற இந்திய ஆட்டக்காரர் ஒரு நாள் முழுவதும் அவுட் ஆகாமல் ஆடி 167 ரன்கள் குவித்தார். பிறகுதான் அவுட் ஆனார். அடுத்து, சச்சின் டெண்டுல்கர் ஆட வர வேண்டும். வருவது சச்சின்தான் என்று தெரிந்தால் கூட்டம் ஆர்ப்பரிக்கும். அப்போதெல்லாம் சச்சின் டெண்டுல்கர்தான் ரசிகர்கள் மனத்தில் இருந்தவர். உடனடியாக துள்ளி குதித்து மைதானத்திற்குள் வரவேண்டிய அந்த நேரத்தில் சச்சின் ஆயத்தமாக இருந்தும், களத்தில் இறங்காமல் பெவிலியன் படிக்கட்டிலேயே நிற்கிறார்.

அடுத்து யார் வருவார் என்று தெரியாத நிலையில், அதுவரை சிறப்பாக ஆடி ரன்கள் குவித்த, அவுட் ஆகிப் போன முரளி விஜய்க்கு அரங்கில் இருந்த ரசிகர்கள் கைதட்டி மரியாதை செய்கிறார்கள். அவர் மட்டையை உயர்த்தி அதை ஏற்றுக்கொண்ட படி நடந்து பெவிலியன் போகிறார். உள்ளே வந்தவரை முதுகில் தட்டி பாராட்டி விட்டு, பிறகு தான் சச்சின் டெண்டுல்கர் களத்தில் இறங்குகிறார். அவரைக் கண்டதும் மீண்டும் அரங்குகளில் ஆரவாரம்.

சச்சின் ஏன் உடனடியாக இறங்கவில்லை?

அவர் உடனடியாக ஆட களமிறங்கியிருந்தால், ரசிகர்களுடைய கவனம் முன்பு நன்றாக விளையாடி ரன்கள் குவித்து விட்டு அவுட் ஆகி போகிற விஜய் முரளிக்கு நன்றி சொல்லவோ, மரியாதை காட்டவோ போகாது. உடனடியாக சச்சின் பக்கம் திரும்பி விடும். அப்படி நிகழ்ந்து விடக்கூடாது என்பது தான் சச்சின் நோக்கம். நன்றாக ஆடிய முரளிக்கு கிடைக்க வேண்டிய மரியாதை கிடைக்க வேண்டும் என்பதற்காக தான் அவர் இறங்காமல் காத்திருந்தார். இதுதான் அவரவர்க்கு உரிய இடம், மரியாதையை கொடுப்பது என்பது.

பாக்கியராஜ் அவர்கள் நடித்த திரைப்படத்தில் ஒரு காட்சி. பாக்கியராஜ் மாப்பிள்ளையாக பெண் பார்க்க போவார். உடன் நண்பர் ஒருவர், மாப்பிள்ளைத் தோழன் போல. சரியாக கண் தெரியாத ஒரு பாட்டி, மாப்பிள்ளைத் தோழனை மாப்பிள்ளையாக தவறாக புரிந்து கொண்டு பாராட்டும். காரணம், பாக்கியராஜைவிட கூட வந்தவர் கவர்ச்சிகரமாக இருப்பார். பிறகு பாக்யராஜ் அவரை, "நீ கிளம்பு. வெளியே போ. பஸ் ஏறி ஊருக்கே போய்விடு" என்பார்.

திருமணங்களில் மாப்பிள்ளை தான் முக்கியம். எந்த நிகழ்வாக இருந்தாலும் நிகழ்வின் நாயகனுக்குத்தான், நாயகிக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அவர்களை விட பிரபலங்கள், முக்கியஸ்தர்கள் வந்தால் கூட. அவரவர்க்கு உரிய இடத்தை, மரியாதையை கொடுப்பது என்பதை இன்னும் சில இடங்களிலும் கடைபிடிக்க வேண்டும்.

சில பொதுக் கூட்டங்களில் பேச, ஆறு, ஏழு நபர்களை அழைத்திருப்பார்கள். முதலில் பேச அழைக்கப்பட்டவர் அல்லது அந்த வாய்ப்பு கிடைத்தவர் அந்த நிகழ்வு குறித்து அல்லது அந்த நிகழ்வின் நாயகன் குறித்து தனக்கு தெரிந்த அத்தனையும் மிக அதிக நேரம் பேசி விடுவார். அவருக்கு கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி கொள்கிறாராம்.

அடுத்தடுத்து பேச வருபவர்கள் நிலை என்ன? அதிலும் குறிப்பாக இறுதியாக பேச வருபவர் எதைப் பற்றி பேசுவார்? எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாவற்றையும் சொல்லி விட்டார்கள் என்பார் பரிதாபமாக. அவருக்காக சிலவற்றை விட்டு வைப்பதும், தனக்குத் தெரிந்திருந்தாலும் சிலவற்றை சொல்லாமல் விடுவதும் பண்பு. மற்றவர்களுக்கு இடம் கொடுப்பது.

பொது இடங்களில் உண்ணும் போதும் இந்த நாகரீகம் தேவை. பஃபே உணவு உண்ணும் இடங்களில் சிலர் மற்றவர்களுக்கு விட்டு வைக்காமல், சில பண்டங்களை மீண்டும் மீண்டும் வந்து அதிகமாக எடுத்துக் கொள்வார்கள். அல்லது பந்தியில் கேட்பார்கள். அதுவும் மற்றவர்க்கு உரியதை எடுப்பது போல தான்.

பண்பு, நாகரிகம் என்பது நேரம், வாய்ப்பு, பாராட்டு, இடம் போன்றவற்றை உரியவர்களுக்குக் கொடுப்பது. தான் மட்டுமே எடுத்துக் கொள்ளாமல் மற்றவர்களுக்கு விட்டுக் கொடுப்பது. வழி விடுவது. ♦

**திருத்தம்**

சென்ற இதழில் வெளிவந்த தமிழறிஞர்கள் விளையும் நிலப்பரப்பு என்ற கட்டுரையில், 'நெற்குப்பை சிவகங்கை மாவட்டத்தில் இருக்கிற ஒரு சிற்றூர்' என்றும், 'பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அவர்களும், தமிழறிஞர் வ.சுப. மாணிக்கனார் அவர்களும் மகிபாலன் பட்டியில் பிறந்தவர்கள்' என்றும் வாசிக்கவும்.



# ஏழிளந்தமிழ்

## 3. மூதுரை உரை - செம்மல் வ.சுப.மாணிக்கனார்

**தீயவர் தொடர்பால் வரும் தீமை**

9. தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவும் தீதே – தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோடு
இணங்கி இருப்பதுவும் தீது.

தீயவர்களைக் காண்பதும், அவர் சொற்படி நடத்தலும் தீமையாகும். தீயவர்களின் குணங்களைப் பேசுவதும், அவர்களுடன் நட்புக் கொள்ளுதலும் தீமையால் முடியும்.

**நல்லோரால் எல்லோர்க்கும் நன்மை**

10. நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் – தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யு மழை.

நெல்லுக்கு இறைத்த நீரால் புல்லும் வளம்பெறும். அதுபோல, நல்லோரைச் சார்ந்த எல்லோரும் பயனடைவர்.

**துணைவலிமை வேண்டும்**

11. பண்டு முளைப்ப தரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையாதாம் – கொண்டபேர்
ஆற்றல் உடையார்க்கும் ஆகா தளவின்றி
ஏற்ற கருமம் செயல்.

முன்னே முளைப்பது அரிசியேயானாலும் உமி நீங்கி விடின் அரிசி முளைக்காது. ஆதலால் வல்லமை உடையார்க்கும் துணை வலிமை இல்லாமல் எடுத்த காரியத்தைச் செய்ய முடியாது.

**உருவமும் குணமும்**

12. மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறிய ரென்றிருக்க வேண்டா – கடல்பெரிது
மண்ணீரு மாகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரு மாகி விடும்.

பெரிய இதழையுடைய தாழைக்கு மணம் இல்லை; உருவத்தில் சிறிய மகிழம்பூ இனிய மணம் உடையது. கடல் உருவத்தால் பெரியது; எனினும் அதன் நீரில் குளிக்கவும் முடியாது. கடல் அருகில் உள்ள சிறிய ஊற்றுநீர் குளிப்பதற்கே அன்றிக் குடிக்கவும் பயன்படும். ஆதலால் தோற்றத்தால் பெரியவர் குணத்தால் சிறியராதலும், தோற்றத்தால் சிறியவர் குணத்தால் பெரியவராதலும் உண்டு.

**காலமறிந்து செய்தல்**

13. கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் – சபைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவன்நன் மரம்.

காட்டில் வளர்ந்து நிற்கும் மரங்களைக் காட்டிலும் படிப்பறிவு இல்லாதவனும் ஒருவருடைய குறிப்பை அறியாதவனும் நல்ல மரங்களாவர். காரணம் மனித மரங்கள் பார்க்கும், நடக்கும், பேசும்.

**போலி அறிவின் இழிவு**

14. கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத் – தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

வான்கோழி தன்னை மயிலாக நினைத்து ஆடினாலும் மயிலாகாது. அதுபோல கல்லாதவன் கற்றவன் போல் நடித்தாலும் கற்றவன் ஆகான்.

**தீயோர்க்கு உதவின் தீங்கே வரும்**

15. வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக் காகாரம் ஆனாற்போல் – பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த உபகாரம்
கல்லின்மேல் இட்ட கலம்.

வேங்கைப் புலியின் நோயைத் தீர்த்த விட வைத்தியன் அப்பொழுதே அப்புலிக்கு இரையானாற் போலத் தீயவர்க்கு உதவி செய்யின் அவர் தமக்குச் செய்த உதவியை மறந்து அப்பொழுதே கேடு செய்வர்.

**அடக்கத்தை இகழாதே**

16. அடக்க முடையார் அறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா – மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாம் கொக்கு.

கொக்கு தனக்கேற்ற பெரிய மீன் வருமளவும் அமைதியாக இருப்பது போலப் பெரியவர்களும் தமக்கு ஏற்ற காலம் வரும் வரை அடங்கி இருப்பார்கள். அடக்கத்தை அறியாமை என்று நினைத்து அவர்களை வெல்ல நினைப்பவன் தோற்றுப் போவான்.

**உண்மையான உறவினர்**

17. அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் – அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவார் உறவு.

நீர்வற்றியவுடன் குளத்தினின்று நீங்கிப் போகும் நீர்ப்பறவை போன்று நமக்குத் துன்பம் வரும்போது நம்மை வீட்டு நீங்குபவர் உண்மையான உறவினர் ஆகார். அக்குளத்தில் உள்ள கொட்டியும், அல்லியும், நெய்தலும் போலத் துன்பத்திலும் பங்கு கொள்பவரே உண்மையான உறவினர் ஆவார்.

**கெட்டாலும் மேன்மக்கள் குணம் மாறார்**

18. சீரியர் கெட்டாலும் சீரியரே சீரியர்மற்
றல்லாதார் கெட்டாலங் கென்னாகும் – சீரிய
பொன்னின் குடமுடைந்தாற் பொன்னாகும் என்னாகும்
மண்ணின் குடமுடைந்தக் கால்.

பொற்குடம் உடைந்தாலும் பொன்னாகிப் பயன் தரும். அதுபோல மேன்மக்கள் வறுமை அடைந்தாலும் மேன்மைக் குணத்திலிருந்து மாறுபடார். மண்ணால் மண்ணால் ஆகிய குடம் உடைந்தால் ஒன்றுக்கும் பயன்படாது. அதுபோல, கீழோர் வறுமை அடைந்தால் மேலும் கீழ்மைக் குணம் உடையவராவார். (தொடரும்)



# காரைக்குடியில் சிறுவர் இலக்கியச் சந்திப்பு விழா

காரைக்குடி திருமதி லஷ்மி வளர்தமிழ் நூலகமும், புதுச்சேரி சிறுவர் இலக்கிய இயக்கமும் இணைந்து நடத்தும், சிறுவர் இலக்கியச் சந்திப்பு விழா 10.07.2025 அன்று காலை 10 மணியளவில் திருமதி லஷ்மி வளர்தமிழ் நூலகத்தில் நடைபெற்றது. குழந்தைக் கவிஞர் அழ.வள்ளிப்பா திருவுருவப் படத்தை வளர்தமிழ் நூலக இயக்குநர் திருமதி சே.செந்தமிழ்ப் பாவை திறந்து வைத்தார். குழந்தைக் கவிஞருக்கு பள்ளிப் பிள்ளைகள் மலரஞ்சலி செய்தனர்.

அழகப்பா மாண்டிசோரி பள்ளி, அழகப்பா மெட்ரிக் பள்ளி, அழகப்பா மாதிரி மேல்நிலைப் பள்ளி, இராமநாதன் செட்டியார் உயர்நிலைப் பள்ளி மற்றும் கவிமணி குழந்தைகள் சங்கம் சார்ந்த 51 குழந்தைகள் கலை நிகழ்ச்சிகளை வழங்கினர். பங்கேற்ற அனைவருக்கும் சிறுவர் இலக்கிய இயக்கத்தின் சார்பில் சான்றிதழும், புத்தகப் பரிசும் வழங்கப்பட்டன. முனைவர் தேவி நாச்சியப்பன் எழுதிய "நடிக்கலாம் வாங்க" நூலை மூத்த பேராசிரியர் திருமதி செந்தமிழ்ப் பாவை வெளியிட செல்வி அழ.மெய்யம்மை முதல் பிரதியை பெற்றுக் கொண்டார்.



நூலக இயக்குநர் செந்தமிழ்ப் பாவை, தம் தலைமை உரையில், "இன்று குழந்தைகளைக் கொண்டாடும் நாள். நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் மாண்பமை ப.சிதம்பரம் அவர்கள் தமது சொந்த செலவில் வளர்தமிழ் நூலகம் என்ற பெயரில் மாபெரும் நூலகத்தை தம் தாயார் பெயரால் கட்டி, அழகப்பா பல்கலைக் கழகத்துக்கு வழங்கியுள்ளார். இங்கு பள்ளிப் பிள்ளைகள் முதல் முனைவர் பட்ட ஆய்வாளர்கள் வரை மாணவர்கள் படிக்க 50,000 நூல்கள் உள்ளன. அனைவரும் இங்கு வந்து படித்துப் பயன் பெற வேண்டுமென்றார். மேலும் அவர், இன்று 3 வயது முதல் 17 வயது வரையுள்ள குழந்தைகள் கதை, பாடல், நாடகம், நடனம், உரை, வினாடி வினா எனப் பன்முகத் திறமைகளை வெளிப்படுத்தினர். இந்நூலகத்தில் தினந்தோறும் தமிழ் ஒலிக்க வேண்டும்; தமிழ் மொழி வளர வேண்டும் என்பதே இந்நூலகம் அமைக்கப்பட்டதின் குறிக்கோள்" என்றார்.

குழந்தைகள் நிகழ்ச்சிகளைச் சிறப்பாகத் தயாரித்து வழங்கிய பள்ளி ஆசிரியர்களைப் பாராட்டி பொன்னாடை அணிவித்து, புத்தகம் பரிசாக வழங்கப்பட்டது. முன்னதாக கவிமணி குழந்தைகள் சங்க அமைப்பாளர் முனைவர் தேவி நாச்சியப்பன் அனைவரையும் வரவேற்றார். சிறுவர் இலக்கிய இயக்கத்தின் நிறுவனர் பாரதி வாணர் சிவா நன்றியுரை வழங்கினார்.

# நல்ல தொழில் செய்யவும் நம் நாடு உயர்ந்திடவும் நாளும் வழிகாட்டுங்கள்!

கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா



நகரத்தார்கள் சைவத்தையும், தமிழையும் தங்களின் இரு கண்களாக நினைத்துப் போற்றியவர்கள். வணிகத்திலும் சிறந்து விளங்கி சாதனை படைத்தவர்கள். எழுத்தாளர்களாக, பதிப்பாளர்களாக, சைவ சமயத்தில் ஆளுமை மிக்கவர்களாக, பன்மொழிப்புலமை கொண்டவர்களாக, தொழில் மேதைகளாக, வங்கிகளைத் தோற்றுவித்தவர்களாக நகரத்தார்கள் பல சாதனைகள் படைத்துள்ளார்கள் என்பதை உலக மக்கள் அறிந்திருப்பார்கள்.

ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் நுண்மாண் நுழைபுலம் மிக்கவராகவும், பல்லாயிரம் இளைஞர்களுக்கு தொழில் தொடங்க வழிகாட்டியாகவும், வங்கித்துறையில் எழுத்தராகச் சேர்ந்து, பல்வேறு பெருமக்கள் வழிகாட்ட, அந்த வழியில் பயணித்து மும்பையில் இன்றைக்கு மிக சிறப்பானதொரு வங்கியில் உயர் பொறுப்பில் மொத்தம் 41 ஆண்டு காலம் பணியாற்றி ஜுன் 30 அன்று ஓய்வு பெற்றிருக்கிறார் மிகச்சிறந்த வணிகத்துறை எழுத்தாளர் திரு.சேதுராமன் சாத்தப்பன் அவர்கள்.

காட்சிக்கு எளிய மனிதர்,காண்போரை மதிக்கும் பண்பினர், கரும்பு நிகர் பேச்சாளர், தன்னை நாடி வந்து ஆலோசனை கேட்போருக்கு அமைதியாகப் பதில் சொல்லும் பேராளர், பணத்தைப் பெரிதாக நினைக்காத குணத்துக்கு சொந்தக்காரர் நகரத்தார் இனத்துக்கு தன்னால் பெருமை சேர்க்கும் மாமனிதர், எந்த நேரத்திலும் தன்னை முன்னிறுத்திக் கொள்ளாத விளம்பரம் விரும்பாத மனிதர். எளிய குடும்பத்தில் பிறந்தவர். தான் பிறந்த நெற்குப்பை கிராமத்தை என்றைக்கும் போற்றுபவர்.

தைப்பொங்கல் விழாவை இவர் சார்ந்த குடும்பத்தினர் நெற்குப்பை மண்ணில் வருடந்தோறும் ஒன்று சேர்ந்து கொண்டாடி மகிழ்கிறார்கள். மும்பை நகரத்தார் சங்க கட்டிடம் கட்ட துணை நின்றவர். 'மும்பை நகரத்தார்' மற்றும் "Startup and Business News Magazine" ஆகிய மின்னிதழ்களை ஆசிரியராக இருந்து உருவாக்கியவர். மும்பையில் தடம் பதித்த அந்த பெருமகனார். பணி ஓய்வுக்குப்பின் திருச்சி மாநகரில் வசித்திட வருகிறார். அவரது திருச்சி வரவு,திருச்சி வாழ் நகரத்தார்களுக்கு பெரும் துணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. வங்கிப் பணியில்,எட்டு ஆண்டுகள் குலசேகரத்திலும், 33 ஆண்டுகள் மும்பையிலும் பணியாற்றியவர்.

கனரா வங்கியில் தொடங்கிய அவரது வங்கி பயணம், ஸ்கோஷியா காமர்ஸ் பேங்க், மே பேங்க், தோஹா வங்கி இறுதியாக, எமிரேட்ஸ் என்பிடி வங்கியில் 8 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். வங்கித்துறையில் தன்னை வழிநடத்தியவர்களை நன்றியோடு நினைத்துப் பார்க்கிறார். நன்றி மறவாத நல்ல பண்புக்கு சொந்தக்காரர். உயர்ந்த பதவியிலே இருப்போர்க்கு பணிவு தேவை என்பார்கள். அதற்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குபவர் திரு.சேதுராமன் சாத்தப்பன் அவர்கள்.

உங்கள் வங்கியின் உழைப்பிற்கு ஓய்வே தவிர, உங்களின் எழுத்துக்கும், பேச்சுக்கும் ஓய்வே இல்லை! தொடரட்டும் உங்களின் இளைஞர்களுக்கான வழிகாட்டுதல்!

நாளைய இந்தியாவின் வளர்ச்சியில் உங்கள் பங்களிப்பும் மிகச் சிறப்பானதொரு இடத்தைப் பெறும் என்பது என்னுடைய அசைக்க முடியாத நம்பிக்கை! உங்களைப் போன்ற ஒரு அரிய மனிதரை நகரத்தார் சமூகம் பெற்றிருப்பது எங்களுக்கு பெருமை தருகிறது. தாங்கள் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து, நாடும், நல்ல தொழில்களும், நகரத்தார் இளைஞர்களும் வளமோடு வாழ வழிகாட்டுங்கள்! என்று அன்போடு வேண்டி வாழ்த்துகிறேன்.

# செட்டிநாட்டில் இருந்தே காசி விஸ்வநாதர் தரிசனம்

கோவிலூர் மடாலயத்தில் காசி விஸ்வநாதரின் இரண்டு கால பூஜை, காலபைரவர் ஆலயம், கங்கா ஆரத்தி இவை அனைத்தையும் நாம் நேரடியாக காணும் அனுபவத்தை அளிக்க வல்ல விர்ச்சுவல் ரியாலிட்டி வியூவர் மூலம் காண்பிக்கின்றார்கள். இதற்காக ரூ 150 கட்டணமாக வசூலிக்கப்படுகின்றது. கோவிலூர் மடாலயத்தைத் தொடர்பு கொண்டால் அங்கிருந்து இதற்கான ஆவன செய்வார்கள். இந்த காணொலியில் கோவிலூர் மடாதிபதி சீர்வளர் சீர் நாராயண தேசிக சுவாமிகளின் துவக்க உரை – நீதியரசரின் சிறப்புரை ஆகியன இடம் பெறுகின்றது.

# சதாபிஷேகம்



தேவகோட்டை தண்ணீர்பந்தலார் வீடு, பிள்ளையார்பட்டி கோவில், திரு. எம்.பழனியப்பன் (காசி) – திருமதி பிஎல்.ராஜேஸ்வரி தம்பதியர் சதாபிஷேகம் 17.03.2025 அன்று பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் கோவிலில் வெகு சிறப்பாக நடைபெற்றது. குடும்பத்தினர், பங்காளிகள், ஆயா வீடு மற்றும் உறவினர்கள் கலந்து கொண்டு சதாபிஷேகத் தம்பதியரிடம் வாழ்த்துப் பெற்றனர். நமது செட்டிநாடு இதழ் வாசகர்களான தம்பதியர் நீடு வாழ நமது செட்டிநாடு வாழ்த்துகிறது.

# அண்ணாநகர் நகரத்தார் டிரஸ்ட் சாதனையாளர் விருது



சென்னை, அண்ணாநகர் நகரத்தார் டிரஸ்ட், 06.07.2025 அன்று நடைபெற்ற, ஆண்டு விழாக் கூட்டத்தில், எழுத்தாளர், பயிற்றுநர் டாக்டர் சோம. வள்ளியப்பன் அவர்களுக்கும், எஸ்.வி. பவுண்டேஷன் கொடையாளர், திரு. கோல்டன் சிங்காரம் அவர்களுக்கும் 'சாதனையாளர் விருது' வழங்கி சிறப்பிக்கப்பட்டனர். உடன், 2023-25 பருவத் தலைவர் கீழச்சிவல்பட்டி வள்ளியப்பன், செயலாளர் பிஎல்.வி. பழனியப்பன் கணேஷ், பொருளாளர் ஆர். பாலாஜி ராமநாதன் மற்றும் பொற்கிழி கவிஞர் சொ.சொ.மீ. சுந்தரம் ஆகியோர் உள்ளனர். அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.







# குறள் பாட்டு

குழந்தைக் கவிஞர் செல்ல கணபதி

அதிகாரம் – 43 (அறிவுடைமை)

422) சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு.
மனம்அதன் போக்கில் போகா திருப்பதும்
மனம்வரும் தீமையை விட்டு விலகலும்
மனம்ஒரு நன்மையை நாடிப் பதிவதும்
மனம்அது அறிவால் பக்குவப் படுவதால்
அறிவால் மனதைப் பக்குவம் செய்தால்
அறிவதை அறிய மனமிகத் துடிக்கும்
அறிவதை அறிந்து மனம்அடக் கிடலாம்
அறிவினால் நல்லதை ஆக்க முயலுவோம்.

423) எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.
யார்சொன் னாலும் உண்மை உண்மையே
யாருக் காகவும் மாறிவி டாது
யார்அவர் மந்திரி மன்னர் சொன்னாலும்
அவர்சொல் உட்பொருள் மெய்ப்பொருள் தேடு
ஒவ்வொரு சொல்லிலும் உண்மையைத் தேடு
உண்மைத் தன்மைதான் உலகில் நிலைக்கும்
எவ்வவ் வாறோ எவர்சொன் னாலும்
என்றும் உண்மைதான் நிலைத்து நிற்கும்.

426) எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு.
உலகத் தோடு ஒட்ட ஒழுக
உயர்ந்தோர் வாழ்க்கையை உற்று நோக்கு
உலகில் உயர்ந்தோர் வாழும் வாழ்க்கையை
ஒட்டி வாழ்வதே உயர்வினை நல்கும்.
அறிவு என்பது அறிஞர் வாழ்க்கையின்
அகலம் நீளம் அறிந்துபின் பற்றுதல்
செறிவாய் வாழ்வதே சிறப்பினை நல்கும்
சேர்ந்து பழகுவோம் உயர்ந்தோர் வழியை.

428) அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்.
அஞ்ச வேண்டிய வேளையில் யாரும்
அஞ்சி நடப்பதே அறிவின் முதிர்ச்சி
அஞ்சேன் எதற்கும் எனமறம் பேசுதல்
அஞ்சாமை அல்ல ஆளையே சாய்த்திடும்
தன்னையே அழிக்கும் தாக்குதல் நேர்கையில்
தயக்கமாய்ப் பதுங்கி ஒதுங்குவது அறிவு
தன்னையும் மிஞ்சும் தகுதியை அறிவால்
தசம்பிரித் தறிந்து விலகுதல் ஆற்றல்.

# திருமந்திரச் சுவை – 48

## முத்தி நிலை



பூங்குன்றம் இராமசாமி

தற்பதம் என்பது, 'சீவன், சிவன் என்கிற வேற்றுமை கடந்து இரண்டும் கலந்த, ஒன்றுபட்ட தற்சிவ நிலை'.

இக்கருத்தையே வேறொரு பாடலில் அவரே கூறுகிறார்.

தானென்று அவனென்று இரண்டாகும் தத்துவம்
தானென்று அவனென்று இரண்டும் தனிற்கண்டு
தானென்ற பூவை அவனடி சாத்தினால்
நானென்று அவனென்கை நல்லதொன் றன்றே (10.1607)

'தான் என்கிற ஆன்மாவும், அவன் என்கிற இறையும் என்றும் உள்ள இரண்டு பொருள்கள்' என்பது தத்துவம். அவ்வேறுபாடு இன்றி, தன்னில் இரண்டையும் கண்டு, ஆன்மா என்ற மலரைச் சிவனடியில் சாத்தினால் இரண்டையும் ஒன்றாக உணரலாம். அந்நிலையில், 'நான், அவன்' என்று வேறுபடுத்தல் நல்லதன்று.

இஃது அனுபவ நிலை, மேனிலை! தன் அறிவால் 'தான் என்று ஒன்று இல்லை' என்பதை உணர வேண்டும். அப்போது, 'தான்' என்ற உணர்வு அற்றுப்போகும். பின், தன் சிற்றறிவையும் சிவப்பேரறிவோடு ஒன்றுவித்து மகிழ வேண்டும். தன் சிற்றறிவால் தன்னையும், இறையையும் 'பிரித்து' அறிதல் கீழ்நிலை.

இப்பாடல் 'ஞாதுரு (அறிபவன்), ஞானம் (அறிவு), ஞேயம் (அறியப்படும் பொருள்)' என்னும் தலைப்பில் வருகிறது. மூன்றையும் ஒன்றாய் உணர்தல் 'திரிபுடி ஞானம்' எனப்படும். ✶

முத்தி நிலை என்பது எது?

இனிப் பிறவாது, உயிர் இறையோடு கூடி இறைப் பேரின்பத்தை அனுபவித்தலே முத்தி நிலை (வீடு பேறு) என்பது. அதுதான் மேனிலை.

நம்மிடத்து உள்ள பாசத்தை விடுதலும் இறையைப் பெறுதலுமே வீடுபேறு. அதனைப் பெறத்தான் நாம் வாழ்கிறோம்! அதுதான் நம் வாழ்வின் இலக்கும், எல்லையும். அதுவே நாம் பெறும் பேறு! (சுடு 'சூடு' என்றும், படு 'பாடு' என்றும், வருதல் போல, விடு 'வீடு' என்றும் பெறு 'பேறு' என்றும் வந்துள்ளன.)

ஆயினும், உயிர், இறை என்ற இரு பொருள்களும் இரண்டாக, வேறு வேறாக இருக்கும் வரை இறைப் பேரின்பம் கிட்டாது. உயிர் இறையோடு இணைந்து, தன்னை மறந்து ஒன்றாகும் போதே இறைப் பேரின்பத்தினை உயிரால் அனுபவிக்க முடியும்.

இதனைத் திருமூலர் வாக்காகக் காண்போம்.

நானென்றுந் தானென்றும் நாடிநான் சாரவே
தானென்று நானென்று இரண்டிலாத் தற்பதம்
தானென்று நானென்ற தத்துவம் நல்கலால்
தானென்று நானென்றுஞ் சாற்றகில் லேனே (10.1441)

'அறிபவனாகிய நான்' எனவும், 'அறியப்படும் பொருள் சிவம்' எனவும் 'இருபொருள்' என ஆராய்ந்து சிவத்தைச் சார்ந்தேன். ஆனால், அவ் இறையோ தற்சிவமாகி (சிவன், சீவன் இரண்டும் ஒற்றித்த நிலையை) ஒன்றென உணர்த்தி விட்டான். ஆதலால், அடியேன், 'அறியும் பொருள், அறியப்படும் பொருள்' எனப் பிரித்தறிய இயலாப் பெருநிலையை எய்திவிட்டேன்.

தேவகோட்டை அரு.லெட்சுமணன்
(அலெக்ஸ்)



# இராம காவியம்

## வீடணன் ராமனிடம் அடைக்கலம் - 19(அ)

எரிந்த இலங்கையை எழில் பெறச் செய்து
விரிந்த நாட்டை மயன் வளம் பெறச் செய்தான்.
தான் செய்த பாவத்தை சரி செய்ய எண்ணாது
வீண் பழி ஏற்பதை விரும்பியே ராவணன்
சபையை கூட்டினான் ராமனை எதிர்க்க.
அவையில் உள்ளோர் அனைவரும் மறுத்தனர்
மன்னனை போற்றும் மரபுடை தலைவர்கள்
போரிடச் செல்வதே போற்றுதல் என்றனர்.
தகப்பன் சாமி போல் இந்திரஜித்
தந்தைக்கு சொன்னான்
அகப்பையில் எடுத்தால் இருப்பதே வரும்
செய்த தவற்றை சீர் செய்தல் நன்று; போர்
செய்ய வேண்டுமெனில் நானே போதும்
கை முள் எடுக்க விரல் நகம் போதும்.
கும்பகர்ணன் அண்ணனை வணங்கி சொன்னான்
சீதையை சிறை கொண்டது பெருந்தவறு
அதனிலும் தவறு அடைய நினைப்பது
ராமனிடம் அடைக்கலம் கொண்டு
அன்னையை விடலே நன்று. விவேகமும் கூட,
வீரம் பேசுதல் விடை என்று எண்ணினால்
பேரம் பேசாது பெரும் படையுடன்
போர் செய்யப் போவது புகழே என்றான்.
வீடணன் ராவணன் விரும்பாததையே சொன்னான்
இலங்கையை சுட்டது குரங்கு அல்ல
இலக்குவன்அண்ணி கற்பின் சுடரே
சுயநலம் கருதி ஊரை எரிப்பதும்
உற்றார் மற்றார் மக்களை அழிப்பதும்
முறையற்ற செயல் வேண்டாம் என்றான்
மாற்றான் மனைவியை கொண்டு விடு
மன்னிப்பு கேள் ராமனிடம் என்றான்
ராவணன் கோபம் எல்லையை கடந்தது
இனத்துரோகி இல்லாமல் போ என்றான்
கும்பகர்ணன் ராவணன் கூடவே இருந்தான்
உடன்பிறந்த பாவம் போக உயிர் துறக்க
முடிவு செய்தான்
தர்மமே வெல்லும் என்று ராமனை
தலைவனாய் ஏற்று பின்னால்
நாட்டையும் காக்க எண்ணி வீடணன் புறப்பட்டான
அடைக்கலம் வந்தவனை அன்புடன் ஏற்றான் ராமன்.
அரசாளும் ஆசையில் அவன் வந்தானோ!
அண்ணனின் தீச்செயல் புரிந்ததால் வந்தானோ!
தர்மத்தின் வழியில் நடக்க வந்தானோ!
ராமனால் முத்தி அடைய வந்தானோ!
எதுவாயினும் நல்லவன் கெட்டவன் என்பது இல்லை
தஞ்சம் வந்தவன்: காப்பது கடமை.
அனுமன் சொன்ன செய்தி அனைத்தும்
சத்தியம் என்று கொண்டான் ராமன்
அறுவரோடு ஒருவராய் கூட்டி எழுவரானான்
கூட இருந்தவன் குழி பறிப்ப தென்றாலும்
தவறொன்றும் இல்லை தர்மம் காக்க.

## போர் படை விரைதல் - (20)

வானர படைகள் விரைந்து நடந்தன
அங்கதன் தலைமையில் அழகாய் தொடர்ந்தன
இலங்கையை நோக்கி வெற்றியைத் தேடி
வினைகளை களைய, வீரமாய் நடந்தனர்.
ராமா இலக்குவர் முன்னே நடக்க
சுக்ரீவன் வீடணன் பின்னே தொடர
அனைத்து படைகளும் ஒருங்கே இணைந்தன
எதிரி நாட்டினை இலங்கையை அடைந்தனர்.
பெரிதாய் குன்று விரிந்து இருக்க
குடில்கள் அமைத்து அனைவரும் தங்கினர்.
குன்றில் நின்று குனிந்து பார்த்தால்
ஊரே தெரிந்தது அழகாய் இருந்தது.
சிங்களப்புரி எனும் சீரிய நகரம்
மங்களம் இழந்து மறையப் போவதை
எங்கும் உள்ளோர் அறியும் முன்னர்
அங்கதன் முதலோர் அறிந்து கொண்டனர்.
ராவணன் ஒற்றர் நடமாடி திரிவதை
வீடணன் கண்டான் விரைந்து பிடித்தான்.
ராமன் அவர்களை அன்புடன் பார்த்து
போரை தவிர்த்து அடைக்கலம் வந்தால்
ஊரும் தப்பும் உயிர்வதை மிஞ்சும்
உங்கள் மன்னவன் உயிருடன் இருப்பான்
இலங்கையும் தப்பும் எழிலுடன் இருக்கும்
இங்கே நடந்ததை, எங்களின் புகழை,
அங்கு மன்னர் அறியும்படி சொல்ல
தூதனாய் அவர்களை அனுப்பியும் வைத்தான்.

(தொடரும்)



# நகரத்தார் சிகரத்தார் 116



காரைக்குடி நாராயணன்

சோதிடர் வள்ளுவதாசன் மனதில் தியானித்துப் பிரார்த்தனை செய்தார். அங்கு இருந்த குடும்பத்தினர் அனைவருக்கும் மனதில் குழப்பமும், பயமும் ஏற்பட்டது. ஒரு திகில் திரைப்படத்தைப் பார்க்கும் போது மனம் படபடவென்று அடிப்பது போல் அந்தக் கடினமான நிமிடங்கள் சிறிதும் நகராமல் நின்று விட்டன. அவர் என்ன சொல்லப் போகிறார் என்ற நிலையில், மனதில் வேண்டாத தெய்வமில்லை. காரணம் ஒரே நாளில், ஒரே முகூர்த்தத்தில் நான்கு திருமணங்களில் ஒன்று நடக்காமல் போனால் ஊர் பேச ஆளாகி விடுவோமே என்று நினைத்தார். சிறிது நேரத்தில் சோதிடர் கண் விழித்துப் பார்த்தார். பிறந்த குழந்தை கண் விழித்துப் பார்த்தது போல நினைத்து ஆச்சி பெருமூச்சு விட்டார்.

வள்ளுவதாசன் எதையோ சொல்ல வந்தவர், அதைச் சொல்லாமல் மறைத்து எதையோ சொன்னார்.

ஆச்சி, உங்க தம்பி திருச்சபையின் மகன் ரத்னசபாபதியைக் காலையில கண் விழிச்சதும் அவர் உள்ளங்கைகளைப் பார்க்கச் சொல்லுங்க.

கராக்ர வஸதே லக்ஷ்மி

கரமத்யே சரஸ்வதி கரமூலேது

கௌரீஸ்யாத் ப்ரபாதேகர தர்சனம்

அங்கிருந்த யாருக்கும் ஒன்றும் புரியவில்லை. அவர் வாலை விட்டுவிட்டுத் தும்பைப் பிடிப்பது போல, அதற்கு விளக்கம் சொன்னார்.

விரல்களின் நுனியில் மகாலட்சுமியும், உள்ளங்கையில் சரசுவதியும், கீழ்மணிக்கட்டில் பார்வதியும் இருப்பதாக ஐதீகம். கண் விழித்ததும் முப்பெரும் தேவியரைத் தரிசிப்பதால் வரப்போகும் வினைகள் வராமல் விலகும்.

ஆச்சி பொறுமை இழந்து பேசினார்.

இத பாருங்க அய்யா, காக்காய்க்கு ஒரு கல்லு. கவலைக்கு ஒரு சொல்லு. சுத்தி வளைச்சுச் சொல்லாதீங்க. எதுவாருந்தாலும் சொல்லுங்க.

சோதிடர் வள்ளுவதாசன் பெருமூச்சு விட்டபடி சொன்னார்.

ஆச்சி. உங்க சாமி வீட்ல விளக்கேத்தி வைங்க. என் மனசுல முருகன் இருந்து சொல்றதை நான் சொல்லிடுறேன்.

ஆச்சி போவதற்குள் இதைக் கேட்ட செட்டியார் வேகமாகச் சென்று சாமி வீட்டுக் கதவைத் திறந்தார். உள்ளே இருந்து ஒரு குட்டிப் பூனை அவர் காலில் விழுந்து கத்திக் கொண்டே ஓடியது. செட்டியார் கிணற்றுத் தண்ணீரை இறைத்துத் தன் கால்களில் ஊற்றிக் கொண்டு வந்தார். ஆச்சி தவிப்புடன் கேட்டார்.

சாமி வீட்டுக்குள்ளே எப்படிப் பூனை வந்துது. இதுவரைக்கும் ஒரு எறும்பு கூட வந்ததில்லையே.

சிகப்பி, சோதிடரை அவர் வீட்டுல கொண்டு போய் விட்டுட்டு வரச்சொல்லு.

பேசாம இருங்க. உங்களுக்கு ஒன்னும் தெரியாது. காய்த்த மரத்தில் கல்லடிபடும். காய்க்காத மரத்தில் கோடரிபடும். ஒன்னு வெயில்ல காயணும். இல்லே மழையில நனையணும். அதுவுமில்லாம இதுவுமில்லாமே அந்தரத்தில தொங்கக் கூடாது. சோதிடரே எதுவா இருந்தாலும் சொல்லுங்க. தரையில எழுதுன எழுத்தை அழிச்சிடலாம். தலையில பிரம்மன் எழுதுன எழுத்தை யாராலேயும் அழிக்க முடியாது. எதுவா இருந்தாலும் சொல்லுங்க.

இதை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ராஜ்மோகன் மிகவும் தவித்தார். எல்லாம் கூடிவரும் நேரம். கொள்ளை போன கதையானதே என்று வேதனைப்பட்டார். சோதிடர் சொல்ல முடியாமல் சொன்னார்.

ஆச்சி. மாதா பிதா செய்த பாவம் மக்களை வந்து சேரும்பாங்க. ஒரு மிகப்பெரிய செல்வந்தர். எல்லாம் இருந்தும், பிள்ளையில்லை. ஊரில் நல்ல பேரும் இல்லை. கொஞ்சமும் நிம்மதி இல்லை. ஒரு ஞானியைச் சந்திச்சுத் தன் குடும்பம் செஞ்ச பாவங்கள் தீரணும். ஆசிர்வாதம் பண்ணுங்கன்னார். அந்த ஞானி அவரிடம் உன்னால் முடிந்த அளவு தினமும் நூற்றுக்கணக்கானவர்களுக்கு அன்னதானம் செய். எந்தப் பரதேசி கையில் அன்னத்தை எடுக்கும் போது, உன் வீட்டு வாசலில் உள்ள கோவில் மணி அடிக்குறதோ அவரிடம் ஆசிர்வாதம் வாங்கு. உன் பாவங்கள் தீர்ந்து உன் பரம்பரை உண்டாகும் என்றார். உடனே எதிரே இருந்த மண்டபத்தில் பல

மாதங்கள் எத்தனையோ ஆயிரம் பேர்களுக்கு அன்னதானம் செஞ்சாரு. ஆனால், அந்தக் கோயில் மணி தானா அடிக்கலே. செல்வந்தர் தன் குடும்பம் செஞ்ச பாவம் தொலையலேயேன்னு அழுதாரு. அடுத்த நாள் ஒரு துறவி அந்த மண்டபத்துக்கு வந்து ரொம்பப் பசிக்குது. கொஞ்சம் சாதம் போடப்பான்னு அங்கே இருந்தவங்களை எல்லாம் கேட்டாரு. இது சாப்பாடு போடுற நேரமில்லை. அப்புறம் வான்னு அந்தத் துறவியை சத்தம் போட்டு விரட்டிட்டாங்க. அவருக்கோ பசி கண்ணை மறைச்சுது. அங்கே சாதம் வடிச்ச கஞ்சித் தண்ணியை அங்கே இருந்த வாய்க்கால்ல ஊத்துனாங்க. அதைப் பாத்த துறவி பசி பொறுக்காம அந்தச் சுடுற வடிச்ச தண்ணியைக் கையில எடுத்துக் குடிச்சாரு. அடுத்த நொடியே அந்தக் கோயில் மணி டாண்டாண்ணு அடிச்சுது. அதைக் கேட்ட செல்வந்தர் ஓடி வந்து அந்தத் துறவி கால்ல விழுந்து என் குடும்பம் செஞ்ச பாவங்களை எல்லாம் மன்னிச்சு ஆசிர்வாதம் பண்ணுங்கன்னாரு. அந்தத் துறவி ஆசிர்வாதம் பண்ணுனாரு. அவரு யாரு தெரியுமா. பல ஆயிரம் கோடிச் சொத்துக்களோட தங்க டம்ளர்ல பால் குடிச்சு, வெள்ளிக் கும்பாவுல சோறு சாப்பிட்டு, ஒரு சொல்லுக்காக எல்லாத்தையும் வேண்டாம்னு தூக்கி எறிஞ்சிட்டு கந்தல் துணியோட துறவறம் பூண்ட உங்க நகரத்தார் கடவுள் பட்டினத்தார் தான்.

அங்கே இருந்த அயல்நாட்டுக் குழந்தைகளுக்குப் பட்டினத்தார் யார் என்றே தெரியவில்லை. ஒரு மிக உயர்ந்த சமூகம் புதை மணலுக்குள் போவதைப் பற்றி அவர்கள் ஏன் கவலைப்பட வேண்டும்?

ஆச்சி புரியாமல் கேட்டார்.

மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும் ஏன் முடிச்சுப் போடுறீங்க.

ஆச்சி புரிஞ்சுதான் சொல்றேன். இதை நான் சொல்லலே. எனக்குள்ள இருக்குற முருகன் சொல்றான். காவேரிப்பூம்பட்டினத்துக்குப் போயி கடல்ல குளிச்சிட்டு பட்டினத்தாரைக் கும்பிட்டு வரச்சொல்லுங்க. தடைபட்ட நல்ல காரியம் நடக்கும். இல்லேன்னா உங்க தம்பி மகன் ரத்னசபாபதிக்குக் கல்யாணம் நடக்காது. அவனும் பட்டினத்தார் மாதிரித் துறவியாயிடுவான்.

அங்கு இதைக் கேட்ட எல்லோரக்கும் தூக்கி வாரிப் போட்டது. ஆச்சி மனதில் ஜானகி அய்த்தியாண்டி கண் கலங்கிச் சொன்னது நினைவுக்கு வந்தது.

சிகப்பி அண்ணமுண்டி உங்க வீட்டுல எல்லாப் பிள்ளைகளும் அயல்நாட்டுலேருந்து வந்திட்டாங்க. என் பொண்ணு பரிபூர்ணத்தை உங்க தம்பி மகன் ரத்னசபாபதி கட்டிக்குவானா. நான் என் புருஷன் சரியில்லாம. என் பொண்ணுங்களைக் கட்டிக் கொடுக்குறதுக்குள்ள அறுந்த நூலாப் போனேன். அடகுபிடிக்கந்தையாப் போனேன். தயவு செஞ்சு எல்லா ஏற்பாடும் பண்ணுனதுக்கப்புறம் அவன் மாட்டேன்னு சொல்லிட்டான்னு மட்டும் சொல்லிடாதீங்க. அப்புறம் நாங்க ரெண்டு பேரும்......

சிகப்பி ஆச்சி கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் முகத்தில் வழிந்தது. அதைப் பார்த்த சோதிடர் ஏன் இங்கு வந்தோம் என்று நினைத்தார். அவர் பணத்துக்குச் சோதிடம் சொல்பவர் இல்லை. தெய்வ அருளால் நன்மை தீமைகளைச் சொல்வார்.

ஆச்சி அப்போ நான் புறப்படுறேன்.

பலகாரம் சாப்பிட்டுப் போகலாம். குட்டி சீக்கிரம் எடுத்துவை.

ஆச்சி. என் முருகன் நல்லது சொன்னா இந்நேரம் கேட்டு வாங்கிச் சாப்பிட்டிருப்பேன். நல்லது நடக்கட்டும். கல்யாணச் சாப்பாடே சாப்பிடுறேன்.

வள்ளுவதாசன் அய்யா. ஜானகி அய்த்தியாண்டிக்கு என்ன பதில் சொல்லுவேன்,

வள்ளுவதாசன் கண்களை மூடிச் சில நொடிகள் தியானித்து விட்டுச் சொன்னார்.

ஆச்சி. வரப்போற அட்சய திருதியை அன்னைக்கு உங்க கையால ஒரு மாங்கல்யம் வாங்கி அந்தப் பொண்ணு கையில கொடுங்க.

அப்படி வாங்கிக் கொடுத்தா அந்தப் பொண்ணுக்கு வேற எங்கேயாவது கல்யாணம் நடக்கும்.

செட்டியார் ஏமாற்றத்துடன் ஆச்சியைப் பார்த்தார். வள்ளுவதாசன் ஆச்சிக்கு நம்பிக்கை வருவதற்காக அட்சய திருதியையின் பெருமையைக் கூறினார்.

அட்சய திருதியை அன்று தான் கிருதயுகம் பிறந்தது. கங்கை பூமியை முதன் முதலில் அன்றுதான் தொட்டது. பாண்டவர் வனவாச காலத்தில் அட்சய பாத்திரம் பெற்றது. சிவபெருமான் அன்னபூரணியிடம் பிட்சாடனராக யாசகம் பெற்றது. பகவான் பரசுராமர் அவதரித்தது. ஆதிசங்கரர் கனகாதாரா ஸ்தோத்திரம் பெற்ற நாள். குபேரன் இழந்த செல்வங்களை மீட்ட நாள். வியாசர் மகாபாரதம் எழுத ஆரம்பித்த நாள். குசேலர் கிருஷ்ண பகவானைச் சந்தித்த நாள். அன்னபூரணி அவதரித்த நாள்.

ஆச்சி விரக்தியுடன் பேசினார்.

யானைக்குக் கரும்புத் தோட்டம் வேணும். எறும்புக்கு அதோட சக்கை போதும்ங்குற கதையாகிப் போச்சு.

ஆச்சி, விக்கி அழ ஆரம்பித்தாள். இதைப் பார்த்த பேரன் பெரியண்ணன் அவனுக்குப் புரியாத நிலையில் வள்ளுவதாசனை முறைத்துப் பார்த்துச் சொன்னான்.

நீங்க ஏன் இங்கே வந்தீங்க. எங்க ஆயாவை அழ வைக்க வந்தீங்களா.

ஆச்சி, கோபமாகப் பெரியண்ணனைப் பக்கத்தில் இழுத்து அணைத்துக் கொண்டு பேசினார்.

GIVE RESPECT TO ELDERS.
WHY YOU DON'T LIKE HIM
NO YOU SHOULD NOT LIKE THIS
IF WE UNDERSTAND PEOPLE EVERYONE IS OURS.

வள்ளுவதாசன் பெரியண்ணனைத் தட்டிக் கொடுத்துவிட்டுப் புறப்பட்டார். ஆச்சி அவரை வழியனுப்ப வாசலுக்கு வந்தார். அங்கே ரத்னசபாபதி நின்று கொண்டிருந்தான். உடனே வள்ளுவதாசனை அறிமுகம் செய்ய ஆச்சி ரத்னசபாபதியிடம் பேசப் போனார். அவனோ முகம் கொடுத்துப் பேசாமல் வீட்டிற்குள் போனான்.

(தொடரும்)



# பக்.. பக்.. பக்கும்

சிறுகூடல்பட்டி முத்துக்கருப்பன்



நகர்ப்புற அப்பார்ட்மென்ட்களில், ஓ.டி.எஸ் (OTS) இடைவெளியிலோ, ஜன்னல் விளிம்புகளிலோ குடும்பம் நடத்திக் கொண்டு, காலைச் சூரியன் கண்விழிக்கும் போது தாங்களும் கண்விழித்து, தாயும், தகப்பனும், குஞ்சும் குளுவானுமாக, "கும்ரு.. கும்ரு" வென்று தங்களுக்குள் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருக்கும் புறாக் குடும்பங்களைப் பார்க்கும் போது, 'நாமும் புறாக்களாகப் பிறந்திருக்கலாமே!' என்ற ஏக்கம் நம் ஆழ்மனதில் எழுகிறதில்லையா?

### மனிதகுலத்தின் சினேகிதன்:

இன்றல்ல, நேற்றல்ல! 7000 வருடங்களுக்கு முன்னமே புறா என்கிற பறவை மனித இனத்தை நேசிக்கத் தொடங்கி விட்டது. ஆனால், அதே தோழமை உணர்வை மனிதர்கள் புறாக்களிடம் காட்டவில்லை.

ஆமாம், புறாக் கறி ரொம்ப ருசியாக இருக்கிறது என்கிற காரணத்துக்காகத்தான் முதன் முதலாக மெசபடோமியாக்காரர்கள் புறாக்களை வளர்த்தார்கள். போகப் போகத்தான் புறாவின் மேலான அறிவு என்ன என்பதெல்லாம் மனிதர்களுக்குத் தெரிய வந்தது. 1300 மைல் தாண்டிக் கொண்டு போய் விட்டு வந்தாலும், தான் எங்கிருந்து வந்தோம் என்ற திசை அறிந்து, வழி தெரிந்து திரும்பி வந்து விடும் 'திசை அறியும் திறமை' (Navigational skill) புறாவுக்கு அதிசயிக்கத் தக்க அளவுக்கு இருந்தது மனிதர்களுக்குத் தெரிந்தது.

### மனித இனத்தின் தூதுவன்:

அந்த நாளில் தொலைதூரத்துக்குச் செய்தி அனுப்புவதற்கு மனிதர்களைத் தான் பயன்படுத்தினார்கள். அவர்கள் போகும் வழியில் ஆபத்துகளில் சிக்கினாலும் சிக்கியதுதான். நோயில் படுத்தாலும் படுத்ததுதான். செய்திகளைத் தொலைத்தாலும் தொலைத்ததுதான். எதிரிகளுக்கு விலை போனாலும் போனதுதான். செய்திகள் சேர வேண்டிய இடத்தில் சேராது.

அதனால் ரோம், எகிப்து தேசங்களில் நாட்டுக்கு நாடு, மன்னருக்கு மன்னர் சேதி அனுப்ப, புறாக்களைப் பழக்கி, தூதுவர்கள் ஆக்கினார்கள்.

### செய்தி சுமந்த சேவகன்:

முதலில் புறாவைச் சிறு வயதிலேயே உயரமான கோபுரத்தில் ஏற்றி வைத்து வளர்ப்பார்கள். அது சுற்றிச் சுற்றிப் பார்த்து, தன் இருப்பிடத்தை நன்கு புரிந்து வைத்துக் கொள்ளும். பிறகு அதை ஒரு கூண்டில் அடைத்து. எங்கிருந்து சேதி அனுப்ப வேண்டுமோ அங்கு கொண்டு சென்று விடுவார்கள். அங்கு அனுப்ப வேண்டிய செய்தியை ஒரு காகிதத்தில் எழுதி, தாயத்து ஒன்றில் அடைத்து புறாவின் காலிலோ, கழுத்திலோ கட்டி, புறாவை அனுப்பி வைப்பார்கள். அது அந்த இடத்தில் இருந்து, தன் இருப்பிடத்திற்குச் செல்லும் வழியை யூகித்து, யூகித்து வேகமாகப் பறந்து, செய்தியோடு வந்து சேரும்.



### அதிசய ஆற்றல்:

கடல் கடந்து, மலை கடந்து, காடுகளைக் கடந்து நெடுந்தொலைவில் உள்ள புதிய இடங்களுக்குக் கொண்டு போய் விட்டு வந்தாலும் புறா இருப்பிடத்துக்கு வந்து விடும்.

இப்படி ஓர் அசாத்திய சக்தி இந்தப் புறாவுக்கு எப்படி வந்தது என்று நிறையப் பேர் ஆராய்ச்சியில் இறங்கினார்கள். இந்த ஆராய்ச்சிகளின் விளைவாகக் கீழ்க்கண்ட விஷயங்கள் தெரிய வந்தன:

### இருப்பிடத்தை நோக்கி:

புறாவைச் சிறு வயதில் இருந்தே ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைத்து வளர்த்தால் அந்த இடத்தின் சுற்றுப் புறத்தை நன்கு கவனித்து, அதைத் தன் இருப்பிடமாகப் புரிந்து கொள்கிறது. பிற்பாடு அந்தப் புறாவை வேறு எங்கு கொண்டு போய் வைத்து விடுவித்தாலும், தன்



இருப்பிடத்தை நோக்கித் தன்னிச்சையாகப் பறந்து வரும். மனிதர்களைப் போல் வரும் வழியை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய தேவையே இருக்காது.

புறாக்களுக்குக் கீழ்க்கண்ட அறிவுகள் இருப்பதுதான் இந்த அதிசயமான ஆற்றலுக்குக் காரணம்:

**திசைகளைப் பற்றிய அறிவு:**

புறாக்களுக்குத் திசைகளைப் பற்றிய புரிதல் மிகக் கூர்மையாக இருக்கிறது. உயரத்தில் பறந்து கொண்டிருக்கும்போதும், கிழக்கு எது, மேற்கு எது, வடக்கு எது, தெற்கு எது என்று புறாவுக்கு நன்கு தெரியும். அதனால் எங்கிருந்து புறப்பட்டாலும் தன் இருப்பிடம் எந்தத் திசையில் இருக்கிறது என்பதை உணர்ந்து அந்தத் திசையிலேயே பறந்து வர முடிகிறது.

**வரைபடம் – திசைகாட்டி நுட்பம்:**

இதற்கு “வரைபடம் – திசை காட்டி” நுட்பம் (Map and Compass Technique) என்று ஆய்வாளர்கள் பெயர் இட்டிருக்கிறார்கள்.

**பூமியின் காந்த சக்தி:**

பூமியின் மேற்பரப்பில் புவி ஈர்ப்பு காந்த விசை இருக்கிறது. பூமிக்கு மேலே வானத்தில் பறந்து செல்லும் போது பூமியின் மேற்பரப்பில் ஒவ்வொரு இடத்திலும் காந்த சக்தியின் அளவு (Magnetic Field of the earth) எவ்வளவு இருக்கிறது என்று புறாவுக்குத் தெரியுமாம். அதை வைத்து இப்போது எப்படிப்பட்ட இடத்தில் இருக்கிறோம் என்பது புறாவுக்குத் தெரிந்து விடுமாம்.

**மூக்கின் மேல் இரும்புத் தூள்:**

புறாவின் மூக்கின் மேல் மிக நுண்ணிய இரும்புத் தூள்கள் ஒட்டி இருக்கின்றன. இந்தத் தூள்கள் பூமியின் காந்த சக்தியால் கவரப்பட்டு எப்போதும் பூமியின் வலது திசையை நோக்கியே திரும்பி இருக்குமாம். குறிப்பிட்ட நேரத்தில் எந்தத் திசையில் பறந்து கொண்டிருக்கிறோம் என்பதைப் புறா அறிய இதுவும் உதவுகிறது.

**வாசனை – ஒலி:**

இதை எல்லாம் விட வியப்பான செய்தி ஒன்றுண்டு. பூமியின் மேற்பரப்பில் ஒவ்வொரு இடத்திற்கும் பழக்கமான வாசனை அல்லது ஒலிக் கலவை (smell or sound) அமைந்திருக்கிறது. இரண்டு மூன்று முறை ஒரு குறிப்பிட்ட பாதையில் பறந்தாலே, புறாவுக்கு விரைவில் இந்த ஒலியும், வாசனையும் பரிச்சயம் ஆகிவிடும். அதனால் இருப்பிடத்துக்கு எவ்வளவு அருகாமையில் இருக்கிறோம் என்பது அதற்குப் புரிந்துவிடும்.

**பழக்கம்:**

புறப்படும் இடங்களுக்கும், சென்று சேர வேண்டிய இருப்பிடத்திற்கும் திரும்பத் திரும்பப் போய் வருவதால் சென்று வரும் வழிகள் புறாவுக்கு நன்கு பழகி விடும்.இவை எல்லாம் புறாவுக்கு இந்த அசாத்தியத் திறமையை வழங்கி இருக்கின்றன.

**புறா ஒரு போர்வீரன்:**

1870-களில் ஃபிரான்ஸ் நாட்டுக்கும், ரஷ்யாவுக்கும் போர் நடந்த சமயத்தில் புறாக்கள் செய்திகளைச் சுமந்து செல்லும் தூதுவர்களாகச் செயல்பட்டதாக வரலாற்றுக் குறிப்பு இருக்கிறது. ஆனால், நெடுந்தூரத் தூதுவர்களாகப் புறாக்களின் செல்வாக்கு உச்சம் தொட்டது எப்போது? முதல் உலகப் போர் (1914-1918) மற்றும் இரண்டாம் உலகப் போர் (1939-1945) காலங்களில்தான். அப்போது நல்ல உணவு, சுத்தமான இருப்பிடம் என்று புறாக்கள் ராஜ வாழ்க்கை வாழ்ந்தன.




போர் முனையில் எதிரி ராணுவத்தைப் பற்றிய ரகசியச் செய்திகளைச் சுமந்து கொண்டு பீரங்கி முழக்கங்களுக்கும், புகை மூட்டத்துக்கும் ஊடே லாவகமாகப் பறந்து சென்று, சேர்க்க வேண்டிய இடத்தில் செய்திகளைக் கொண்டு சேர்த்ததால், எத்தனையோ தாய்நாட்டு வீரர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கின்றன.

**டிக்கின் மெடல்:**

டிக்கின் மெடல் (Dickin Medal) என்பது இங்கிலாந்தில் ராணுவத்தில் சாதனைகள் புரிந்ததற்காக விலங்குகளுக்கு அளிக்கப்படும் மிக உயரிய விருது. இரண்டாம் உலகப் போரை ஒட்டி, 32 புறாக்கள் இந்த விருது பெற்றிருக்கின்றன.

சாதனை புரிந்த புறாக்களின் புகைப்படங்கள் அந்தக் காலத்தில் இராணுவ அலுவகங்களையும், இராணுவ அதிகாரிகளின் வீடுகளையும் அலங்கரித்தன. (தொடரும்)

# சிறுகூடல்பட்டியில் கவியரசர் கண்ணதாசன் மலர் வெளியீட்டு விழா



சிவகங்கை மாவட்டம், சிறுகூடல்பட்டியில் கவிஞர் கண்ணதாசனின் 99-ஆவது பிறந்த நாளையொட்டி, அவரது கவிதைத் தொகுப்புகள் அடங்கிய மலர் வெளியீட்டு விழா நடைபெற்றது. திருப்பத்தூர் எழுத்தாளர்கள் கூட்டமைப்புத் தலைவர் எஸ்.எல்.எஸ். பழனியப்பன் தலைமையில், பாரதி கலை இலக்கியக் கழகத் தலைவர் ஜெயச்சந்திரன் முன்னிலையில் விழாவின் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்ட கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன், கண்ணதாசனின் கவிதைத் தொகுப்புகள் அடங்கிய மலரை வெளியிட, தொழிலதிபர் வி. ராமநாதன், சேதுபாஸ்கரா, விவசாயக் கல்லூரி நிர்வாகி கந்தபழம், முனைவர் செந்தமிழ் பாவை ஆகியோர் பெற்றுக் கொண்டனர். கவிஞர்கள் சா.சீதாலட்சுமி, கே. ஜவஹர், அப்பச்சி சபாபதி, பழ.காந்தி, ரா.ஹேமமாலினி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மருத்துவர் பொ.சந்திரசேகரன், செ.மாணிக்கவாசகம், கா.மங்கலசுந்தரமூர்த்தி, கு.ரா.தேவி உலகராஜ் ஆகியோர் கலந்து கொண்ட கவியரங்கம் நடைபெற்றது. கே.எம்.எஸ்.தெய்வசிகாமணி, மருத்துவர் அகமதுமர்சூக், வர்த்தக சங்கத் தலைவர் எம்.அந்தோணிராஜ், நேஷனல் கேட்டரிங் கல்லூரித் தாளாளர் எஸ்.சையது ஆகியோருக்கு கவிஞர் கண்ணதாசன் விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் சுப்புராம், விராமதி மாணிக்கம், கவிஞர்கள், கட்டுரையாளர்கள், எழுத்தாளர்கள் கவியரசு பற்றாளர்கள் கலந்து கொண்டனர்.

# விரையாச்சிலையில் மருத்துவ முகாம்

புதுக்கோட்டை நகரத்தார் மகளிர் சங்கம், விரையாச்சிலை நகரத்தார் சங்கம், சென்னை கற்பக விநாயகா மருத்துவக் கல்லூரி மற்றும் கற்பக விநாயகா பல் மருத்துவக் கல்லூரிகள் இணைந்து 22.06.2025 அன்று விரயாச்சிலை கல்யாண முருகன் மகேஸ்வர பூஜை மண்டபத்தில் இலவச சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. முகாமில் 700-க்கும் அதிகமானோர் மருத்துவப் பரிசோதனை செய்து கொண்டார்கள். மருந்து,மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

– தகவல்: ஏஎன். சிதம்பரம், விரையாச்சிலை

# தமிழ்நாடு அறக்கட்டளை - அறிவிப்பு

“திருக்குறள் / திருவாசகம்” தொடர்பான ஆய்வாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில், தமிழ்நாடு அறக்கட்டளையின் சார்பில் “திருவாளர்கள் கந்தசாமி மாணிக்கம் மற்றும் பத்மாவதி மாணிக்கம்” கல்வித் திட்டத்தின் கீழ் (தலா ஒரு லட்சம் ரூபாய் மட்டும்) இரண்டு விருதுகள் வழங்கப்பட உள்ளன. ஆராய்ச்சியாளர்களைத் தேர்வு செய்வதற்கு உரிய விண்ணப்ப படிவங்கள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பிப்பதற்கு குறிப்பிட்ட படிவத்தினைத் தமிழ்நாடு அறக்கட்டளை இணைய தளத்திலிருந்து (www.tnfindia.org) பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி : தமிழ்நாடு அறக்கட்டளை, எண்.27, டெய்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை – 600 010 எனும் முகவரிக்கு 15.09.2025, திங்கட்கிழமைக்குள் வரப்பெற வேண்டும். 15.09.2025 மாலை 5.00 மணிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் கருதிப் பார்க்க ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு அறக்கட்டளை

# கண்டவராயன்பட்டியில் முதியோர் நலவாழ்வு மையம்



கண்டவராயன்பட்டியில் நகரத்தார் பொதுவில் கட்டப்பெற்ற முதியோர் நலவாழ்வு மையம் திறப்பு விழா 06.06.2025 அன்று நடைபெற்றது. நீதியரசர் ராஜகோபுரம் டாக்டர் மெ.சொக்கலிங்கம் அவர்கள் நலவாழ்வு மையத்தை திறந்து வைத்தார். சிறப்பு விருந்தினர்களாக தமிழ்நாடு கூட்டுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு KR.பெரியகருப்பன், தொழிலதிபர்கள் அபிராமி ராமநாதன், நல்லம்மை ராமநாதன் மற்றும் கிளாசிக் ஆதப்பன் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். முதியோர் நலவாழ்வு மைய பொறுப்பாளர்களும், நகரத்தார்களும் பெருமளவில் கலந்து கொண்டனர்.

# கோவையில் கண்ணதாசன் விழா


## காரைக்குடி நாராயணன் விருது பெற்றார்



ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் மற்றும் கோவை கண்ணதாசன் கழகம் இணைந்து கோவை கிக்கானி மேல்நிலைப்பள்ளி சரோஜினி நடராஜ் கலையரங்கத்தில் 22.06.2025 அன்று நடைபெற்ற 18 வது கண்ணதாசன் விழாவில் கலைத்துறையில் சிறந்த பங்களிப்பு செய்தமைக்காக திரு. காரைக்குடி நாராயணன் அவர்களுக்கு விருதும் ஒரு லட்ச ரூபாய் பொற்கிழியும் வழங்கபட்டது. விழாவில் படைப்பிலக்கியத் துறைக்கு திரு.சு.வேணுகோபால் அவர்களுக்கும் கவியரசர் தமிழ் பரப்பும் பணிக்காக சிறப்பு விருது இசைக்கவி ரமணன் அவர்களுக்கும் வழங்கப்பட்டது. இவ் விழாவிற்கு கோவை கங்கா மருத்துவமனை இயக்குனர் டாக்டர் எஸ். ராஜசபாபதி தலைமையேற்க, ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் தலைவர் திரு. ம.கிருஷ்ணன் முன்னிலை வகித்தார். விழா நிகழ்ச்சிகளை மரபின் மைந்தன் முத்தையா சிறப்பாக தொகுத்து வழங்கினார்.




Namadhu Chettinad Published and Printed by N.Avadaiappan on behalf of M/S Chettinad Print Media (P) Ltd., Printed at DOT LINE DATA, New No.3, Old No.2, 21st Avenue, Ashok Nagar, Chennai - 600 083 and Published from Chettinad Print Media (P) Ltd., Rani Seethai Hall Building, 603, Anna Salai, Chennai - 600 006. Editor : N.Avadaiappan


Chettinad
Sarvalokaa Education
International School
Activities that nurture
children
holistically
• Archery
• Theatre
• Dance
• Instrumental Music
• Taekwondo
• Chess
• Soccer
ADMISSIONS
OPEN
ENQUIRE
FOR
DETAILS
044 47429900
73 5872 1784
www.sarvalokaa.org
Cambridge Assessment
International Education

Posted at Egmore. RMS PATRIKA Channel Posted on 15-21 July - 2025
Namadhu Chettinad Tamil Monthly Regd. as Newspaper with RNI No.TNTAM / 2015 / 63956 Postal Registration No.TN/CH(C)583/2025-2027
Licensed to post without prepayment under WPP No.TN/PMG(CCR)/WPP-542/2025-2027 and published on first week of every month.

